Useful Vessel (TAMIL)

Dr.லில்லியன் ஸ்டான்லி

# பயனுள்ள பாத்திரம்



# பயனுள்ள பாத்திரம்

**Dr. Mrs. லில்லியன் ஸ்டான்லி, M.B.B.S., D.C.H.**
*மருத்துவ மிஷனரி*

*வெளியிடுவோர்:*
**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
8, church Colony, வேலூர் 632 006
தொலைபேசி : 0416-2242943, 2248943
<hq@bym-india.org>
www.bym-india.org

**USEFUL VESSEL** (TAMIL)

Copyright 1985 DR. LILIAN STANLEY

First Edition : February 1985
Second Edition : August 1996
Third Edition : January 2000
Fourth Edition : March 2007
This Edition : September 2011

Write for price list.
These books are available in several Indian vernaculars also.

*Printed at* :
The Orient Universal Print
Sivakasi 626 123

**உள்ளே...**

***அத்தியாயம்*** ***பக்கம்***


| | | |
|---|---|---|
| 1. | மனச்சாட்சி | 7 |
| 2. | பெருமையின் உருவம் | 12 |
| 3. | ஜெபத்தில் என் போராட்டங்கள் | 20 |
| 4. | இராப்பகல் இன்பம் | 27 |
| 5. | பெற்றோரைக் கனம்பண்ணுதல் | 35 |
| 6. | உங்கள் பிள்ளைகளோடு சிநேகமாயிருப்பது எப்படி | 42 |
| 7. | நேசிக்கப்படத்தக்கவராதல் | 48 |
| 8. | நான் ஆத்தும ஆதாயகியானது எப்படி | 53 |
| 9. | பாவிகளின் சிநேகிதன் | 59 |
| 10. | வளர்ந்து குழந்தையாக வாஞ்சிக்கிறேன்! | 65 |

# முன்னுரை

மகன் பிறப்பான் என்று ஏங்கிக் காத்திருந்த பெற்றோருக்கு ஏமாற்றமாய்ப் பிறந்த இரண்டாவது மகள் நான். பிறப்பிலேயே பாலுக்கு அலர்ஜி. அது சில ஆண்டுகளில் ஆஸ்துமாவானது. அதுவும் போதாதென்று குழந்தைப் பருவ நோய்களான தட்டம்மை, கக்குவான் போன்றவை பெற்றோரை இரவின் மேல் இரவாகக் கண்விழிக்க வைத்தன. ஆக்ஸிஜன் சிலிண்டரும் ஊசிகளும் வாழ்வில் இன்றியமையா இடம் பெற்றன.

என் வாழ்க்கையில் கடவுளுக்கு ஓர் உன்னத நோக்குண்டு என அம்மா கூறுவார்கள். அதை நம்பி உயிரைப் பற்றிக் கொண்டேன். கட்டுரைகளும் சொற்பொழிவுகளும் எழுதிக் கொடுப்பார்கள். அவற்றை அப்படியே மனனம் செய்து பள்ளியிலும் கல்லூரியிலும் பரிசுகளைப் பெற்றேன். வேதத்தை வாசிக்கவும் ஜெபிக்கவும் ஊக்குவிப்பார்கள். இன்று எனக்கிருக்கும் சிலாக்கியங்களும் வாய்ப்புகளும் அவர்களுக்கிருந்திருந்தால் புகழ் பெற்ற எழுத்தாளராயிருப்பாரென்பதில் எனக்கு ஐயமில்லை. ஆத்தும ஆதாயத்தில் இன்று நான் கடைபிடிப்பவை பல அவர்கள் செய்வது கண்டு கற்றவையே.

மறுபக்கத்தில், என் அப்பாவில் ஒரு முன்மாதிரியையும் தலைவனையும் கண்டேன். அதிகாலை 4 மணிக்கு எழுந்து ஜெபிப்பார். 5.30க்கு வயலை (பண்டிதர் தோட்டம்) மேற்பார்வையிடச் சென்று தனது மருத்துவமனையில் 7.30க்குச் சொல்லிவைத்தாற்போல் நிற்பார். சாயங்காலம் எங்களை பண்டிதர் தோட்டத்திற்காவது வேட்டைக்காவது தன்னோடு அழைத்துச் செல்வார். எங்களது விளையாட்டுச் சாமான்களெல்லாம் அவர்களே தனது ஆயுதங்களால் செய்து கொடுப்பவைதான். இரவு 8க்கு சாய்நாற்காலியில் உட்கார்ந்து கடந்தகால ஹாஸ்ய சம்பவங்களைச் சொல்லி எங்களை விழுந்து விழுந்து சிரிக்கச் செய்வார். ஆங்கிலப் புத்தகங்களை வாங்கிக் கொடுத்து வாசிக்க ஊக்குவிப்பார். தனது நோயாளிகள் மேல் அவர் காட்டின மனதுருக்கமும் ஏழைகள் மேல் கொண்டிருந்த கனிவும் என்னை அதிகமாய்ப் பாதித்தன.



இதையெல்லாம் பார்க்கும்போது கடவுள் நமது எதிர்காலத்தை மனதிற்கொண்டு எவ்விதம் நமது கடந்தகாலத்தை நுணுக்கமாய்த் திட்டமிடுகிறார் என எண்ணி வியக்கிறேன். திருமணத்திற்குப்பின் என் உடல்நிலை முன்னேறியது. இப்போது என் வயதிலுள்ள பலரைக் காட்டிலும் சுறுசுறுப்பாயிருக்கிறேன். தற்போது (2011) 91 மற்றும் 86 வயதில் இறைவனடி சேர்ந்த என் பெற்றோர் டாக்டர் முத்தையா பாண்டியன், திருமதி எப்சிபா பாண்டியன் அவர்களுக்காக தேவனை மகிமைப்படுத்தி இப்புத்தகத்தை அன்புடன் அவர்களுக்கு அர்ப்பணிக்கிறேன். ஒரு பெண் குழந்தை பிறந்ததற்காக பின்பு அவர்கள் களிகூர்ந்தார்கள்.

பலவீன பாண்டமான ஒவ்வொருவருக்கும், “அவர் கிருபை உங்களுக்குப் போதும்; உங்கள் பலவீனத்தில் அவர் பலம் பூரணமாய் விளங்கும்; நீங்களும் **பயனுள்ள பாத்திரமாக** முடியும்” என உறுதிகூறி உங்களை ஊக்குவிக்க இச்சந்தர்ப்பத்தைத் தழுவிக் கொள்ளுகிறேன்.

***லில்லியன்***

# 1
# மனச்சாட்சி

ஏன் பாவத்தில் அடிக்கடி விழுந்துவிடுகிறோம் என்று நீங்கள் குழம்பலாம். சிலர் பிசாசைப் பழிசாட்டுகின்றனர். சிலர் தேவன் கைவிட்டுவிட்டார் என்கின்றனர். சாத்தானா? தேவனா? நாம் தடுக்கிவிழக் காரணங்கள் பல இருந்தாலும் நம்மைப் பாவத்திலிருந்து பாதுகாக்க தேவன் போதுமான ஏதுக்களை அளித்துள்ளார். அதில் ஒன்றுதான் நமது மனச்சாட்சி.

### மகத்தான ஈவு

மனந்திரும்பிய நாளில் கிறிஸ்தவன் பெறும் மாபெரும் ஈவு கூரிய மனச்சாட்சி. முன்னே மகிழ்வாய்ச் செய்த பாவங்கள் இப்போது அவனை மனமடியச் செய்யும். இரட்சிப்பின் அனுபவத்திற்குப் பின் பாவமற்று வாழ்கிறான் என்று சொல்வதற்கில்லை; எனினும் முன்போலல்லாமல் இப்பொழுது பாவம் செய்யும் போதெல்லாம் மனச்சாட்சி அவனை வதைக்கிறது. மனச்சாட்சிக்கு கொடுக்க வேண்டிய இடத்தை வாழ்க்கையில் கொடுத்துவிட்டால் அவன் தடுமாற மாட்டான். தேவன் மனச்சாட்சி என்னும் உள்ளான சத்தத்தின் மூலமாகப் பேசுகிறார். நீதிமொழிகள் 20:27 மனச்சாட்சியைக் குறித்து இவ்விதம் கூறுகிறது: "மனிதனுடைய ஆவி (வேறு மொழியாக்கத்தில், மனச்சாட்சி) கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது; அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்." உங்கள் உள்ளத்திலுள்ளவைகள் உங்களுக்கே மறைந்திருக்கலாம். ஆனால் உங்கள் மனச்சாட்சிக்கு ஒளித்துக்கொள்ள முடியாது. ஆகவே மனச்சாட்சியை அசட்டை செய்யாதீர்கள். அடிக்கடி அதை அவித்து மழுங்கிப்போகச் செய்யாதிருங்கள்.

### நல்மனச்சாட்சி

வேத அகராதி ஒன்றில் மனச்சாட்சி என்பது இவ்விதம் விளக்கப்பட்டிருக்கிறது: "நமது சிந்தனைகள், சொற்கள், செயல்களின் சன்மார்க்கத் தரத்தைப் பகுத்தறியும் புலன். ஒருவரது நன்னடத்தையை



உணரவோ குற்றத்திற்காய்த் துக்கிக்கவோ அது அறிவுறுத்துகிறது. மனச்சாட்சி போதிக்கப்பட்டு பழக்குவிக்கப்படலாம்; நன்மை தீமை அறிய பயிற்சிக்கப்படலாம்; ஆனால் அதின் தூண்டுதல் தானாய் வருவது. நல்மனச்சாட்சி தன்னைக் குறித்து துக்கமற்றதும் வேண்டுமென்றே தவறிழைத்ததாக தன்னையே குற்றஞ்சாட்டிக் கொள்ளாததுமானதோர் மனச்சாட்சி (அப் 24:16)."

தேவனுக்கும் மனிதருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பவுல் பிரயாசப்பட்டுப் பழகியிருந்தார். உங்கள் மனச்சாட்சியை ஆண்டவருடைய வசனத்தின் ஒத்தாசையினால் பழக்குவித்து, அதற்குச் செவிகொடுத்து, அதின் ஆலோசனையை அசட்டை செய்யாமல் கீழ்ப்படிந்தால் நீங்கள் கிறிஸ்தவ வெற்றிப்பாதையில் முன்னேறிச் செல்வீர்கள். பல புதிய கிறிஸ்தவர்கள் தங்கள் மனச்சாட்சியை ஒருமுறை, இருமுறை, இன்னும் கூடுதலாகவே அசட்டை செய்ததால் அதின் சத்தம் அவர்களுக்குச் செவிடன் காதில் ஊதின சங்காகிவிட்டது.

### அடித்துக்கொள்ளும் மனச்சாட்சி

தாவீது தன் சகாக்களோடு குகைக்கருகில் ஒளிந்திருந்தபோது சவுல் அவனைத் தேடி வந்தார். தாவீதும் அவரது மனிதரும் அங்கிருந்ததை அறியாத சவுல் குகைக்குள் சென்றார். "உமக்கு சமயம் வாய்த்தது. உம் விருப்பப்படி செய்யும்படியாக சவுலை உம் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்று தேவன் உமக்கு வாக்களித்த நாள் இதுவே" என்று தாவீதின் நண்பர் அவனைத் தூண்டிவிட்டனர். தாவீது மெள்ளப்போய் சவுலின் சால்வைத் தொங்கலை அறுத்துக் கொண்டார். அதனால் அவரது "மனது அடித்துக்கொண்டது." அல்லது அவரது மனச்சாட்சி அடித்துக் கொண்டது. ஆகையால் அவரும் சவுலைக் கொல்லாமல் அவரது மனிதரும் சவுலுக்குத் தீங்கிழைக்காமல் பார்த்துக்கொண்டார். மனவிருப்பத்தின்படி சவுலைக் கொன்றுவிட்டு குற்றவுணர்வின்றிச் செல்ல அவருக்கு நியாயமான விளக்கங்கள் பல இருந்தன (1 சாமு 24).

### மனவிருப்பமா ? மனச்சாட்சியா ?

முதலாவதாக, சத்துருவைப் பழிவாங்கத் தாவீதின் கையில் அவரை ஒப்புக்கொடுப்பதாக தேவ வாக்குத்தத்தம் இருந்தது. சவுலைச் சாதாரணமாய்க் கொன்று போட்டு, தேவன் தம் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினாரென்று தேவனைப் போற்றி, தன் சத்துருக்களை மடங்கடித்தார் என்று பறைசாற்றித் திரியலாம். உலகம் அதை ஒத்துக்கொள்ளும்; அவரது தோழர் மகிழ்கொண்டாடியிருப்பர்; அவரது சத்துருக்கள் தலைகுனிந்திருப்பர். ஆனால்

அவரது மனச்சாட்சியோ அவரது வாழ்நாள் முழுவதும் அதை ஒத்துக் கொண்டிருக்கவே இருக்காது. இது தேவனது வேளையல்ல என்று அவர் எப்படி அறிந்தார்? தன் மனச்சாட்சிக்கு செவிசாய்த்ததினாலேயே!

இரண்டாவதாக, தாவீது சவுலைக் கொல்லும்படி தேடிச் செல்லாமல் சவுல் தானாகவே, அதுவும் தாவீதைக் கொல்லும்படி வந்து அவரது கரத்திலேயே விழுந்தார். இதைத் தெய்வீகத் தருணமாக தாவீது கருதியிருக்கலாம். தற்காப்புக்காகவே சவுலைக் கொன்றிருக்கலாம். நேரடிச் சாட்சிகள் இருந்தபடியால் தைரியமாக யாவருக்கும் அதையே காரணமாகக் கூறியிருக்கலாம். ஆனால் தன் உயிரையே பணயம்வைத்து தன் மனச்சாட்சிக்குக் கீழ்ப்படிந்தார். தன் கரத்தில் விழும்படி சவுலைக் கொண்டு வந்தது தேவனல்ல என்று தாவீதிற்குச் சொன்னது யார்? அது தெய்வீகத் திட்டமல்லவென்று மறுப்புக் கூறினது யார்? சவுலைத் தப்பவிட்டாலும் உம் ஜீவன் காக்கப்படும் என்று ஆறுதல்படுத்தியது யார்? தேவன் வானத் திலிருந்து அசரீரி வாக்குரைத்தாரோ? இல்லை. பேசினது அவரது மனச்சாட்சியே.

மூன்றாவதாக, அவரது மனிதர் அவரை ஏவிவிட்டனர், அது தாவீதின் மனப்போராட்டத்திற்கு ஒத்துப்பாடியதுபோலிருந்தது. தேவனது திட்டத்திற்குக் குறுக்குவழியில் வெற்றிபெற அவரது ஆத்துமா ஆவிக்குமேல் ஓங்கி நின்றது. இந்தச் சிநேகிதரை முழுக்க முழுக்க நம்பினதாலல்லவா தன்னோடு வைத்திருந்தார்? அவர்கள் அவனுக்கு நண்பரல்லவா? இதுவரை அவர்களை நம்பவில்லையா? இம்முறை நண்பரின் கூற்று நன்றன்று என்று உணர்த்தியது யார்? இத்தருணத்தில் தேவமக்களின் ஆலோசனையின்படி நடவாதிருக்க அவருக்கு ஆலோசனை அளித்தது யார்? அவரது கூரிய மனச்சாட்சியே! ஆகவே தன் மனவிருப்பத்திற்கு இணங்காமல் மனச்சாட்சிக்குக் கீழ்ப்படிந்தார்.

**சத்தம் கேட்கிறதா ?**

தாவீது கருக்குள்ள மனச்சாட்சியை உடையவராயிருந்தபடியால் "நான் பாவம் செய்யாதபடிக்குத் தடை பண்ணினார்" என்கிறார். பாவத்தில் விழாதபடி நம்மைக் காக்கும்படிக்கே மனச்சாட்சி என்னும் சாதனத்தை தேவன் நமக்களித்திருக்கிறார். புகைபிடிப்பது தவறா? சினிமா பார்ப்பது பாவமா? வேதத்தில் இப்படி எழுதியுள்ளதா? என்றெல்லாம் அடிக்கடி மக்கள் நம்மை வினவுகின்றனர். இப்படிப்பட்ட சந்தேகங்கள் எதுவும் எழும்பினால் சற்றே நின்று ஒரு நிமிடம் மனச்சாட்சியின் சத்தத்தை உன்னிப்பாய்க் கேட்டால் சற்றும் தயக்கமின்றி அது நீங்கள் செல்ல வேண்டிய சாலையைச் சுட்டிக்காட்டும்.



**வெட்டு ஒன்று துண்டு இரண்டு**

தாவீதைப்போன்ற சூழ்நிலைகளை சிலவேளை நாம் சந்திக்க நேருகிறது. கோடியில் தெரிந்த தேவவாக்கு வீட்டுவாசலைத் தேடி வந்துவிட்டது போலத் தெரிகிறது. கண்மூடிக் கண்திறக்கும் கணப்பொழுது தீர்மானத்தில் வாக்கு நிறைவேறிவிடும். ஆனால் நின்று மனச்சாட்சியின் ஒப்பந்தத்தை நாடுங்கள். அதோடு வாதாடி வெற்றி பெற முயலாமல், "ஆம்" "இல்லை" என்று மட்டும் சொல்லச் சொல்லுங்கள். ஆதாயம் மனக்கண்களை குருடாக்கிவிடும். ஆனால் இந்த ஏபோத்து, "இல்லை" அல்லது "வேண்டாம்" என்று சொல்லத் தயங்காது. இரத்தத்தினால் கழுவப்பட்ட மனச்சாட்சி விழிப்பாய்க் கேட்பவனிடம் பொய்யுரைப்பதேயில்லை.

**மனச்சாட்சியின் சிநேகிதராய் வாழுங்கள்**

மேலும், சிலவேளை சூழ்நிலைகள் தெளிவாய் தேவசித்தத்தைக் காண்பிப்பதுபோல் தெரிகிறது. இணங்கிவிட்டால் உலகில் எவரேனும் நீங்கள் செய்தது தவறெனக் கடுகளவும் சந்தேகப்படமாட்டார். தேவனுடைய கரமே அக்காரியத்தில் இருப்பது போலிருக்கிறது. சாட்சிகள் யாவும் உங்களுக்கே சான்று கூறுவதால் யாருக்கும் நிரூபிக்கத் தேவையில்லை. அப்படியே இருப்பினும் "ஆமென்று தலையசைப்பாயா?" என்று மனச்சாட்சியைக் கேட்கத் தவறிவிடாதீர்கள். ஏனெனில் புண்பட்ட மனச்சாட்சியோடு வாழ்வதைப் போன்ற கொடுமை வேறில்லை. கடந்தகாலக் கதையையே காட்டிக் காட்டி உங்களைக் குட்டிக்குட்டி வேதனையூட்டியூட்டி சமாதானத்தைத் தொலைத்துவிடுமது. மன்னிக்காத மாண்பு மனச்சாட்சியையே சாரும்! அதோடு சமாதானமாய் வாழ்ந்தால் பிழைத்தீர்கள். குறிப்பிட்ட வேளையில் குறிப்பிட்ட காரியம் தேவசித்தமா இல்லையா என உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டிவிடும் மனச்சாட்சி.

**கர்த்தரின் சத்தம்**

நெடுநாள் ஆவிக்குரிய ஆலோசகராக நமது நன்மையையே நாடும் நண்பரும் கூட நமது தீர்மானத்தை ஒத்துக்கொள்ளலாம். ஆனால் ஆலோசனைக் கர்த்தர், ஞானவான்களாகிய ஆலோசகர் மூலமாகப் பேசுவதைக் காட்டிலும், நமது ஆவியாகிய ஆலோசகர் மூலமாகவே பெரிதும் பேசுகிறார் என்பதை நாம் மறந்து போகக் கூடாது. வெளியான சத்தங்களையெல்லாம் சட்டைசெய்யாததால் அவர்களை மனம் நோகச் செய்யும் தைரியம் கொண்டு உள்ளான சத்தத்தின்படி நடக்கத் தீர்மானிப்பீர்களானால் சீக்கிரமாய் நீங்கள் செய்ததே சரியென தேவன் யாவர் முன்னிலையிலும் அம்பலமாக்குவார். பேச்சுரிமை கொடுத்துவிட்டால் மனச்சாட்சி செம்மையாய் வழி நடத்தும்.

**தேவசித்தம் காட்டும் மனச்சாட்சி**

பாவத்திலிருந்து காக்க மட்டுமல்ல, தேவனுடைய சித்தத்தில் நம்மைக் காத்துக்கொள்வதற்கும் மனச்சாட்சி உறுதுணையாகும். உறுத்தும் மனச்சாட்சி ஒநாய் தோல் போர்த்து வரும் ஆட்டுக்குட்டி. மனச்சமாதானத்தை இழந்து விட்டீர்களா? இருதலைக் கொள்ளி எறும்பாய்க் கலங்குகிறீர்களா? தீர்மானத்தின் பள்ளத்தாக்கில் தவிக்கிறீர்களா? கவலை வேண்டாம். ஆதாயமாய்த் தோன்றும் பலனுக்குக் கண்ணை மூடிக்கொள்ளுங்கள்; மனச்சாட்சியோடு போராடும் வாக்குவாதங்களுக்கு வாயை மூடிக் கொள்ளுங்கள்; வெளியுலக ஏவுதல்களுக்குச் செவியை அடைத்துக் கொள்ளுங்கள். தேவனை மனச்சாட்சியிடம் பேசும்படிக் கேளுங்கள். இதயத்தை அமரப்பண்ணி மனச்சாட்சியின் குரலைக் கூர்ந்து கவனியுங்கள். கேட்கிறதா? ஆம், நல்லது. அதுவேதான். எல்லா பயத்தையும் புறம்பே தள்ளிவிட்டு தேவன் மனச்சாட்சி மூலமாய்த் தந்த வழிநடத்துதலின்படியே செயல்படுங்கள். இதற்குச் சற்று மனவுரம் தேவை. ஆனால் மறுமுறை சுலபமாகி விடும். சீக்கிரமாய் தேவன் உங்கள் தீர்மானத்தைப் பகிரங்கமாய் ஆமோதிப்பார்.

இப்போதனையைத் தழுவிய ஒரு வசனத்தை மட்டும் கூறி முடிக்கிறேன்.

“கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்” (எபி 9:14).



# 2
# பெருமையின் உருவம்

பரிசுத்தமாகுதலின் பாதையில் தேவன் உடைக்கவேண்டிய பாறைகளில் மிகக் கடினமானது பெருமை என்றே சொல்லலாம். பரிசுத்தவானாகப் பக்குவப்படுத்தப்படும் ஆக்கத்தில் தன்னைத் தாழ்மையுள்ளவனென்று மன தார நம்பின எந்தக் கிறிஸ்தவனும் உண்மை நிலையை எப்பொழுதாவது சந்தித்தே தீருகிறான். பெருமையெனும் பெருந்திமிங்கலம் நமது ஆறடி உருவில் மறைந்திருக்க முடியாமல் சற்றும் எதிர்பாராத வேளையில் தன் விகாரத் தலையைத் தூக்கி விடும். தந்திரமான இக்குணம் தாழ்மையின் போர்வையைத் தரித்தும் வரும். இத்திமிங்கலத்தின் உடற்கூற்றை நுணுக்கமாய் அறிவோமானால் இதைக் கொன்று தீர்ப்பது எளிது. யோபு 41ஆம் அத்தியாயம் 34 ஆம் வசனத்தில் தேவன் இவ்விலங்கை அகங்காரமுள்ள ஜீவன்களுக் கெல்லாம் இராஜா எனக் குறிப்பிடுகிறார். இவ்வத்தியாயத்தை ஆராய்வது பெருமையின் பல்வேறு வெளிப்பாடுகளை அறிந்து நமது ஆத்துமாவைத் தற்காக்க ஏதுவாகும்.

**வச 1**

“லிவியாதானை தூண்டிலினால் பிடிக்கக்கூடுமோ? அதின் நாக்கை நீ விடுகிற கயிற்றினாலே பிடிக்கக் கூடுமோ?”

பெருமை அதிகாரத்திற்குக் கட்டுப்படாது. வீட்டிலோ அலுவலகத்திலோ தலைமையானவர்களுக்குப் பணியாது, எதிர்க்கும்; கலகம்பண்ணும், ஒழுங்குமுறைகளை அசட்டைபண்ணும்.

**வச 2**

“அதின் மூக்கை நார்க்கயிறு போட்டுக் கட்டக் கூடுமோ? குறட்டினால் அதின் தாடையை உருவக் குத்தக் கூடுமோ?”

பெருமை தண்டனையை ஏற்றுக்கொள்ளாது. தண்டனை நியாயமாகவே கொடுக்கப்பட்டாலும் அதைத் தனக்குத் தேவையான திருத்தமென்று கருதாமல் அவமரியாதையாக எண்ணும். போதனையை ஏற்றுக்கொள்ளாது.

**வச 3**

“அது உன்னைப் பார்த்து அநேக விண்ணப்பஞ் செய்யுமோ? உன்னை நோக்கி இச்சக வார்த்தைகளைச் சொல்லுமோ?”

பெருமை ஆவிக்குரிய அல்லது வேறெந்த உதவியுமோ பிறரிடம் நாடாது. தானாகவே சமாளிக்க முயலும். தன் தேவையை ஒத்துக்கொள்ளாமல் எனக்கு ஒரு குறைவுமில்லை என்ற மிடுப்பாயிருக்கும்.

**வச 4**

“அது உன்னோடே உடன்படிக்கை பண்ணுமோ? அதைச் சதாகாலமும் அடிமை கொள்வாயோ?”

பெருமை மற்றவர்களோடு ஒத்துப்போகாது. கருத்து வேறுபாடு இருப்பவர்கள் அதனோடு செல்வது இயலாது. தன்னைப்போலவே எல்லாவற்றிலும் இல்லாதவர்களோடு கரம் கோர்த்துக் கொள்ளாது. ஊழியம் செய்யாமல் ஊழியம் கொள்ளவே விரும்பும்.

**வச 5**

“ஒரு குருவியோடே விளையாடுகிறது போல், நீ அதனோடே விளையாடி, அதை நீ உன் பெண் மக்களண்டையிலே கட்டிவைப்பாயோ?”

பெருமை தன்னோடுள்ளவர் தரத்திற்குத் தன்னைத் தாழ்த்தாது. தன்னை அவர்கள் நிலைக்குமேல் தனியே இருத்திக்கொள்ளும். தன்னை மற்றவரோடு சேர்ந்தவரென்று காட்டிக்கொள்ளாது.

**வச 6**

“கூட்டாளிகள் அதைப் பிடிக்கப் பிரயத்தனப்பட்டு, அதை வியாபாரிகளுக்குப் பங்கிடுவார்களோ?”

பெருமை தன் உடல் பாதிக்கப்பட இடம் கொடாது. தியாகம் என்னென்பதை அறவே அறியாது. அது மற்றோர்க்கு அப்பமாக முடியாது. பிறர் பக்திவிருத்திக்காக தன் ஆசீர்வாதமான அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளத் தயங்கும்.



**வச 7**

“நீ அதின் தோலை அநேக அம்புகளினாலும், அதின் தலையை எறிவல்லையங்களினாலும் எறிவாயோ?”

பெருமை தனக்கு அறிந்தோ அறியாமலோ இழைக்கப்பட்ட தவற்றைச் சகித்துக் கொள்ளாது, தானடைந்த வேதனையை மறக்காது, ஒப்புரவாகுதலுக்கும் ஆயத்தமாயிராது.

**வச 8**

“அதின்மேல் உன் கையைப்போடு, யுத்தத்தை நினைத்துக்கொள், இனி அப்படிச்செய்யத் துணியமாட்டாய்.”

பெருமை தொட்டால் சிணுங்கி. யோசிக்காமல் செய்த சிறிய பிழைக்கும் சீறி விழும், அல்லது முகம் சிவந்து அழத்துவங்கும், எளிதில் புண்படும். சுலபத்தில் சமாதானமாகாது. அதனோடு விடுதலையோடு பழகமுடியாது. எச்சரிக்கையாகவே பேச வேண்டும்.

**வச 9**

“இதோ, அதைப் பிடிக்கலாம் என்று நம்பினவன் மோசம்போய், அதைப் பார்த்தவுடனே விழுவான் அல்லவோ?”

பெருமை வெளிப்படையானது. அதின் தோற்றம், நடத்தை, செய்கைகள் அதின் அகங்காரத்தை அம்பலமாக்கும். அதை அணுகுவது கடினம்.

**வச 10**

“அதை எழுப்பத்தக்க தைரியவான் இல்லாதிருக்க, எனக்கு முன்பாக நிற்பவன் யார்?”

பெருமை பழிவாங்கும். தவறிழைத்தவனை மன்னிக்காது. அவன் கணக்குத் தீர்க்கும்படிச் செய்யும்.

**வச 11**

“தனக்குப் பதில் கொடுக்கப்படும்படி, முந்தி எனக்குக் கொடுத்தவன் யார்? வானத்தின் கீழுள்ளவைகள் எல்லாம் என்னுடையவைகள்.”

பெருமை தேவ ஈவுகளைக் கிருபையாக எண்ணாமல் தான் சம்பாதித் தவைகளாக எண்ணும். தேவனைத் தனக்குக் கடன்பட்டவராகவும், தான் தேவனுக்குக் கடன்பட்டவனல்லவென்றும் எண்ணங்கொள்ளும்.

**வச 12**

“அதின் அங்கங்களும், அதின் வீரியமும், அதின் உடல் இசைவின் நேர்த்தியும் இன்னதென்று நான் சொல்லாமல் மறைக்கமாட்டேன்.”

பெருமை தேவன் தனக்கருளிய பலம், பராக்கிரமம், அழகு யாவற்றையும் தேவ மகிமைக்காக பயன்படுத்தாமல் தவறாகப் பயன்படுத்தும்.

**வச 13**

“அது மூடியிருக்கிற அதின் போர்வையைக் கிளப்பக்கூடியவன் யார்? அதின் இரண்டு தாடைகளின் நடுவே கடிவாளம் போடத் தக்கவன் யார்?”

பெருமை தன்னை ஒளித்துக்கொள்ளத் தாழ்மை என்னும் போர்வையால் மூடிக்கொள்ளும். தான் உண்மையிலேயே மிகவும் தாழ்மையுள்ளதென்று காட்டிக் கொள்ளும்படியாக வார்த்தையினாலும் செய்கைகளினாலும் நிரூபித்துக்கொண்டேயிருக்கும். அது உள்ளொன்றும் புறமொன்றுமாக இருக்கும்.

**வச 14**

"அதின் முகத்தின் கதவைத் திறக்கக்கூடியவன் யார்? சுற்றிலுமிருக்கிற அதின் பற்கள் கடினமானவைகள்.”

பெருமை தன் குறைகள் வெளிப்படுத்தப்படுவதை வெறுக்கும். மற்றவர் குறைகளை வெளிப்படுத்த முந்திக் கொள்ளும். தன்னை மென்மையாகவும் பிறரைக் கடுமையாகவும் நடத்தும்.

**வச 15**

“முத்திரைப் பதிப்புப்போல அழுத்தங்கொண்டு அடர்த்தியாயிருக்கிற அதின் பரிசைகளின் அரணிப்பு மகா சிறப்பாயிருக்கிறது.”

பெருமை தன் எதிர்ப்பைக் காட்டும்படியாக கூட்டுக்குள் முடங்கிக் கொள்ளும். சிறு கேலி அல்லது திருத்தத்திற்கும் கோபித்துக்கொண்டு செயல்படாதிருக்கும். பிறர்முன் தவறு செய்யப் பயப்படுவதால் பூரணத்தின் வேதனையான பாதை செல்வதைத் தவிர்த்து எடுத்த எடுப்பிலேயே பிழையின்றி இருக்க விரும்பும்.



**வச 16**

“அவைகள் நடுவே காற்றும் புகமாட்டாத நெருக்கமாய் அவைகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன.”

பெருமை தேவன் அருளிய ஈவுகளைத் தானாக உபயோகிக்க மறுத்து மூடிவைக்கும். அதனிடம் கெஞ்சிக் கூத்தாடினாலொழிய எளிதில் அது தன் கையை நீட்டி உதவாது.

**வச 17**

“அவைகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு இணைபிரியாமல் பிடித்துக்கொண்டிருக்கின்றன.”

பெருமை தன் பிரச்னைகளை யாருடனும் பகிர்ந்து கொள்ளாமல் தனக்குள்ளேயே வாழும். அதன் குறையைக் கண்டுபிடிப்பது அரிது. பகிர்ந்து பலன்பெறாமல் பதுங்கி பின்மாற்றமடையும்.

**வச 18**

“அது தும்முகையில் ஒளி வீசும்; அதில் கண்கள் அருணோதயத்தின் புருவங்களைப்போல் இருக்கின்றன.”

பெருமை யோசிக்காமல் பதில் கொடுக்கும். சிந்திக்காமல் செயல்படும். காரணமின்றி கொதிக்கும்.

**வச 19**

“அதின் வாயிலிருந்து எரிகிற பந்தங்கள் புறப்பட்டு, அக்கினிப் பொறிகள் பறக்கும்.”

பெருமை பிறரை எளிதில் புண்படுத்திவிடும். அதின் சொற்கள் சுருக்கென்று தைக்கும். பிறர் மனம் நோகப் பேசும்.

**வச 20**

“கொதிக்கிற சட்டியிலும் கொப்பரையிலும் இருந்து புறப்படுகிறது போல அதின் நாசிகளிலிருந்து புகை புறப்படும்.”

பெருமை பிறரைச் சந்தேகிக்கும். தன்னையன்றி வேறு யாரையும் நம்பாது.

**வச 21**

“அதின் சுவாசம் கரிகளைக் கொளுத்தும். அதின் வாயிலிருந்து ஜுவாலை புறப்படும்.”

பெருமை நிலைதடுமாறினால் சுற்றுப்புறத்தாரையும் பாதிக்கும். தன்னையே அடக்கிக் கொள்ளாது. பிறரையும் மூட்டிவிட்டுக் கெடுக்கும்.

**வச 22**

“அதின் கழுத்திலே பெலன் குடிகொண்டிருக்கும்; பயங்கரம் அதற்கு முன் கூத்தாடும்.”

பெருமை வணங்காக் கழுத்துடையது. தன் தவற்றிற்காக வருந்தாததோடு தான் செய்ததே சரியென்று பிடிவாதமாய் தன் நிலையில் மகிழும்.

**வச 23**

“அதின் உடற்கூறுகள் அசையாத கெட்டியாய் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டிருக்கும்.”

பெருமை சுயேட்சையாய்த் திட்டமிட்டு தடைகளைத் தாண்டிச் செயல்படும். எதையும் பார்க்காது; யாரையும் சட்டைசெய்யாது. பிறருக்காய்ப் பொறுத்துப் போகாது. கூட்டுறவு என்பது அதன் அகராதியிலேயே கிடையாது.

**வச 24**

“அதன் நெஞ்சு கல்லைப் போலவும், ஏந்திரத்தின் அடிக்கல்லைப் போலவும் கெட்டியாயிருக்கும்.”

பெருமை ஈவு இரக்கமற்றது. உள்ளமுருக்கும் கதறலுக்கும் உருகாமல் செவியடைத்துக்கொள்ளும். துன்பம் துடைக்கத் துணியாது. பிறர் மனநிலையைப் புரிந்துகொள்ளாது.

**வச 25**

“அது எழும்பும்போது பலசாலிகள் அஞ்சி பயத்தினால் மயங்கித் திகைப்பார்கள்.”

பெருமை தந்திரமுள்ளது. நேர்முகமாய்ப் போராடாது. தன் பெலத்தையும், அந்தஸ்தையும் அனுகூலமாகப் பயன்படுத்தி தன் சகாக்களையும் முறியடிக்கும். அயலகத்தார் அதற்கு அஞ்சுவர்.



**வச 26**

“அதைத் தாக்குகிறவனுடைய பட்டயம், ஈட்டி, வல்லையம், கவசம் ஒன்றும் அதற்குமுன் நிற்காது.”

பெருமை புத்திமதியை அசட்டைபண்ணும். வசனத்தை தன் வசதிக்குத் திருக்கும். நல்லெண்ணத்தோடு புத்தி சொல்லும் பிரசங்கிகளையும் நண்பரையும் வெட்கப்படுத்தும்.

**வச 27**

“அது இரும்பை வைக்கோலாகவும், வெண்கலத்தை உளுத்த மரமாகவும் எண்ணும்.”

பெருமை தனக்கும் மேலானவர்களை மதிக்காது. ஆவிக்குரிய வரம் பெற்றவர்களைக் கண்டுகொள்ளாது குறைகூறும். அவர்கள் முயற்சியின் பலன்களை அற்பமாக எண்ணும்.

**வச 28**

“அம்பு அதைத் துரத்தாது; கவண்கற்கள் அதற்குத் துரும்பாகும்.”

பெருமை பயமற்றது. தன் தவறுகளோ தேவ தண்டனையோ அதைப் பயமுறுத்தாது. கவலையற்றது. எதற்கும் தன் விளக்கத்தையும் சாக்குப் போக்குகளையும் சொல்லிச் சமாளித்துவிடும்.

**வச 29**

“அது பெருந்தடிகளைத் தாளடிகளாக எண்ணி ஈட்டியின் அசைவை இகழும்.”

பெருமை பலவீனமான ஒருவரைக் கர்த்தர் பயன்படுத்தக்கூடும் என்று நம்பாது. அப்படிக் கண்டால் அதை ஒத்துக்கொள்ளாமல் விசாரித்து நிராகரித்துவிட முயலும். மெச்சிக்கொள்ளாது; உற்சாகப்படுத்தாது. பிறரிடம் பூரணத்தை எதிர்பார்க்கும்.

**வச 30**

“அதன் கீழாக கூர்மையான கற்கள் இருந்தாலும், அது சேற்றின் மேல் ஓடுகிறது போலக் கருக்கான அவைகளின்மேலும் ஓடும்.”

பெருமை தானுள்ள இடத்தின் மென்மை, ஒழுங்கு, அமைதி, அமரிக்கை, இசைவைக் கெடுக்கும். ஐக்கியத்தை இரண்டாக்கும்.

**வச 31**

“அது ஆழத்தை உலைப்பானையைப்போல் பொங்கப்பண்ணி, கடலைத் தைலத்தைப்போலக் கலக்கிவிடும்.”

பெருமை வாயாடி; துடிப்புள்ளது. கூட்டத்தில் தன்னை வெளிப்படுத்த விரும்பும். தன்னைப் பிறர் கவனிக்கவும் பாராட்டவும் விரும்பும்.

**வச 32**

“அது தனக்குப் பின்னாகப் பாதையைத் துலங்கப் பண்ணும்; ஆழமானது வெளுப்பான நரையைப்போல் விளங்கும்.”

பெருமை தனக்கொரு ஞாபகச் சின்னத்தை நிறுவும். தன் வெற்றிகளிலெல்லாம் தன் பெயர் பொறிக்கப்பட விரும்பும். மக்கள் உள்ளத்தைக் கவரக் கருத்தாயிருக்கும்.

**வச 33**

“பூமியின்மேல் இதற்கு ஒப்பானது ஒன்றுமில்லை; அது நிர்ப்பயமாயிருக்க உண்டு பண்ணப்பட்டது.”

பெருமை தன்னைக் குறித்த கற்பனை உலகில் வாழும், தன்னைப் பிறரோடு ஒப்பிட்டு மகிழும்.

**வச 34**

**“அது மேட்டிமையானதையெல்லாம் அற்பமாய் எண்ணுகிறது; அது அகங்காரமுள்ள ஜீவன்களுக்கெல்லாம் ராஜாவாயிருக்கிறது.”**



# 3
# ஜெபத்தில் என் போராட்டங்கள்

“என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்!”

இப்பாடலைப் பாடும்பொழுதெல்லாம் மாய்மாலக்காரியைப் போல உணர்ந்தேன். எனக்கு ஜெபவேளை என்று ஒன்றும் கிடையாது; அதை நான் வாஞ்சித்ததுமில்லை! வேதம் வாசிப்பதை விரும்பினேன். மணிக்கணக்காய் வாசிப்பேன். ஆனால் என் போராட்டமெல்லாம் ஜெபத்தோடுதான். நான் ஜெபத்தில் ஜெயங்கொள்ள முடியுமா? தனி ஜெபத்தில் ஏன் இவ்வளவாய் சோர்வடைகிறேன்? இக்கேள்விகள் ஆண்டாண்டாய் என்னை உருக்கின. இரட்சிப்பின் அனுபவம் ஜெபிக்க ஓர் ஆழ்ந்த ஆசையை என்னில் மீட்டிவிட்டது. ஆனால் நாளடைவில் மங்கி அணையத் துவங்கினேன். ஜெபமென்றால் ஏதோ அர்த்தமற்று உளறுவது போல் இருந்தது. என் மனது சிதறியது. முழங்காலில் தூங்கி முகத்தில் விழுந்தேன். அவசர வேலைகள் உடனடி அழைப்பு விடுத்தன. முடிவில் இது எனக்கல்ல என்று தீர்மானித்துவிட்டேன். ஜெபம் ஒரு சிலருக்கு அருளப்படும் வரம்; என்னைப் போன்றவர்கள் காலையும் மாலையும் சுருக்க ஜெபத்தை ஒழுங்காய் முணுமுணுத்தால் அதுவே போதும். பொன்னான நேரத்தை முழங்காலில் வீணாக்குவதைவிட உருப்படியாக ஏதாவது செய்யலாமே என்றெண்ணினேன். மாம்சத்தோடும் இரத்தத்தோடும் நான் போராடவில்லை, அந்தகார சக்திகளோடு போராடுகிறேன் என்பதை இன்னும் அறியாதவளாயிருந்தேன்.

நண்பரே, உங்கள் கதையும் இதுதானா? சோர்வடையாதீர்கள். நீங்களும் ஜெபவீரர் ஆகலாம். ஜெபத்தின் மகிமையான சிகரத்தைக் காணவிடாமல் சாத்தான் உங்கள் காதுகளில் சகல பொய்களையும் சொல்லிக் கொண்டிருக்கிறான். ஜெபம் ஒரு சிலருக்குமட்டுமுரிய ஊழியம் என்று சொல்கிறானா? உன்னால் மன்றாடி ஜெபிக்க முடியாது என்கிறானா? சுவரைப் பார்த்துப் பேசுகிறாயே, வேறு ஏதாவது பிரயோஜனமான வேலையைச்

செய்யலாமே என்று ஆலோசனை சொல்கிறானா? நீ பொய்யனும் பொய்க்குப் பிதாவுமானவன் என்று அவனைக் கடிந்து கொள்ளுங்கள்.

ஆவியானவர் விடாமல் போராடினார். அது போராட்டங்களும், முயற்சிகளும், தவறுகளும், தோல்விகளும், ஏமாற்றங்களும் நிறைந்த நீண்ட பாதை. ஆனால் ஆமைபோல் அணுஅணுவாய் முன்னேறிக்கொண்டே சென்றேன்.

என் கடுமையான விரோதி தூக்கம்தான். என் வாழ்க்கையிலேயே அதிகமாக ஜெபித்தது: (1) தூக்கத்தை மேற்கொள்ள; (2) பெருந்திண்டியை மேற்கொள்ள. இப்பொழுதும் அவைகளை அடிமைப்படுத்திவிட்டேன் என்று சொல்லமுடியா விடினும் நான் அவைகளுக்கு அடிமையாகிவிடவில்லை என்பதை நிச்சயமாய் அறிவேன். துவக்கத்தில் என் பொது ஜெபம் இதுதான்: ஆண்டவரே, எனக்கு ஜெபிக்க உதவிசெய்யும். நான் தூங்கிவிடக்கூடாது. தயவுசெய்து பிதாவே, தூக்கத்தை மேற்கொள்ள உதவிசெய்யும். ஆண்டவரே நான் தூங்காதிருக்க வேண்டும்...ம்..ம்..ம்.ம்!" அரை மணி நேரம் கழித்து அடித்துப்புரண்டு எழுவேன்—கண்கள் சிவந்து, கைகளும் கால்களும் மரமரத்து! இப்படியாய் நாட்கள் நழுவி என் பொறுமையை இழந்தேன்.

படிப்பென்றால் விழிப்பாயிருக்கிறேனே. ஜெபத்தில் விழித்திருக்க முடியாவிட்டால் அது பிசாசின் தந்திரமாகத்தான் இருக்கும். கனநித்திரையின் ஆவியைக் கடிந்துகொள்ளத் துவங்கியபோது ஜெபத்தில் தொடர்ந்து வந்த கொட்டாவிகள் திடீரென்று நின்றுவிட்டன. என்னைச் சுற்றிக் கேலியாய்ச் சிரித்து நின்ற குட்டிப் பிசாசுகள் கண்டுபிடிக்கப்பட்ட மாத்திரத்தில் குனிந்து ஓடி மறைந்தன.

விடாமுயற்சி எடுக்க ஒரு வசனம் என்னை அதிகம் ஊக்குவித்தது: "தேவபக்திக்கேதுவாக முயற்சிபண்ணு" (1 தீமோ 4:7). உடற்பயிற்சி ஒருவனை ஒரே நாளில் உருமாறச்செய்வதில்லை. மெதுவாய் ஆனால் திட்டமாய்ப் பயன்பெறுகிறோம். ஆவிக்குரிய வாழ்விலும் அப்படியே பயிற்சி செய்ய வேண்டும். விழிப்பான நேரங்களை ஜெபத்திற்காய் ஒதுக்கத் தீர்மானித்தேன். கவிழ்ந்துவிழாமல் கூடியமட்டும் நேர்முழங்காலில் நின்றேன். முகத்தைக் கழுவி, சூடான காபி அருந்தி, பாடலோடு ஆரம்பித்தேன். நடந்துகொண்டும் ஜெபிப்பேன்.

இரண்டு விதமான தூக்கத்தைக் கண்டுகொள்ள வேண்டும். களைப்பினால் வரும் தூக்கம் ஒன்று, மற்றொன்று சோம்பலினால் வருவது. களைப்பினால் நித்திரை கண்ணிமைகளை மூடுமானால் குற்றவுணர்வடையாமல் தூங்கிவிடுங்கள். ஆனால் ஏழு அல்லது எட்டு மணிநேர அயர்ந்த நித்திரைக்குப் பின்பும் கண்கள் சொக்குமேயானால் அதற்கு விட்டுக்கொடுக்காமல் எதிர்த்துப் போராடுங்கள்.



கடமையுணர்வோடு அலாரம் அலறினால் அதைத் தலையில் தட்டாதீர்கள்! குதித்தெழுங்கள். அலாரம் என்னை ஒழுங்குமுறைக்குள் கொண்டுவர உதவிய உபாத்தியாய் மட்டும் இருந்தது. இப்பொழுது என் ஆண்டவர் அதிகாலைதோறும் இருட்டோடே எழுப்புகிறார். விழிப்புடன், இடையூறின்றி, ஓரிரு மணி நேரங்கள் ஜெபிக்க முடிகிறது. "தூக்கத்தை விரும்பாதே" (நீதி 20:13). ஜெப வாழ்க்கையின் துரோகி அது. மகிமையின் மூன்றாம் மெத்தையில் உட்கார்ந்திருந்த வேளையில் ஐத்திகுவைப் போலத் தூங்கிவிழுந்து மரித்தவராய் எடுக்கப்பட்டவருமுண்டு. ஜாக்கிரதை!

அடுத்த பெரும் பிரச்னை அலையும் மனது. கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்கினதுபோல், நல்ல விழிப்படைந்துவிட்டு இப்போது முழங்காலில் நின்று ஊரெல்லாம் சுற்றிவந்தேன். அரைமணி நேரம் ஜெபித்திருப்பேன், ஆனால் ஒன்றிரண்டு குறிப்புகளுக்கு மட்டும்; அதுவும் பூலோகத்திற்கு அவ்வப்போது இறங்கி வரும் வேளையில் சிறுசிறு வாக்கியங்களில்! சில ஆலோசனைகள் இதை மேற்கொள்ள மிகவும் பயனளித்தன. அதில் ஒன்று பக்தன் கார்டன் லின்ட்சே எழுதிய **மலைகளை அசைக்கும் ஜெபம்** என்ற புத்தகத்தில் படித்த, சத்தமாய் ஜெபிக்கவேண்டும் என்ற ஆலோசனை. இதனால் ஜெபிக்கும் காரியத்தில் மனதை வைக்கவும் வீண் வார்த்தைகளை அலப்பாமலிருக்கவும் முடிந்தது. மிக முக்கிய காரியம் ஒன்று நினைவிற்கு வரும். உடனே செய்யாவிட்டால் மறந்துவிடுவோமே என்ற பயம் பிடிக்கும். ஆகவே எப்பொழுதும் ஒரு குறிப்பேடும் பென்சிலும் அருகில் வைத்துக்கொள்வேன். ஜெபிக்க வேண்டியவைகளை எழுதிவைத்துக் கொண்டு ஒவ்வொன்றாய் ஜெபிக்கப் பழகுவது நல்லது. அரைமணி நேரம் காற்றில் சிலம்பம் பண்ணாமல் குறிப்பாய் சிலவற்றிற்காய் ஜெபிப்பதே மேன்மையானது.

அரைமனதாய் ஆண்டவரைத் தொழுதுகொள்ளாதீர்கள். வேதத்தின் முதல் பக்கத்தைத் திறந்து ஆண்டவரைச் சிருஷ்டிகராகவும் திரித்துவ தேவனாகவும் தொழுதுகொள்ளுங்கள். மறுநாள் மறுபக்கத்திலிருந்து அவரை ஆசீர்வதிக்கிறவராகவும், கொடுக்கிறவராகவும், உறவாடுகிறவராகவும், பாவத்தைக் கண்டுபிடிக்கிறவராகவும், கண்டிக்கிறவராகவும் தொழுதுகொள்ளுங்கள். மறுபக்கத்தில் அவர் பெண்ணின் வித்தாகவும், பிசாசின் தலையை நசுக்குகிறவராகவும், மனிதனையும் அவன் காணிக்கையையும் அங்கீகரிக்கிறவராகவும், பாவத்தை வெறுக்கிறவராகவும், மன்னிக்கிறவராகவும், மனிதனோடு சஞ்சரிக்கிறவராகவும் வெளிப்படுகிறார். தினந்தோறும் ஒரு பக்கத்தைத் திருப்பி புதிய விதத்தில் தொழுது கொள்ளுங்கள். உங்கள் தொழுகை எப்படி மறுமலர்ச்சி அடைகிறதென்று பாருங்கள். பக்கத்திற்கு ஒரு உறவினர், நண்பர், சந்தித்த ஆத்துமா, அயலகத்தார் அல்லது சத்துருவின் பெயரைக் குறித்து நாள் ஒன்றிற்கு ஒருவருக்காய் ஜெபியுங்கள். எப்பொழுதும்

வேதத்தோடேயே ஜெபிக்கச் செல்லுங்கள். தேவன் ஒரு வாக்குத்தத்தத்தையோ கட்டளையையோ நினைவூட்டலாம். அதை எடுத்துப் படித்துத் தொடருங்கள். அது ஓர் ஊக்குவிசையாயிருக்கும்.

சத்தமாய் ஜெபிக்கத் துவங்கியபோது தனியிடத்தைத் தேட ஆரம்பித்தேன். இப்பொழுது நாங்கள் போய்ப் பூட்டிக்கொள்ளும்படியாய் ஒரு "கெத் செமனேயைக்" கொடுத்து தேவன் ஆசீர்வதித்துள்ளார். நம் இருதயத்தின் வாஞ்சைகளை நிறைவேற்றுகிறார். ஒவ்வொரு வீட்டிலும் ஜெப அறை அல்லது அது முடியாவிட்டால் ஜெப மூலையாவது இருக்கவேண்டும். நாம் அங்கே யிருந்தால் நம்மை அழைக்கக்கூடாதென்று வீட்டிலுள்ளோர் அறிந் திருக்கவேண்டும்.

சில கண்டிப்பான கட்டுப்பாடுகள் என் ஜெபவாழ்வை ஒழுங்குபடுத்தப் பயனளித்தன. பவுல் தன்னுடைய உடலைக் கட்டுப்படுத்த தனக்கே கடின எஜமானனாயிருந்தார். கடிகாரம் ஜெபவேளையைக் காட்டினவுடனே எல்லாவற்றையும் உதறிவிட்டு முழங்காலிடத் தீர்மானித்தேன். மதியமும் அரைமணிநேரம் ஜெபிக்க எடுத்த தீர்மானம் ஒரு புதிய சீர்த்திருத்தலைக் கொண்டுவந்தது. முதலில், இன்னொரு அரைமணி சாத்தியமா என்று தயங்கினேன். ஆனால் இரண்டு வருடங்களுக்கு முன்பு செய்ததைவிட இன்று கூடுதலாகவே வேலை செய்கிறேன் எனத் தேவனுக்கு மகிமையாக சாட்சி பகர முடியும். தேவனுக்குக் கொடுங்கள்; அவர் அமுக்கிக் குலுக்கி சரிந்து விழும்படியாய் உங்கள் மடியில் போடுவார். மூன்று முறை ஜெப வேளையைக் குறித்து, அதைக் கைக்கொள்ளுங்கள்.

என்னையே உற்சாகப்படுத்திக்கொள்ளும்படி காலை, மதியம், இரவு ஜெபிக்கும் வேளைகளை நாட்குறிப்பேட்டில் குறிக்கத் துவங்கினேன். ஜெபிக்காத வேளை "✓" கிடைக்காது. துவக்கத்தில் தடுமாறியது. இப்போது சரி குறி கூடிக்கொண்டே வருகிறது. ஊருக்குப் போய்வந்தால் ஒரு சரிவு ஏற்படும். ஆனால் ஒழுங்கை விட்டுவிட வரும் எண்ணத்தைக் களைந்து மறுபடித் துவங்கிவிடுங்கள்.

ஆனால் அரைமணி நேரம் என்னதான் ஜெபிப்பது? அரைமணிநேரம் ஆனதுபோல் இருக்கும். கண்ணைத் திறந்து பார்த்தால் பத்தே நிமிடங்கள்தான் கடந்திருக்கும். ஆகவே ஜெபத்திற்குக் குறிப்புகளைச் சேகரிக்கலானேன். இது என்னை ஒரு புதிய அரங்கத்திற்குள் கொண்டு வந்தது. வெறுமனே கண்ணீர்விட்டுக் கடத்தி வந்த பல காரியங்கள் ஜெப நிலையில் மின்ன ஆரம்பித்தன. ஒருநாள் திடீரென்று நமது ஊழிய ஜெபச் சுற்றறிக்கைக்கே நாம் ஜெபிப்பதில்லையே என்று கண்டேன். ஒவ்வொரு குறிப்புக்காய் ஜெபித்து "✓"



குறியிட்டேன். இப்போது பதில்களைச் சுமந்து வந்த கடிதங்களைப் பெற்றதும் சந்தோஷம் பொங்கியது. இப்போது அவை 'வெறும்' கடிதங்களல்லவே; என் ஜெபத்திற்கு வந்த பதிலாயிற்றே! ஜெப வாழ்வின் நாடித்துடிப்பை உணரலானேன். ஒருநாள் ஜியார்ஜ் வெர்வர் 25க்கும் அதிகமான சுற்றறிக்கைகளுக்காய் தான் ஜெபிப்பதாகச் சொன்னதை அவரது ஒலிநாடாவில் கேட்டு அசந்துவிட்டேன். அப்படியும் முடியுமா? முயன்று பார்த்தாலென்ன? பல ஊழியங்களுக்கு எழுதி அவர்களது ஜெபச் சுற்றறிக்கைகளை வாங்கினேன் — நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, இல்லந்தோறும் நற்செய்தி, இந்திய அருட்பணி இயக்கம், O.M., இன்னும் சில. வேறொரு உலகிற்குள் கடந்து வந்தது போலிருந்தது. ஜெபத்தின்மேல் வாஞ்சையாய்ப் பற்றுதல்கொள்ள ஆரம்பித்தேன். ஒருமாத ஜெபக்குறிப்புகளை மறுமாத துதிக்குறிப்புகளோடு ஒப்பிடுவது சுவாரஸ்யமான கணிதம் போலிருந்தது. இத்தனை ஊழியங்களில் இரகசிய சேவகியாய்ப் பணிபுரிந்ததின் பலனை நித்தியத்தில் பெறும்போது எப்படியிருக்கும்! அருமையானவரே, உங்கள் ஊழியத்தைக் குறுக்காதீர்கள். உங்கள் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்குங்கள்; உங்கள் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும்; தடை செய்யாதீர்கள்; உங்கள் கயிறுகளை நீளமாக்கி உங்கள் முளைகளை உறுதிப்படுத்துங்கள்!

தேவன் சுருக்க ஜெபங்களுக்குப் பதிலளிப்பாரா என்ற சந்தேகம் உங்களுக்கு எழுந்ததுண்டா? எனக்கு எழுந்ததுண்டு. சுற்றறிக்கையை வேகமாய் வாசிக்கிறோம். "ஆண்டவரே, ஐயாவுவை இரட்சியும், முத்துவின் கண்களைத் தொட்டு குணமாக்கும், இரங்கும் தகப்பனே, மாரியம்மாவைத் தொடும்..." இப்படியே விவரம் தெரியாத சிறு குறிப்புகள்! தேவன் இப்படி ஜெபங்களைக் கேட்டு நிச்சயம் மகிழுகிறார் என்று நம்புகிறேன். "நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப் போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள் அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளு கிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந் திருக்கிறார்" என்று சொல்லியிருக்கிறாரே. பிரயாணம் செய்யும்பொழுது கடந்து செல்லும் கிராமங்களுக்காகவும் சக பிரயாணிகளுக்காகவும் ஜெபித்துக் கொண்டே செல்வேன். "ஆண்டவரே, இந்தக் கிராமத்திற்கு ஓர் கிறிஸ்தவரை அனுப்பும். அப்பா, முன்வரிசையில் உட்கார்ந்திருக்கும் பாட்டியை இரட்சியும். சீக்கிரம் மரித்துவிடுவாளே..." சாட்சி பகருவதற்கு அடுத்தபடியாக தேவனற்றோருக்கு நாம் செய்யக்கூடிய சிறந்த காரியம் ஜெபம்தானே. பிதாவிடம் இடைவிடாமல் ஜெபிக்கப் (பேசப்) பழகுங்கள்.

சிறிய ஜெபங்களில் பயனேதுமுண்டோ? ஐந்து நிமிடங்களில் ஒன்றுமே ஜெபிக்கமுடியாதென்று பிசாசு எத்தனை முறை நம்மிடம் பொய் சொல்லி யிருக்கிறான். "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று மெதுவாய்க் கருத்தோடு ஐந்து நிமிடங்கள் சொல்லி கணக்குப் பாருங்கள். ஆச்சரியப்படுவீர்கள். என் கணக்கு 500. கிடைக்கும் சிறு நேரத்தையும் ஜெபிக்கப் பயன்படுத்துங்கள்.

ஜெபக்குறிப்புப் புத்தகம் ஒன்று வைக்கும் பழக்கம் நல்லது. மக்கள் ஜெபிக்கக் கேட்கும்போது ஜெபிக்க வாக்குக் கொடுத்துவிட்டு பின் குற்ற மனச்சாட்சிக்குப் பயந்து அப்பொழுதுதானே ஆண்டவரிடம் அக்காரியத்தை சொல்லிவிடுவேன். கடிதங்களுக்கும் அப்படியேதான். ஆனால் இப்பொழுது குறிப்பேடு ஒன்றில் எல்லா வேண்டுகோள்களையும் எழுதிவைத்து ஜெபவேளையில் விண்ணப்பிக்கிறேன். மேலோட்டமாயல்ல, போராடி. என்னே ஆச்சரியம்! இப்பொழுது ஜெபிக்கக் கேட்டுக் கொண்டவர்கள் நன்றி சொல்லுகிறார்கள். இதற்கு முன்பு நான் ஜெபிக்கவில்லை என்று அவர்களுக்கு யார் சொன்னது? இப்போது ஜெபிக்கிறேனென்று எப்படித் தெரியும்? அந்தரங்கத்தில் பார்க்கிற பிதா தாமே வெளியரங்கமாய் பதிலளிக்கிறார்! சுவையான விளையாட்டுபோல் இருக்கிறது — தேவனைக் கேட்பதும் பதில்களைப் பெறுவதும். இப்போது அற்ப காரியங்களையும் தேவனிடத்தில் சொல்லப் பழகிவிட்டேன். எடுத்ததை யெல்லாம் கீழேபோட்டு உடைக்கிறீர்களா? நகம் கடிக்கும் கணவனைப் பத்து வருடமாய் முயன்றும் மாற்ற முடியவில்லையா? முகங்களை நினைவில் வைக்க முடியவில்லையா? இப்படி சில சின்னக் காரியங்களைக் குறித்து ஜெபித்துப்பாருங்கள்.

ஜெபத்தில் துவளச் செய்யும் ஒரு காரியம் உண்டு. ஒரு வியாதிக்காகவோ கூட்டத்திற்காகவோ ஊக்கமாய் ஜெபிக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்ளு வோம். மருத்துவர் மருந்து கொடுத்து நோயாளி குணம் பெறுகிறார்; பிரசங்கி வல்லமையாய்ப் பேசுகிறார், கூட்டம் சிறப்பாய் முடிகிறது. யாரும் உங்களுக்கு நன்றி சொல்லவில்லை. வைத்தியரும் பிரசங்கியுமே பாராட்டப்படுகிறார்கள். பிரியமானவரே, இப்பூவுலகில் உங்கள் பலனைக் குறித்துக் கவலைப்படாதீர்கள். உங்கள் பலன்களெல்லாம் பரலோகத்தில் தேவனது ஞாபகப் புத்தகத்தில் உள்ளன (மத் 6:5,6). ஜெபத்திற்குப் பதில்கள் இயற்கையான விதமாய் வரலாம். ஆனால் உங்கள் ஜெபம் விளைவித்த அற்புதத்தை நித்தியமே அறிவிக்கும்.

சிலர் கண்ணீர்விட்டு ஜெபிப்பதுபோல உங்களால் முடியாவிட்டால் கவலைப்படாதீர்கள். கண்ணீருக்காய் ஜெபித்து ஜெபத்தில் நிலைத்திருங்கள். தேவன் ஒருநாள் அப்படிப்பட்ட அனுபவத்தையும் தந்து ஆசீர்வதிப்பார்.



பின்பு நாடுகளுக்காய் ஜெபிக்கும்படி தேவன் பாரப்படுத்தினார். ஜெப அறையில் உலகப்படம் ஒன்றைப் பொருத்தியுள்ளேன். ஓராண்டில் எல்லா நாடுகளுக்கும் ஒருமுறையாவது ஜெபிக்க ஒருமுறையைப் பயன்படுத்துவது நல்லது (அதற்குரிய அட்டைகள் உள்ளன). அல்லது அட்லஸ் வைத்து ஜெபியுங்கள். P.J. Johnstone தயாரித்துள்ள 'Operation World' என்னும் ஆங்கிலப் புத்தகம் மிகவும் பயனுள்ளது.

உபவாசத்தை முயற்சித்தபோது பெரும் தோல்வி கண்டு சோர்வடைந்தேன். இன்று உபவாச நாள் என்று குறித்துவிட்டு அவசர அவசரமாய் வேலைகளை முடித்துவிட்டு சற்று இளைப்பாறலாம் என்று படுப்பேன்— சாயங்காலத்தில்தான் விழிப்பேன். இல்லாவிட்டால் (ஒரு வேளை உணவை இழக்குமுன்பே) தலைசுற்றும். முழங்கால்படியிட்டு கண்களை மூடினால் லட்டும், ஜிலேபியும் கண்முன் நடனமாடும். தேவனிடத்தில் கெஞ்சி விளக்குவேன். "உபவாசித்துத் தூங்குவதைவிட சாப்பிட்டு ஜெபிப்பது மேன்மையல்லவா? மன்னியும் கர்த்தாவே, எனக்கு முடியவில்லை" என்று சொன்னதை வாபஸ் வாங்கி விடுவேன். இதுவும் பிசாசின் தந்திரமே. உபவாசத்திலும் நம்மைப் பழக்குவிக்க வேண்டும். உபவாசித்து ஜெபிக்கப் படியுங்கள்.

உலகக் காரியமொன்றைப் பயின்று கொள்ள நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபடுகிறோம். ஆனால் ஆவிக்குரிய காரியமென்றால் தேவன் நம்மைக் கண்மூடிக் கண்திறக்கும் நேரத்தில் மாற்றிவிட எதிர்பார்க்கிறோம். நண்பரே, தேவனது கிருபையைப் பற்றிக் கொள்ளுங்கள். ஆனால் தேவபக்திக்கேதுவாக முயற்சிபண்ணுங்கள். உங்கள் பிள்ளைகளோ, இளம் விசுவாசிகளோ ஜெபவாழ்வில் வருடக்கணக்காய் பாடுபட்டுக் கற்றுக்கொள்ள விடாதீர்கள். அவர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுங்கள். நமது நல்ல ஆண்டவர் நீங்கள் ஜெபிக்கும்படியாகவும் ஜெபவீரரை எழுப்பும்படியாகவும் தமது கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் உங்கள் மேல் ஊற்றுவாராக!

# 4
# இராப்பகல் இன்பம்

''ஆசேருடைய குமாரரின் குடும்பங்களாவன: இம்னாவின் சந்ததியான இம்னாவியரின் குடும்பமும், இஸ்வியின் சந்ததியான இஸ்வியரின் குடும்பமும், பெரீயாவின் சந்ததியான பெரீயாவியரின் குடும்பமும்...'' ''விட்டுத்தள்ளு'' என்றது மனம். ''ஹூம், இதெல்லாம் பிரயோஜனமில்லை; உனக்குப் புரியாது தாண்டிப்போ.'' ஆனால் என் ஆவியோ மறுத்தது. ''அப்படியானால் வேதத்தை ஒருமுறை முழுமையாக முடித்தேன் என்று சொல்ல முடியாதே.'' விழிகள் தொடர்ந்து நகர்ந்தன. ஒருமுறை, இருமுறை, மும்முறை, பின் எத்தனைமுறை என்று எண்ணாமலே வேதத்தைப் பன்முறை வாசிக்கலானேன்.

இரட்சிக்கப்படும் முன்புதான் வேதம் எனக்கொரு தாயத்தாயிருந்தது. தலைக்கடியில் வைத்துக்கொண்டு அங்கு கொஞ்சம் இங்கு கொஞ்சமாக வாசிப்பேன். ஆனால் தேவனை அறிந்துகொண்ட அந்நாளிலே அவரது வார்த்தையோடு இணைபிரியாமல் மணமுடிக்கப்பட்டேன். அதைத் தரையில் வைப்பதைப் பரிசுத்தக் குலைச்சலாய்க் கருதினேன். யாரும் அதன்மேல் எதையும் வைக்கவிடமாட்டேன். ஒரு பென்சிலாலும் குறிக்கமாட்டேன். வைராக்கிய வாஞ்சையோடு பற்றுதல்கொண்டேன். ஆனால் யாரும் அதை எப்படிப் பயன்படுத்தவேண்டும் என்று எனக்குக் கற்பிக்கவில்லை. ஏன் என்று ஆச்சரியப்படுகிறேன். ஆதியாகமம் துவங்கி 66 புத்தகங்களையும் ஒவ்வொன்றாய்க் கடந்து வெளிப்படுத்தலின் சிகரத்தில் வெற்றிக்கொடி நாட்டிவிட்டு டென்சிங், ஹில்லாரியைப்போல் பரவசமடைந்தேன். வேதத்தைக் குறித்து எல்லாவற்றையும் அறிந்துவிட்டதைப் போல் உணர்ந்தேன்.

வேதம் என்னோடு உறவாடியது, என்னைத் தடவிக்கொடுத்தது, திட்டியது, எனக்குப் புத்திசொல்லியது. சிலவேளை அதோடு சண்டையும் போடுவேன். என் பாவத்தைச் சுட்டிக்காட்டும், மறுப்பேன். ஆனால் துக்கப்பட்டுத் தலைகுனிந்து கண்ணீர் சிந்தும்வரை தினந்தோறும் என்னை அலைக்கழிக்கும். பின்பு கைகோர்த்துக்கொள்ளுவோம். என் நெருங்கிய நண்பனாகிவிட்டது.



ஒருமுறை வாசித்தபின்பு என்ன செய்வதென்று அறியாமல் முதல் பக்கத்திலிருந்து திரும்பவும் துவங்கினேன். இப்படியாய் வாசித்தேன், வாசித்தேன், வாசித்துக்கொண்டேயிருந்தேன் — என்னில் ஒரு சிறு வேதாகமம் உருவாகும்வரை! வேதத்தின் பக்கங்களைச் சரியாய்ப் படிக்காமல் சும்மா பன்முறை வாசிக்கும்படியாய்த் தேவன் என்னை ஏன் விட்டுவிட்டார் என்று அறியேன். என் இதயத்துள் ஒரு சின்ன வேதத்தைப் பதிக்க விரும்பினார் போலும். இப்போது அதை என்னால் எடுத்துவிட முடியாது. யாராலும் இயலாது. முயற்சித்தால் இதயம் புண்ணாகி இரத்தம் சிந்தும். பாராமல் தெரியாது. ஆனால் அதன் உள்ளடக்கம் பசுமரத்தாணிபோல் பதிந்து விட்டது. ஒவ்வொரு விடுமுறை நாளிலும் ஒரு புத்தகத்தை முடித்து விடுவேன். நான் நினைத்ததுபோல் அது அவ்வளவு கடினமாயில்லை. ஏற்கனவே நம்மில் குடிகொண்டுள்ள சில தவறான கருத்துக்களாலே அடிக்கடி ஏமாற்றப்படுகிறோம். பிரயாணங்களில் சாட்சி பகர இயலாவிடில் ஒரு புத்தகம் முடிக்க முயலுவேன். தொடர்ச்சியாய் வாசிக்கும்போது பல புதிய சத்தியங்கள் புலனாகும்.

வேதத்தை எவ்வளவு அதிகமாய் வாசித்தேனோ அவ்வளவு அதிகமாய் இருப்புக்கொள்ளாமலானேன். வெற்றிக்கொடி காற்றில் படபடவென்று பறக்கவில்லை. பரிதாபமாய்த் தொங்கிக்கொண்டிருந்தது. பரவசமும் பறந்துவிட்டது. இந்த வானளாவும் புத்தகத்தில் காணக்கிடைக்காத ஒன்று கண்டுபிடிக்க இருக்கிறதென்பதை நிச்சயமாய் உணர்ந்தேன். ஆகவே முக்கியமாய்த் தோன்றின வசனங்களை அடிக்கோடிடத் துவங்கினேன். முதலில் கவனமாய்ச் சுத்தமாய்ச் செய்தேன். ஆனால் செய்தி உள்ளத்தில் ஊற ஊற அதிகமாய்க் கோடிட்டேன். இரண்டு வசனங்களை இணைத்தேன், அங்கங்கே அம்புக்குறியிட்டேன், அடையாளக் குறிகளிட்டேன், அவ்வசனத்தில் கிடைத்த வெளிச்சத்தை அருகில் எழுதினேன். தேவன் என்னோடு பேசிய தேதிகள், என் அறிக்கையிடுதல்கள், உணர்ச்சிகள், தீர்க்கதரிசன வசனங்களுக்கெதிராக 'தீ', சுவிசேஷ அறிவிப்பு வசனங்களுக்கு 'சு', பரிசுத்த ஆவிக்கு பிரிந்திருக்கும் நாவுபோன்ற சிவப்பு வரைப்படம், பட்டியல் உள்ள இடத்தில் எண்ணிக்கை, இப்படியாக, பக்கங்கள் நிறம் மாறி உதிர ஆரம்பித்தன. என் நண்பனுக்கு சீக்கிரம் வயதாக ஆரம்பித்தாலும் ஓர் இளைஞனுக்கு மாற்றிக்கொள்ள என் மனம் இசையவில்லை. இரகசியமாய்க் கட்டியணைத்து முத்தமிட்டேன். என் அருமை நண்பனுக்கு உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டேன்.

தினம் கல்லூரிக்குச் செல்லும்போது பிரிவினை வேதனையளித்தது. ஒரு சிறிய புதிய ஏற்பாட்டை எடுத்துச் செல்லலானேன். அதற்கு மற்றொரு காரணம் என் கண்களையும் மனதையும் கட்டுப்படுத்துவதற்காகத்தான். அவைகளை என் நேசருக்கு நீதிக்குரிய ஆயுதங்களாக ஒப்புக்கொடுத்துவிட்டபின் அவை

ஊர்சுற்றித் திரிவதை நான் விரும்பவில்லை. விரிவுரையாளர் வகுப்பறையில் நுழையும் வரை வாசிப்பேன். பஸ் ஸ்டாண்டிலும் இன்னும் முடிந்தபொழுதெல்லாம் வாசிப்பேன்.

வாசிக்க வாசிக்க பக்கங்கள் உயிர்பெற்று எழும்பின. அச்சூழ்நிலையில் என்னையே வைத்துக் கற்பனை செய்வேன். பிறவியிலேயே குருடாயிருந்து திடீரென்று கண்கள் திறந்தால் எப்படியிருக்கும் என்று நினைத்ததும் குதூகலத்தால் குதிப்பேன். யார் என்ன சொன்னாலும் என்ன என்று சட்டைசெய்யாமல் இயேசுவின் பாதத்தில் உட்கார்ந்து அவர் வாய்மொழிகளைக் கேட்டுக்கொண்டேயிருந்தால் எப்படி இருக்கும் என்ற எண்ண அலை எழும்பியதும் இயேசுவின் திவ்யப் பிரசன்னம் என்னை ஆட்கொள்ளும்; பரிசேயர் மாட்டிக்கொள்ளும்போது கை தட்டிச் சிரித்து இயேசுவுக்குக் கைகுலுக்குவேன். அவர் கழுதையில் ஏறிவரும்பொழுது என்னுடைய பங்கு குருத்தோலைகளைப் பரப்பி அவரது வஸ்திரத் தொங்கலின் ஓரத்தைத் தொட்டுவிட முயற்சிப்பேன். வேதத்தின் பல பக்கங்களில் நடமாடியிருக்கிறேன். இரவில், யோர்தான் நதிக்கரையில் உட்கார்ந்து திருமுழுக்குகளைக் கவனித்துக் கொண்டிருப்பேன். யோவான் கை நீட்டி தேவாட்டுக்குட்டியைச் சுட்டிக்காட்டினவுடன் தூசியைத் தட்டிவிட்டு எழுந்து வேகமாய் இயேசுவின் பின்னே ஓடுவேன். காலையில், எல்லாம் சொப்பனமென்று அறிந்ததும் ஏசாயா 29:8இன் சொப்பனக்காரனைப் போல் ஏங்குவேன். ''அது பசியாயிருக்கிறவன் தான் புசிக்கிறதாகச் சொப்பனம் கண்டும், விழிக்கும்போது அவன் வெறுமையாயிருக்கிறதுபோல இருக்கும்.''

பிரியமானவரே, வேத சூழ்நிலைகளில் உங்களை வைத்துப் பாருங்கள். அது உங்கள் தியானத்தை விரிவாக்கும். அடுத்தபடி இயேசுவை அதே சூழ்நிலையில் வைத்துக் கற்பனை செய்யுங்கள். இயேசு அச்சூழலிலிருந்தால் என்ன செய்திருப்பார், சொல்லியிருப்பார் ? உங்களையே கேள்வி கேட்டுப்பாருங்கள். இயேசு என்ன செய்திருப்பாரோ அதையே செய்வதற்கு எனக்குத் தைரியமுண்டா ? அதுவே இலட்சியம். இப்போது வானத்தைவிட்டுப் பூமிக்கு இறங்கி வந்து நீங்கள் வாசித்த பகுதியை நடைமுறை வாழ்க்கையோடு பொருத்திப் பாருங்கள். இப்படிப்பட்டதோர் சூழ்நிலையை நீங்கள் வாழ்க்கையில் சந்தித்ததுண்டா ? எப்படி நடந்து கொண்டீர்கள் ? இயேசுவின் மாதிரிக்கு நெருங்கி வருகிறதா ? ஆராய்ந்து, வேதபாணியிலிருந்து எங்கு தவறினீர்கள் என்று கண்டுபிடியுங்கள். இப்பொழுது அதை ஜெபத்தில் ஆண்டவரிடத்தில் ஏறெடுங்கள். நீங்கள் வாசித்த அந்தப் பகுதியை அடிப்படையாகக் கொண்டே குறிப்பாய் ஜெபியுங்கள். ஆண்டவரிடத்தில் குறைகளை அறிக்கையிட்டு அவரது ஒத்தாசையை நாடி ஜெபித்து தீர்மானங்கள் எடுங்கள். அப்பகுதியில் ஆண்டவரைப்பற்றி சொல்லப்பட்டிருப்பவைகளை மனதிற்கொண்டு அவரை ஆராதியுங்கள். அப்பொழுது அழிக்க முடியாதபடி அவை உள்ளத்தில் பதிந்து விடும்.



துவக்கத்திலிருந்தே (காரணமறியாமலேயே) தமிழ் வேதத்தைக் காலையிலும் ஆங்கில வேதத்தை மாலையிலுமாக வாசித்துப் பழகினேன். அதின் மதிப்பை இப்போதுதான் உணருகிறேன். வேத ஆராய்ச்சி நூல்கள் ஆங்கிலத்தில் ஏராளம் உண்டு. ஆங்கில வேதத்தில் பழக்கம் அவையெல்லாவற்றையும் பயன்படுத்த உங்களுக்கு ஊன்றுகோலாயிருக்கும். எனது முன்னைய நாட்களில் கிரமமான வேதபாடத் திட்டங்களைக் குறித்துக் கேள்விப்பட்டதாகவே தெரியவில்லை. நாங்களாகவே திணறியடித்துப் படிக்கவேண்டியதிருந்தது.

ஒருமுறை என் பெட்டியை ஆட்டோவிலேயே விட்டுவிட்டு இறங்கிச் சென்றுவிட்டேன். அதோடு என் வேதமும் போய்விட்டது. ஆண்டவரே அந்த ஓட்டுநரிடம் என் வேதத்தை மட்டும் அனுப்பி வைக்கச்சொல்லும் என்று ஜெபித்தேன். யாரையோ இழந்துவிட்டது போன்ற பிரிவுணர்வு ! மனமற்றவளாக வேறொரு வேதத்தை வாங்கி வாசிக்கலானேன். அப்பொழுதுதான் தேவன் ஏன் என் விண்ணப்பத்திற்குச் செவிசாய்க்கவில்லை என்று புலனானது. இப்புதிய வேதத்தின் குறிக்கப்படாத துல்லிய பக்கங்களிலிருந்து புதிய செய்திகள் மலர ஆரம்பித்தன. மகிழ்கொண்டேன். திரும்பவும் குறிக்கத் துவங்கினேன்.

வேதமும் அதின் செய்தியும், பலிபீடமும் தேவனும் போன்றது. பலிபீடத்தைக் காட்டிலும் தேவன் முக்கியம்போல வேதத்தைக்காட்டிலும் அதன் செய்தி முக்கியம். எழுதுங்கள், மேலும் எழுதுங்கள், குறியுங்கள், அடிக்கோடிடுங்கள், எண்ணுங்கள், கணக்கிடுங்கள், இணையுங்கள், தேசப் படத்தைப் பாருங்கள். பயன்படுத்த முடியாத நிலை வந்ததும் வேறொரு வேதம் வாங்குங்கள். பழைய வேதத்தைக் கொடுத்துவிடாதீர்கள். பத்திரமாய் வையுங்கள். அது உங்கள் ஆவிக்குரிய சரித்திரம். தேவன் உங்களோடு பேசிய அச்செய்திகள் ஒருநாள் தேவைப்படும்.

ஒருமுறை ஒரு வாரத்திற்கு இரவல் வேதத்தில் சமாளிக்க வேண்டி வந்தது. ஏதோ ஒருவித்தியாசத்தினால் இன்னும் அதிக நேரம் வாசிக்க வாஞ்சித்தேன். பின்புதான் அதன் காரணம் பெரிய எழுத்துக்கள் என்று கண்டுபிடித்தேன். உடனே பெரிய எழுத்து வேதம் ஒன்றை வாங்கினேன். அதிலிருந்து யாரும் சிறிய எழுத்து வாங்குவதை நான் விரும்புவதில்லை.

எல்லாப் புதிய மொழியாக்கங்களையும் குறித்து தப்பெண்ணம் கொள்ளாதீர்கள். மிக நம்பத்தக்கவையும் நல்லதுமான சிலவுண்டு. வேதத்தைப் பன்முறை வாசித்திருப்பீர்களேயானால் மறுமுறை ஆதியாகமத்திலிருந்து துவங்கும்போது ஓர் புதிய மொழிபெயர்ப்பை எடுத்துக் கொள்ளுங்கள். நிச்சயமாய் அது வசனத்தில் கூடுதல் வெளிச்சத்தை அளிக்கும். NKJV,NIV,

NASB, RSV, Amplified Bible ஆகியவை நம்பத்தகு மொழியாக்கங்கள். Good News Bible, The Living Bible, Message இவற்றையும் ஒருமுறை வாசிக்கலாம். ஒரே சமயத்தில் பலவற்றைப் பயன்படுத்தாதீர்கள். வருடத்தை எழுதி, பின் அன்றாட வாசிப்புக்கடியில் அன்றையத் தேதியைக் குறித்து ஓராண்டிற்குள் முடித்துவிடக் குறிவையுங்கள்.

வேதாகமக் கல்லூரியில் பயின்றிராத விசுவாசிகளுக்காய் நடத்தப்பட்ட சில வேதபாடத் திட்டங்களில் பங்குபெறும் சிலாக்கியம் கிட்டியது. அப்பொழுதுதான் வேதப் பண்டிதர்கள் வேதத்தில் ஆழ்ந்த வேலை செய்திருக்கிறார்கள். நாம் வேதத்தை வெறுமனே வாசிக்கக்கூடாது, கற்க வேண்டும் என்று புரிந்துகொண்டேன். இத்திட்டங்களில் வேத ஆராய்ச்சி நூல்கள் பலவற்றிற்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டோம். வேத ஆராய்ச்சிக்காய் ஒரு குறிப்பேடு வாங்கினேன். வேதம் தவிர மற்ற எல்லாப் பாடப்புத்தகங்களுக்கும் குறிப்பேடு இல்லாமல் நான் பயின்றதில்லை என்ற எண்ணம் வெட்கத்தை அளித்தது. ச! லுத்தரின் நாட்களில் வேதத்திற்குச் சங்கிலியிட்டு பிசாசு மக்களை இருளில் வைத்திருந்தான். இன்றோ திறந்த வேதத்தை நம் கையில் கொடுத்துவிட்டு அதை முழுமையாய் உபயோகிக்காதபடி நம் கைக்குச் சங்கிலியிட்டிருக்கிறான். சாத்தானின் தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே. உங்கள் வேதத்திற்கு நோட்டு போட்டிராவிடில் தயவுசெய்து ஒன்றை வாங்குங்கள் — இன்றே! நோட்டும் பேனாவுமில்லாமல் வேதத்தைப் படிக்க உட்காராதீர்கள்.

வாசிக்கும் அத்தியாயத்தில் எத்தனை கேள்விகள் எழுத முடியுமோ எழுதுங்கள். அவற்றிற்குப் பதில் எழுதுங்கள். உங்கள் தியான எண்ணங்களை எழுதுங்கள். தேவையான இடங்களில் படம் வரையுங்கள். தேதியைக் குறியுங்கள், பலநாட்கள் விட்டுப்போய்விட்டாலும் பரவாயில்லை தொடருங்கள். நம்மால் முடியாது என்கிற எண்ணத்தை விட்டொழியுங்கள். ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் ஒரு தலைப்பு கொடுத்து அதற்கடியில் உபதலைப்புகள் கொடுங்கள் (இதை வேதத்திலேயே எழுதலாம்). அந்த அத்தியாயத்தின் சாராம்சத்தை உங்கள் சொந்த வார்த்தைகளில் குறிப்பேட்டில் எழுதுங்கள். நேரம் வீணாகிறதே என்று நினைக்காதீர்கள். வருடங்கள் நகரும்போது இதன் பயன்களை உணருவீர்கள். புதிதாய்க் கற்றுக்கொண்டவைகளைப் பிறரோடு பகிர்ந்துகொள்ள முயற்சியுங்கள். வேத ஆராய்ச்சி ஏதும் நடக்குமானால் சேர்ந்துகொள்ளுங்கள். ஆராய்ச்சி நூல்கள் வாங்கிப் படியுங்கள்.

வேதத்தைப் படிக்கும்பொழுது பள்ளியில், கல்லூரியில் பரீட்சைக்கு எப்படிப் படித்தீர்கள் என்பதை நினைவுகூருங்கள். தேவனுக்குரிய காரியங்களில் அதிலும்அதிக முயற்சி வேண்டாமா? வேதத்தில் ஒரு பரீட்சை நடத்தினால் 50 சதவீதத்திற்கும் அதிகம் விசுவாசிகள் பரிதாபமாய்த் தோல்வியடைவோம்



என்பது நிச்சயம். ஏனெனில் நாம் கருத்தாய்க் கற்காமல் மேலோட்டமாய் வாசிக்கிறோம். இத்தனைப் பெரிய பொக்கிஷத்தை வைத்துக்கொண்டு இவ்வளவாய் ஏமாந்து போகலாமா? சோம்பலைவிட்டு எழுந்திருந்து உடனே செயல்படத் துவங்குங்கள். இரண்டு அல்லது கூடுதலானோர் அல்லது குடும்பமாக சேர்ந்து படித்தால் ஒருவரையொருவர் கேள்வி கேட்டுக் கொள்ளுங்கள். உங்களுக்குள்ளே மாதமொருமுறை ஒரு தேர்வு நடத்திக் கொள்ளுங்கள். நீங்கள் ஊழியம் செய்யும் இடத்தில் கிறிஸ்தவருக்குப் பரீட்சை நடத்திப் பரிசு கொடுங்கள். வேதத்தை முறையாய்க் கற்கக் கற்பியுங்கள். அவர்களுக்குத் தெரியும் என்று நினைத்துக்கொள்ளாதீர்கள். நல்லதொரு அஞ்சல் வழி வேதபாடத் திட்டத்தை அவர்களுக்கு அறிமுகப் படுத்துங்கள். உங்கள் ஊரிலே வேதப் போட்டியோ பரீட்சையோ நடந்தால் தைரியமாய்ச் சேர்ந்துகொள்ளுங்கள். தோல்வியடைவது வெட்கமல்ல. பரீட்சைக்காய்ப் படித்தீர்களே, அதுவே காரியம் (ஆனால் எப்படியும் தேர்ச்சி பெற முயலுங்கள்!)

தெரிந்தெடுக்கப்பட்ட வசனங்களையும் பகுதிகளையும் மனனம் செய்யுங்கள். மனனம் செய்யும் திறன் பெற்றிருப்பீர்களானால் முழு நிருபங் களை மனனம் செய்யுங்கள். சில நாள் சென்று மறந்துவிட்டாலும் பரவா யில்லை, நிருபத்தின் மையக் கருத்தை மறப்பது கூடாத காரியம்.

ஆண்டுதோறும் வேதத்தை முடித்துவிட மிக அவசரப்படுவேன். பின்பு தேவன் தடைவிதித்து ஒவ்வொரு வசனமாய்த் தியானிக்க ஊக்குவித்தார். ஒருநாளில் 5–10 வசனங்கள்தான் தியானிப்பேன். இம்முறை நத்தைபோல் ஊர்ந்தாலும் மெத்தவும் பயனளித்தது. ஒரு வசனத்தில் வார்த்தை வார்த் தையாய்த் தியானித்து அது சம்மந்தப்பட்ட மற்ற வசனங்களை நினைவுகூர்ந்து, பொருத்திப் படித்தேன். அச்சமயத்தில் தியானக் கருத்துக்களை எழுதிக் கொள்ள தனிப் பக்கங்கள் கொண்ட ஒரு வேதத்தைப் பெற்றேன். அதில் பக்கங்களை எடுக்கலாம், சேர்க்கலாம். இது என் வேதப் படிப்பில் புது பரிமாணத்தைத் கூட்டியது.

புரியாதவற்றைக் குறித்துக் கவலைப்படாதீர்கள். தேவன் படிப்படியாய்ப் போதிப்பார். வேத ஆராய்ச்சி நூல்களையும், ஒத்தவாக்கிய அகராதிகளையும், ஒத்துவாக்கிய வேதங்களையும் தாராளமாய்ப் பயன்படுத்துங்கள். புதிய ஏற்பாட்டில் துவங்குவது நல்லது. விட்டு விட்டுத் தாவாதீர்கள். ஒத்த வசனம் ஒவ்வொன்றையும் திருப்பிப் பாருங்கள். பக்கங்கள் மெதுவாய்த் திரும்பினாலும் அறிவு வேகமாய் வளரும்.

வேதத்தைச் சிலமுறை வாசித்திருப்பீர்களானால் மறுமுறை உங்களுக்கு விருப்பமான கருப்பொருள் ஒன்றை மனதிற்கொண்டு ஆதியாகமம் முதல்

வெளிப்படுத்தல் வரை அப்பகுதிகளைக் குறித்துக்கொண்டே வாருங்கள். இவ்விதம் ஆராதனை, பெண்கள், மேசியாவின் வழி ஆகிய பொருட்களைக் குறித்திருக்கிறேன். இது ஓர் அருமையான விரிவாக்கத்தை அளிக்கும். முக்கியமான நபர்களின் சரிதைகளையும் எடுத்தாராயலாம்.

முழு வேதத்தையும் 27 கருத்துக்களாக வரையறுத்துத் தொகுத்துள்ள வேதாகமம் ஒன்று உண்டு: New Analytical Study Bible. மற்றொரு வேதம் வருட ஒழுங்கில் கோர்க்கப்பட்டுள்ளது : Chronological Bible.

இதற்கெல்லாம் பிறகும் என் வேத அறிவைக் குறித்து எனக்கு திருப்தியில்லை. சுயமாய்ப் படித்துக்கொள்ளக்கூடிய சில வேத ஆராய்ச்சி நூல்களைப் படித்துப் பார்த்தேன். பல பகுதிகள் புரியவில்லை. என்னை ஒரு ஒழுங்குமுறைக்குள் கொண்டு வரவும் என்னால் இயலவில்லை. ஆகவே அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் இணைந்து படிக்கலானேன். அடே ! கடந்த 25 வருடங்களாய் நான் வாசித்த யாவும் இப்போது கலங்கின குட்டை தெளிவதைப் போல மிளிரத் துவங்கின. துண்டுதுண்டாய்க் கிழிந்து கிடந்த படத்தை ஒன்றாய்ச் சேர்த்திணைப்பதுபோல அங்கங்கே படித்த யாவும் ஒன்றாய்ப் பொருந்த ஆரம்பித்தன. இத்தனை ஆண்டுகள் இவற்றை இழந்துவிட்டோமே என மனம் நோகிறேன்.

எந்த பாடத்தையாவது ஆராய்ச்சியில் துவங்குகிறோமா ? வல்லுநர்கள் ஏற்கனவே கண்டுபிடித்து எழுதிவைத்தவற்றை நாமும் கண்டு பிடிக்க முயற்சிக்கிறோமா ? விஞ்ஞான மாணவனை ஆப்பிள் மரத்தடியில் உட்காரச் செய்து ஆப்பிள் பழம் ஏன் கீழே விழுகிறது என்று கண்டுபிடிக்கச் சொல்வார்களா ? முதலாவது அவன் நியூட்டனின் புவியீர்ப்புச்சக்தி சட்டங்களைப் படிக்கிறான். பின்பு அதற்குமேல் செல்கிறான். அவர்கள் விட்ட இடத்தில் நாம் ஆராய்ச்சியைத் துவங்குகிறோம். ஆகவேதான் விஞ்ஞானம் முன்னேறுகிறது. ஏன் கிறிஸ்தவம் முன்னேறவில்லை ? நாம் வேத ஆராய்ச்சி வல்லுநர்கள் ஏற்கனவே ஆராய்ந்து அச்சடித்து வைத்திருப்பதை சற்றும் சட்டை செய்யாமல் தரையிலிருந்து துவங்குகிறோம். அவர்கள் விட்ட இடத்திலிருந்து நாம் துவங்க வேண்டும். அப்படியானால் கிறிஸ்தவம் சிங்கத்தைப்போல பாய்ந்து முன்னேறும்.

சாதா விசுவாசி வேதத்தைக் கற்றுத் தேறினவனாகி படித்துப் பட்டம் பெற்ற குருவுக்கு நேர்நிகராய் நிற்கும் அந்நாளில்தான் சபைகள் மறுமலர்ச்சி அடையும். அப்பொழுதுதான் ''சிறியவன் முதற்கொண்டு பெரியவன் வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால் கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன்



அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்க வேண்டுவதில்லை'' என்ற புது உடன்படிக்கையின் வாக்குத்தத்தத்தை அனுபவிப்போம் (எபி 8:11).

நான் வேதத்தில் பாண்டித்தியம் பெற்றவளல்ல. இறையியல் வெடித்துப்பரவும் இக்காலத்தில் நான் சிறுபிள்ளைத்தனமாய் எழுதியிருக்கிறேன் என்றறிவேன். ஆனால் என் உள்ளத்தை உடைத்து ஊற்றியதால் உங்கள் உள்ளத்தில் தேவனது வார்த்தையை ஆராய்ந்து படிக்கும் வாஞ்சையைத் தூண்டிவிட்டிருப்பேனானால் அதுவே போதும்.

*''கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும்*
*பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற*
*மனிதன் பாக்கியவான்.''*

# 5

# பெற்றோரைக் கனம் பண்ணுதல்

"இவன் என்னுடைய நேச மகன்; இவனில் பிரியமாயிருக்கிறேன்" என்று பெற்றவர் ஒருவர் தன் பிள்ளையைக்குறித்து சாட்சி பகருவாரேயானால் அப்பிள்ளை தன் பெற்றோரைக் கனம் பண்ணிவிட்டான் என்று தைரியமாகச் சொல்லலாம். அதுவே உன் குறிக்கோளாகட்டும். "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக" என்ற கட்டளை வேதத்தில் எட்டு முறை உள்ளது. "உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையாயிருக்கிறது" (எபே 6:2,3). வாழ்க்கையில் பிரச்னைமேல் பிரச்னைகளைச் சந்திக்கிறாயா ? எதுவுமே சரியாய் நடவாதது போல் தோன்றுகிறதா ? வியாதி உன் வாழ்நாளைக் குறைத்து விடுவதுபோல் பயமுறுத்துகிறதா ? பெற்றோரைக் கனம்பண்ணிப் பார்த் தாலென்ன ?

**1. கீழ்ப்படிதல்**

"உன் பெற்றோரால் உன்னைப் புரிந்துகொள்ள இயலாது; அவர்களுக் கென்ன தெரியும்" என்று உன் காதுக்குள் ஒரு கலக ஆவி கிசுகிசுக்கும். அதுவும் வாலிபப் பிராயத்தில் இருப்பாயானால் பெற்றோர் கடினமான எஜமான்களாகவும், காரணமின்றி கஷ்டப்படுத்துகிறவர்களாகவும் தெரிவர். ஆனால் உன்னைக்காட்டிலும் அவர்களுக்குக் குறைந்தது 25 ஆண்டுகளாவது அனுபவம் அதிகம் என்பதை மறந்துவிடாதே.

"பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்" என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது (எபே 6:1). அவர்களது கட்டளை வேதத்திற்குப் புறம்பானதாக இல்லாவிடில் சிந்திக்காமல் கீழ்ப்படிய வேண்டும். இயேசுவும் தம் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருந்தார் (லூக் 2: 51).



கீழ்ப்படிதல் கடினமாகத்தான் தெரியும்; ஆனால் இயேசுவும் பாடுபட்டுத்தான் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் என்பதை அடிக்கடி நினைத்துக்கொள் (எபி 5:8). பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்ட ஒருவனது பெயர் வேத அகராதியில் தேடியும் கண்டுபிடிக்க முடியாது. சிம்சோன், அப்சலோம், ஏலியின் புத்திரர் யாவரும் அகால மரணத்தையே சந்தித்தனர்.

கீழ்ப்படியாமைக்குப் பண்டைக்காலத் தண்டனை பயங்கரமாயிருந்தது (உபா 21:18– 21). இப்போது தேவன் தம்முடைய கட்டளைகளை இலகுவாக்கிவிட்டார் என்று எண்ணாதே. அழிவினின்று உன்னைத் தப்புவிக்கும்படி தேவனது கிருபையே உன்னைப் பொறுத்துப் போதித்து வருகிறது. புதிய ஏற்பாடும் கீழ்ப்படியாதோருக்கு மரண தண்டனையே விதிக்கிறது: "பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய்... இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்கள்" (ரோ 1: 30–32).

கீழ்ப்படிதலைக் குறித்த ஓர் சிறந்த நற்சாட்சியை எரேமியா 35ஆம் அத்தியாயத்தில் வாசி. சரியாய்க் கீழ்ப்படிய ஓர் நல்ல ஆரம்பம்: 1) கேள்வி கேட்காமல் கீழ்ப்படி; 2) பெற்றோர் கேட்ட காரியத்தை இன்னொருமுறை கேட்கும்படி வைத்துக்கொள்ளாதே; 3) சொன்னவுடனேயே செய்து பிசாசின் 'மறதி' என்னும் ஆயுதத்தை முறித்துவிடு!

**2. மரியாதை**

அவர்கள் சாசனம் எழுதும்வரை அல்லது உனக்கு அவர்களது ஒத்தாசை தேவைப்படும்வரை மட்டும் செலுத்தும் மரியாதை மாய்மாலம். வயதானவர்களாய் அவர்கள் உன் அடைக்கலத்தில் இருந்தாலும் மரியாதை செலுத்தவேண்டும். "நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து முதிர் வயதுள்ளவன் முகத்தைக் கனம்பண்ணி, உன் தேவனுக்குப் பயப்படுவாயாக; நான் கர்த்தர்" (லேவி 19: 32). இயேசு, தலைவன் ஒருவனை தன் பெற்றோரைக் கனம்பண்ணச் சொன்னார் (லூக் 18: 18–20). பெற்றோருக்கு மரியாதை செலுத்தும் சில பழைய காலப் பழக்கவழக்கங்கள் நாளடைவில் காற்றோடு போய் மறைந்து விட்டன. "உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயது சென்றவளாகும்போது அவளை அசட்டைபண்ணாதே" (நீதி 23:22).

**3. உதவி**

பெற்றோரைக் கனம்பண்ணுகிறேனென்று சொல்லியும் அவர்களுக்கு உதவிசெய்யாமலிருப்பது எப்படி ? உனக்கும் பெற்றோருக்குமிடையே ஒரு பிளவு ஏற்பட்டுவிட்டதா ? அவர்களோடு ஒப்புரவாக வழி தேடுகிறாயா ? அவர்கள்

அன்பைக் கவர்ந்து கொள்ள ஓர் ஆலோசனை: அவர்கள் கேட்குமுன் சிறுசிறு காரியங்களில் அவர்களுக்கு உதவிசெய்யத் துவங்கு. சீக்கிரம் இத்தந்திரம் ஒரு மந்திரம் என்று கண்டுகொள்வாய்! “ஒரு மனிதன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறது போல” (மல் 3:17). ஓடிப் போய் ஒரு காரியத்தைச் செய்வதோ, பாத்திரங்களைக் கழுவுவதோ, தரையைக் கூட்டுவதோ வெட்கமல்ல. இயேசு தம் தகப்பனுக்கு உதவி செய்து தாமும் ஒரு தச்சனானார். தாவீது போர்க்களத்திலிருந்த அண்ணன்மாருக்கும், யோசேப்பு ஆடுமாடுகளை மேய்க்கச் சென்றிருந்த தன் அண்ணன்மாருக்கும் தின்பண்டங்களை எடுத்துச் சென்றனர். யாக்கோபும் யோவானும் தங்கள் தகப்பனோடு ஆசையாய் மீன் பிடிக்கமட்டும் செல்லாமல் அலுத்துப் போயிருந்தாலும் வலைகளைப் பழுதுபார்க்கவும் உதவிசெய்தார்கள். இயேசு அவர்களைத் தம் உதவிக்காரராக்கிக் கொண்டதில் வியப்பேதுமுண்டோ? நீ உன் தகப்பனின் அம்பறாத்தூணியிலுள்ள ஓர் அம்பு. அவசரத்திற்கு ஓடிக் காரியத்தைச் சாதிக்கவேண்டும் (சங் 127: 5, 6). உதவிசெய்தல் உன் பெற்றோரோடு நல்லுறவை வளர்க்கும்.

### 4. கல்வி

கல்விக்கும் பெற்றோரைக் கனம் பண்ணுதலுக்கும் என்ன சம்பந்தம்? நிறையவுண்டு. நீ தோல்வியடையும்போது பெற்றோர் துக்கமடைகிறார்கள். ஏன்? “மூடப்புத்திரன் தன் பிதாவுக்குச் சலிப்பும் தன்னைப் பெற்றவர்களுக்குக் கசப்புமானவன்” (நீதி 17:25). “மூடனாகிய மகன் தன் தகப்பனுக்கு மிகுந்த துக்கம்” (நீதி 19:13). துரதிர்ஷ்டசாலிகளான எத்தனையோ பெற்றோர் தங்கள் ஆஸ்திகளையெல்லாம் பிள்ளைகளுக்காகச் செலவழித்துவிட்டு எவ்வித லாபமுமடையாமல் முதலிழந்தவர்களாயுள்ளனர்! ஞானத்தைத் தேடிப் பெற்றுக்கொள்ள வேண்டும். “புத்திமான் இவைகளைக் கேட்டு அறிவில் தேறுவான். விவேகி... ஞானிகளின் வாக்கியங்களையும், அவர்கள் உரைத்த புதைபொருள்களையும் அறிந்து கொள்ளுவான்” (நீதி 1:5,6). கல்வியில்லையேல் உலகம் உன்னைக் குப்பைத் தொட்டியில் போட்டுவிடும். இதை உன் பெற்றோர் நன்கறிவர். எனவே அவர்கள் சொல்கேட்டு அவர்கள் வாஞ்சையை நிறைவேற்று.

உன் பெற்றோரைக்காட்டிலும் அதிகமாகப் படித்திருப்பாயானால் பிறர் முன்பாக அவர்களைக் குறித்து வெட்கப்படாதே. உன்னை இந்த நிலைக்குக் கொண்டுவந்தது அவர்கள்தானே. உன்னைக்குறித்து அவர்கள் பெருமிதம் அடைந்து பூரிக்கட்டும். “ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன் அவனால் மகிழுவான். உன் தகப்பனும் உன் தாயும் சந்தோஷப்படுவார்கள்; உன்னைப் பெற்றவள் மகிழுவாள் (நீதி 23:24,25).



படித்து முடித்திருப்பாயானால் ஒரு பணியில் அமர்ந்து அவர்களைத் தாங்கு. அது குடும்பத்திற்கு உதவியும் கனமுமாகும்.

### 5. நற்குணம்

“நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூருவான்” (நீதி 23:24). ‘ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டத் தாய்’ எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார். “வேதப் பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவன் விவேகமுள்ள புத்திரன்; போஜனப் பிரியருக்குத் தோழனாயிருக்கிறவனோ தன் தகப்பனை அவமானப்படுத்துகிறான்... தன் தகப்பனையும் தன் தாயையும் கொள்ளையிட்டு, அது துரோகமல்ல என்பவன் பாழ்க்கடிக்கிற மனிதனுக்குத் தோழன்”(நீதி 28:7,24). இன்னின்னாரோடு நீ சேரக்கூடாது என்று கண்டித்திருக்கிறார்களா? அவர்களுக்குச் செவிகொடு. உன் தகப்பன் புத்தியைக் கேள்... பாவிகள்... எங்களோடே வா என்று சொல்வார்களாகில், என் மகனே, நீ அவர்களோடே வழிநடவாமல், உன் காலை அவர்கள் பாதைக்கு விலக்குவாயாக” (நீதி 1: 8–15). பிள்ளைகளின் கெட்ட சேர்க்கையால் அவமானப்படும் பெற்றோர் எண்ணற்றோர்! பெற்றோரோடு உறவை முறித்துக்கொண்ட விவரமறியாப் பிள்ளைகளை வேட்டையாடிப் போதை மருந்துகளுக்கு அடிமைகளாக்குகின்றனர் நண்பர்! ஞானமாய் நடந்து உன்னைக் காத்துக்கொள்.

உன் பெற்றோரின் பணத்தையோ பொருளையோ திருடிவிட்டு ‘அது எனக்குந்தானே ஒரு வகையில் உரியது’ என்று உன் மனச்சாட்சியின் வாயை அடைத்ததுண்டா? அது உன்னுடையது அல்ல. அவர்களோடு இன்றே உன் கணக்குகளைச் சரிசெய்.

நற்குணத்தின் விலை அதிகரிக்கும்போது உலக ஞானிகள் பெற்றோரைக் கனம்பண்ண மலிவான முறைகளைக் கண்டுபிடிக்கின்றனர். இப்படிப்பட்ட நவீன நற்குணங்களுக்கு இயேசு சாட்டையடி கொடுத்தார்: “நீங்களோ எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக்கையாகக் (கோவிலுக்கு) கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது தாயையாவது கனம் பண்ணாமற் போனாலும், அவனுடைய கடமை தீர்ந்ததென்று போதிக்கிறீர்கள். மாயக்காரரே” (மத் 15:4-7). பிரியமானவரே, தேவனுடையதை தேவனுக்கும், இராயனுடையதை இராயனுக்கும், பெற்றோருக்குக் கொடுக்க வேண்டியதை பெற்றோருக்கும் கொடுங்கள். இயேசுவோ அவரது பிதாவோ இப்படிப்பட்ட பகற்கொள்ளையைச் சகிக்கவே மாட்டார்கள்.

## 6. சகோதர சிநேகம்

சகோதரரிடையே ஒருமனப்பாடு பெற்றோரைக் கனம்பண்ணும். எட்டுப்பேரில் ஒருவனான தாவீது இதை நன்கறிந்திருந்தான். ஆகவேதான் பாடினான்: ''இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது. அது சிரசின்மேல் ஊற்றப்பட்ட நல்ல தைலத்துக்கு ஒப்பாயிருக்கிறது'' (சங் 133).

யோபுவின் பிள்ளைகள் நல்ல எடுத்துக்காட்டு. அவர்கள் கிரமமாக ஒன்றுகூடி மகிழ்ந்தனர். சகோதரர் தங்கள் சகோதரிகளைச் (பாகப்பிரிவினைச் சண்டைக்காக அல்ல) சந்தோஷமாய்ப் பொழுது போக்க அழைப்பார்கள் (யோபு 1:4). கூடி வாழும் குடும்பமே ஆனந்தக் குடும்பம். உணவருந்தும் வேளையில் வீட்டாரனைவரோடும் சேர்ந்துகொள். குடும்ப ஜெபத்திலும் கூடிக்குலாவும் நேரத்திலும் கலந்து கொள்ளும்படி உன் அலுவல்களுக்கு வேறு நேரம் ஒதுக்கு. பிள்ளைகள் மேசையைச் சுற்றி ஒலிவமரக் கன்றுகளைப் போலிருப்பதே பெற்றோரின் ஆசீர்வாதம் (சங் 128:3).

ஒருமனப்பாடே குடும்பத்தின் பலம். அதை எல்லாக் காவலோடும் காத்துக்கொள். பிள்ளைகளிடையே பிசாசு சண்டையின் விதைகளை விதைப்பான். மத் 5:22–24;18:15,21,22 மனனம் செய். 70x7 என்ற நினைவூட்டும் சின்னமொன்றை மேசையில் வைத்துக்கொள். சகோதர சிநேகத்தைப் பயிற்சிக்கும்போது யோவானின் நிருபங்களைத் திரும்பத் திரும்ப வாசி. உடைந்த உறவுகளைச் செப்பனிட்டு உன் பெற்றோரின் சிரசில் பரிமள தைலத்தைப் பூசு.

## 7. கடிந்துகொள்ளப்படுதல்

பெற்றோர் உன்னைக் கடிந்துகொள்ளுவதோ அடிப்பதோ வேதத்திற்கடுத்ததே. இன்று அவர்கள் இப்பொறுப்பைச் செய்யாவிடில் நாளை நீ நரகம் செல்வாயே. உனக்குத் தெரியாத உலகத்தின் ஆபத்துக்களினின்று இது உன்னைத் தற்காக்கும். உன் பெற்றோரோடு நீ இருக்கும் நாட்கள் உன் பிற்கால வாழ்க்கைக்குப் பயிற்சியாகும். ''தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனிதனுக்கு நல்லது'' (புல 3:27). நுகம் கனக்கும், வேதனை தரும், உன் மனம்போன போக்கில் உன்னைப் போகவிடாது; ஆனால் பாதுகாவலானது. ''மனிதனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள்'' (நீதி 14:12). பெற்றோரின் கடிந்துகொள்ளுதல்கள் தேவனது அன்பின் சிட்சைக்கு ஒப்பானவை. ''தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார் (நீதி 3:12). பெற்றோர் உன்னைத் திட்டும்பொழுதெல்லாம் உன்னை நேசிக்கிறார்கள் என்பதை நினைத்துக்கொள்.



புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் தங்கள் பரிசுத்த வாழ்க்கையைக் குறித்து எபிரெயரின் பக்கங்களிலிருந்து அழகாய் அறைகூவுவதைக் கேள்: ''அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்தோம்... எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்'' ( 12:9–11).

## 8. பெற்றோரைக் கவனித்தல்

பெற்றோருக்குக் கடனடைக்க சரியான வேளை அவர்கள் உன் கையை எதிர்நோக்கி இருக்கும்போதுதான். பெற்றோரைக் கவனிக்காத நமது பாவத்தின் விளைவுகளே முதியோர் இல்லங்கள். தாவீது கடைக்குட்டியாயிருந்தும் இப்பெரும் பொறுப்பை ஏற்றிருந்தான். (1 சாமு 22:3,4). அவன் காரியங் களெல்லாம் நன்மையாய் முடிந்து பூமியிலே அவன் வாழ்நாள் நீடித்து நல்ல முதிர்வயதில் அவன் மரித்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. ''தன் தகப்பனைக் கொள்ளையடித்து தன் தாயைத் துரத்திவிடுகிறவன் இலச்சையையும் அவமானத்தையும் உண்டாக்குகிற மகன்'' (நீதி 19:26). ''விதவையான வளுக்குப் பிள்ளைகளாவது, பேரன் பேத்திகளாவது இருந்தால், இவர்கள் முதலாவது தங்கள் சொந்தக் குடும்பத்தைத் தேவபக்தியாய் விசாரித்து (கவனித்து) பெற்றோர் செய்த நன்மைகளுக்குப் பதில் நன்மைகளைச் செய்யக் கற்றுக்கொள்ளக்கடவர்கள்; அது நன்மையும் தேவனுக்கு முன்பாகப் பிரியமுமாயிருக்கிறது... ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால் (கவனியாமற்போனால்), அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப் பான்'' (1தீமோ 5:4,8).

## 9. ஆசீர்வதித்தல்

''தன் தகப்பனையாவது தன் தாயையாவது சபிக்கிற எவனும் கொலை செய்யப்படக்கடவன்; அவன் தன் தகப்பனையும் தன் தாயையும் சபித்தான். அவன் இரத்தப்பழி அவன் மேல் இருப்பதாக'' (லேவி 20:9).

விளக்கமுடியாத இருள் உன்னைக் கலங்கடிக்கிறதா ? வழி நடத்துதல் இல்லையா ? மேலும் மேலும் காரிருள் சூழ்ந்து உன்னைத் திக்குமுக்காடச் செய்கிறதா ? ''தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவனுடைய தீபம் காரிருளில் அணைந்துபோம்'' (நீதி 20:20). ''தங்கள் தகப்பனைச் சபித்தும், தங்கள் தாயை ஆசீர்வதியாமலும் இருக்கிற சந்ததியாருமுண்டு... தகப்பனைப் பரியாசம்பண்ணி, தாயின் கட்டளையை அசட்டைபண்ணுகிற கண்ணை நதியின் காகங்கள் பிடுங்கும், கழுகின் குஞ்கள் தின்னும்'' (நீதி 30:11,17).

எச்சரிக்கையாயிரு. ‘‘உங்களை வெறுக்கிறேன்’’ ‘‘அந்தக் கிழவன்’’ ‘‘அந்தக் கிழவி’’ ‘‘சீ’’ ‘‘உனக்கென்ன’’ போன்றவையோ எரிச்சலோடு ஒரு சத்தத்தையோ கூட நீ உச்சரிக்கக்கூடாது. பெற்றோரைக் குற்றஞ்சாட்டாதே. அவர்களது ‘‘இல்லை’’ ‘‘முடியாது’’ என்னும் பதில்கள் வேதனையளித்தாலும் பணிவோடு ஏற்றுக்கொள்ளப் பழகு. கெட்ட வார்த்தைகளைப் பேசாதே. பதில் சொல்லும்போது சத்தத்தை உயர்த்தாதே. அவர்களுக்கு விரோதமாய்க் கையை ஓங்கவோ, அடிக்கவோ, அவர்கள் மேல் பொருட்களை வீசவோ உனக்கு அதிகாரமில்லை. நாவையும் ஆவேசத்தையும் அடக்கப் பழகு.

### முடிவுரை

கெட்ட குமாரனைச் சிந்தித்துக்கொள். கடினமான வழியிலே படிப்பினையைக் கற்றுக்கொண்டான். தனக்கு நன்மையாய்த் தோன்றின வழியிலே சென்றான். மண்ணும், பொன்னும், பெண்ணும் இருந்தால் அதுவே வாழ்க்கையென்று எண்ணினான். பெருந்தவற்றைச் செய்துவிட்டான். பெற்றோர் வேண்டு மென்பதைப் பிந்தியே உணர்ந்தான். பாவங்கள் யாவும் மன்னிக்கப்படலாம். ஆனால் சில பாவங்கள் ஆறினாலும் அழிக்க முடியா தழும்பை வாழ்க்கையில் ஏற்படுத்திவிடும். அவற்றினின்று உன்னைப் பாதுகாக்கவே பெற்றோர் உள்ளனர். எதிர்பாராத திடுக்கிடுதல்களையும், ஏமாற்றங்களையும், சோகக் கட்டங்களையும் வாழ்க்கையில் நீ சந்திப்பதைத் தவிர்க்க விரும்புகின்றனர். அவர்களை விட்டுத் தூரம் சென்றிருப்பாயானால் இன்றே அவர்கள் அரவணைப்பிற்குள் ஓடிவா. ‘‘இவன் என்னுடைய நேசகுமாரன்; இவனில் பிரியமாயிருக்கிறேன்’’ என்று அவர்கள் சொல்லும்வரை பிரயாசப்படு.

செல்வந்தனாகிய ஒரு வாலிபன் இயேசுவிடம்: உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்ற கற்பனையைக் கைக்கொள்ளுகிறேன் என்று சொன்னபோது ‘‘இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்தார்’’ (மாற் 10:21). அந்த தேவ அன்பு உன்மேல் தங்கியிருப்பதாக!



# 6
# உங்கள் பிள்ளையோடு சிநேகமாயிருப்பது எப்படி

இத்தலைமுறைப் பிள்ளைகள் நிச்சயம் வேறுதான். பெற்றோரின் அதிகாரத்தை சவால்விட்டு நமது அடக்குமுறைகளை அவமதிக்கிறார்கள். சோதோம் கொமோராவின் நாட்களுக்கு நேராக ஓடிக்கொண்டிருக்கும் நமது பிள்ளைகளுக்குப் பாதுகாவல் அவர்களை அன்பின் கயிறுகளால் நம்மோடு சேர்த்துப் பிணைத்துக்கொள்ளுதலே. அவர்கள்மேல் கசப்பை வைத்து அவர்கள் விரோதத்தைச் சம்பாதிக்காதீர்கள். உங்கள் சொந்தப் பிள்ளையோடு சிநேகமாவதற்கு இதோ சில ஆலோசனைகள்:

**உங்கள் பிள்ளைக்காய் வைத்துள்ள மனக்கோட்டைகளை தகர்த் தெறியுங்கள்.** மிக உற்சாகமாய் மனக்கோட்டை கட்டும் பெற்றோர் தங்கள் பிள்ளையை அண்டசராசரங்களிலும் ஒப்புநிகரற்றவனாகக் காண்கிறார்கள்! மிக இள வயதிலேயே தங்கள் பிள்ளையின் எதிர்காலத்தைத் திட்டமிட்டு அவன் வலது, இடது புறம் சாய்ந்தால் தவியாய்த் தவிக்கிறார்கள். மிகச் சீக்கிரமாய்ப் பிள்ளைகளை நமது எண்ணம்போல் மாற்றிவிட முனைந்து அவர்களது இயற்கை இயல்புகளை விலங்கிடக்கூடாது. தன் 5 வயது பிள்ளையில் உலகப் பிரசித்திபெற்ற ஓர் மிஷனரியைக் கண்டதொரு தாயை அறிவேன். அதனால் அப்பிள்ளை ஒரு சிறு குறும்பு செய்தாலும் அந்தத் தாய் மனமுடைந்துபோவாள். தன் மனோராஜ்யத்தில் ஏமாற்றமடையும்போதெல்லாம் பிரம்பைக் கையாடி பிள்ளையின் விரோதத்தைச் சம்பாதித்தாள். பெற்றோர் வெளியே செல்லும் போதெல்லாம் பிள்ளை களிப்பினால் துள்ளும்! உங்கள் மனக்கோட்டைக்குள் பிள்ளையைத் திணிக்காதீர்கள். பிள்ளையின் இயற்கைத் தாலந்துகளைக் கண்டுபிடித்து அதைத் தேவன் பக்கமாய்த் திருப்பிவிடுங்கள். அவனது முடியாமையையும் ஏற்றுக்கொள்ளுங்கள். அவனால் சாதிக்க முடியாததாய்க் காணும் குறிக்கோளுக்கு நேரே அவனை அடித்துத் துரத்தாதீர்கள்.

**பிள்ளையைப் பிள்ளையாய்க் காணுங்கள்.** முதிர்ச்சியையோ பிழையின்மையோ எதிர்பார்க்காதீர்கள். பிள்ளை பிள்ளைதான். அவன் குறும்பு

செய்வான், கீழ்ப்படியமாட்டான், பொய்சொல்லுவான், பள்ளியில் படித்துவந்த கெட்ட வார்த்தைகளைப் பேசுவான்... உடனே வெளுத்து நிமிர்ந்து விடாதீர்கள். பிழையின்மையை எதிர்பார்க்கும் பெற்றோர் பிள்ளைக்கு மனச்சலிப்பானவர்கள். உட்கார்ந்து அவன் செய்த காரியத்தை அவனுக்கு விளக்குங்கள். தேவன் பாவத்தை வெறுக்கிறார் என்பதைப் புரியவையுங்கள். நமது கட்டளைகளைவிட தேவனது கற்பனைகள் மேலானவை. அது ஜீவனும் வல்லமையுள்ளதாயும் அவனது பிற்காலத்திற்கு மேன்மையான அடித்தளமாகவும் இருக்கும். திரும்பச் செய்தால் தண்டிக்கப்படுவான் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.

**உங்கள் பிள்ளைப் பருவத்தை நினைத்துக் கொள்ளுங்கள்.** ஒருநாள் என் மகளைக்குறித்து என் தாயாரிடம் குறைகூறிக்கொண்டிருக்கும்போது இது ஒரு வெளிப்பாடுபோல் பளிச்சிட்டது. என் ஞானமுள்ள தாய், 'நீ இருந்ததைவிட உன் மகள் பரவாயில்லை' என்றார்கள்! என் பிள்ளையைத் திருத்தும்போது, நான் பயத்தினால் என் பெற்றோரிடம் பொய் சொன்னதையும், கோபக்காரியும், தொட்டால் சிணுங்கியும், அன்பற்றவளும், இப்படியாக இருந்ததையெல்லாம் நினைத்துக் கொண்டு அவளை மெதுவாய் நடத்த முயற்சிக்கிறேன். ஆவேசங்கொண்டு பிள்ளையை அடிக்காதீர்கள். முன்கூட்டியே திட்டம்பண்ணி நிதானமிழக்காமல் அடியுங்கள்.

**குறும்புக்கும் பாவத்திற்கும் வேறுபாடு கண்டுகொள்ளுங்கள்.** பாவத்தை விளக்கி, எச்சரித்துக் கண்டிக்கவேண்டும். குறும்பை அவ்வளவு கடினமாய் நடத்தத் தேவையில்லை. சிறு தொல்லைகளுக்கெல்லாம், முக்கியமாக மற்றவர்கள் இருந்தால், பிள்ளையைத் தண்டிக்க முற்படுகிறோம். இதனால் பாவம் என்றால் என்ன என்று பிள்ளை புரிந்துகொள்ளத் தவறிக் குழப்பமடைகிறது. திரும்பத் திரும்ப எச்சரித்தும் பிள்ளை குறும்பு செய்தால் அது கீழ்ப்படியாமையின் பாவமாகிவிடுகிறது.

**கண்டிப்பதில் உறுதியாயிருங்கள்.** பிள்ளைக்கு ஒரு கட்டளை கொடுத்து, அதை அவன் நன்றாய்ப் புரிந்தும் (காரணமின்றி) செய்யாமலிருப்பானானால் தண்டிக்கத் தவறாதீர்கள். உங்கள் பொறுமையையும் சாவதானத்தையும் இழந்துவிடாதீர்கள். அடிகொடுப்பதைத் தவிர்க்கும்படியாய் நாம் போராட்டத்தை நீட்டி, முழக்கி, கத்தி, பயமுறுத்தி, நமது நற்பண்புகளையும் இழந்து விடுகிறோம். அரைகுறை அடக்குமுறைகளில் ஆண்டுகளை வீணாக்காதீர்கள். அடக்குதல் பிள்ளைக்குப் பாதுகாவலின் உணர்வை அளிக்கிறது.

**பிற்கோபம் வேண்டாம்.** இரவுவரை எரிச்சலோடு இருக்காதீர்கள். தண்டித்தபின் எப்பொழுதும்போல் நடந்துகொண்டு அன்புகாட்டுங்கள்.



பவுலிடத்தில் பெற்றோருக்குத் தேவையான பொன்னான குணங்களைக் காணலாம். "உங்களிடத்தில் **பட்சமாய்** நடந்து கொண்டோம்; பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் **காப்பாற்றுகிறதுபோல,** நாங்கள் உங்கள் மேல் **வாஞ்சையாயிருந்து**...தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லு கிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் **புத்தியும், தேறுதலும், எச்சரிப்பும்** சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்" (1 தெச 2:7,8,12). இங்கு தராசு, கண்டிப்பின் பக்கத்தைவிட அன்பின் பக்கமே சாய்வதை எளிதில் காணலாம். மறுபக்கம் சாய்ந்துவிடாமல் ஜாக்கிரதையாயிருங்கள். அலறிவிட்டு அவன் பதிலுக்கு அலறினால் ஆத்திரம் கொள்ளாதீர்கள். மனத்தாங்கல் ஏற்பட்டால் முதலாவது உட்கார்ந்து அவன் சொல்வதைக் கவனியுங்கள். பின்புபேசி காரியத்தைச் சரிசெய்யுங்கள்.

**பிள்ளையைப் புரிந்துகொள்ளுங்கள்.** உங்கள் 10 அல்லது 11 வயது பிள்ளை பால் சம்பந்தமான காரியங்களைப்பற்றி பேசிக் கொண்டேயிருந்தால் பயந்துவிடாதீர்கள். கோபாவேசமாய் அடக்கி பால் சம்பந்தப்பட்டக் காரியங்கள் மிக மோசமானவை என்ற எண்ணத்தை ஊட்டாதீர்கள். விடுதலையோடு பேசி தன் உள்ளத்தை வெளிக்காட்ட இடங்கொடுங்கள். பின்பு மெதுவான பதிலோடு விளக்கமும் திருத்தமும் அளியுங்கள். வீட்டில் பிள்ளைக்குத் தேவை பெற்றோர்தானேயொழிய பிரசங்கியல்ல! பால் சம்பந்தப்பட்டவையோ, வேறெதுவோ, என்ன பிரச்னையானாலும் நீங்கள் பொறுமையோடு கேட்டு உதவி செய்வீர்கள் என்கிற நம்பிக்கை பிள்ளைக்கு உருவாகட்டும். உங்களையே உண்மையாகவும் வெளிப்படையாகவும் தன் சந்தேகங்களைத் தீர்க்கும் நபராக அவன் கொள்ளட்டும்.

**பிள்ளையை ஏமாற்றாதீர்கள்.** அவனிடம் பொய் சொல்லாதீர்கள். தவிடு கொடுத்துப் பிள்ளை வாங்கும் கதையெல்லாம் இந்தக்காலம் செல்லாது. வயதிற்கேற்ற விளக்கம் கொடுங்கள். பள்ளியில் கண்ட கதையும் கேட்கிறார்கள். நீங்கள் உங்கள் பிள்ளைக்குத் தெரியும் என்று நினைப் பதைவிடக் கூடுதலாகவே அவனுக்குத் தெரியும். அவனுடைய உலகம் தவறானவைகளைச் சொல்லித்தரும் பிள்ளைகள் நிறைந்தது. நீங்கள் முதலாவது சரியானவைகளைச் சொல்லிக் கொடுத்துவிடுங்கள். அவ்வப்போது திடீரென்று பள்ளிக்கும் விளையாடும் இடத்திற்கும், பிள்ளை சென்றிருக்கும் சிநேகிதன் வீட்டிற்கும் விஜயம் செய்யுங்கள்; ஆனால் துப்பறியும் சங்கர்லால் போல் காட்டிக்கொள்ளாதீர்கள்! கொடுத்த வாக்கைக் காப்பாற்றுங்கள். ஏதாவது காரியம் ஆகவேண்டிய பொழுதெல்லாம் 'பூச்சாண்டி வருகிறான்' என்று பயமுறுத்தாதீர்கள்.

**பிள்ளையோடு விளையாடுங்கள்.** இது பிள்ளை வளர்ப்பில் ஒரு முக்கிய

அம்சமாகும். என் பிள்ளையிடமிருந்து நான் பெற்ற நற்சாட்சி, அவள் என்னைக் கட்டிப் பிடித்து, "அம்மா, உலகத்திலேயே நல்ல அம்மா நீங்கள்தான். எந்த அம்மாவும் உங்களைப்போல் விளையாடுவதில்லை" என்றதுதான். ஒவ்வொரு தாயும் தன் பிள்ளைக்கு உலகத்திலேயே சிறந்த தாயாகிவிடவேண்டும். பிள்ளையோடு விளையாடுவது நேரத்தை வீணடிப்பதென எண்ணி குற்றவுணர்வு கொள்ளாதீர்கள்.

**பிள்ளை பேசும்போது கவனியுங்கள்.** கன்னா பின்னாவென்று பேசினாலும் பரவாயில்லை! அவன் பேசும்போது தைத்துக் கொண்டோ வாசித்துக்கொண்டோ இராதீர்கள். அவன் பேசுவதில் சுவாரஸ்யம் காட்டுங்கள். அடிக்கடி அவனோடு உலாவச் செல்லுங்கள். பெற்றோரோடு விடுதலையோடு நேரம் செலவழித்தால்தான் பிள்ளை விடுதலையோடு தன் மனதைத் திறக்கமுடியும். உங்களை அவள் திருத்தவும் அனுமதி கொடுங்கள். அவள் உங்களைக் குற்றஞ்சாட்டும்போது கொதிக்காதீர்கள். அதைக் குறித்து சிந்தித்து ஆராய நேரமெடுத்து, மெய்யானால் ஒத்துக்கொள்ளுங்கள்.

**தாழ்மையோடிருங்கள்.** மன்னிப்புக் கேட்கத் தயங்காதீர்கள். ஒரு தம்பதியரை அறிவேன். அவர்களது மகன் பள்ளியிலிருந்து வந்து பரீட்சை நன்றாகச் செய்யவில்லை என்றதும் அடி அடியென்று அடித்தனர். மதிப்பெண்கள் வந்ததும் பார்த்தால் பையன் வகுப்பில் இரண்டாவது இடம் பெற்றிருந்தான். பெற்றோர் இரகசியமாய் துக்கமுற்றாலும் விட்டுக்கொடுக்காமல் ஏன் முதலிடம் பெறவில்லை என்று மறுபடியும் அடித்தனர். இது சரியில்லை அல்லவா ? எந்தப் பெற்றோரும் அனுபவசாலிகள் இல்லை. எல்லாப் பெற்றோரும் முதல் பிள்ளைக்குப் பிறகுதான் கற்கத் துவங்குகிறார்கள். எல்லாப் பெற்றோரும் தவறிழைக்கத்தான் செய்கிறார்கள். நாமும் மனிதர்தான் என்று பிள்ளைகள் அறியட்டுமே.

**பிள்ளையைப் பாராட்டுங்கள்.** எவ்வளவு தண்டனை கொடுக்கிறோமோ அவ்வளவு பாராட்டும் கொடுக்கவேண்டும். முயற்சி எடுத்துப்படிக்கும் பிள்ளை, வீட்டில் உதவிசெய்யும் பிள்ளை, உடனே கீழ்ப்படியும் பிள்ளை ஒரு ஆதாயமும் பெறவேண்டும். ஒரு சிறு பாராட்டுச் சொல்லும் அவனை உற்சாகப்படுத்தும்.

**பிள்ளையை மற்றப் பிள்ளையோடு ஒப்பிடாதீர்கள்.** இது பிள்ளைக்குத் தன்னைக் குறித்த குறைவெண்ணத்தை உருவாக்கும். ஒரு பிள்ளை மறுபிள்ளையைப்போல் இருக்காது. பிள்ளைக்குக் குறையேதும் உண்டானால் அப்பகுதியில் அக்கறையாகவே இருங்கள். பிள்ளைகளிடையே பாரபட்சம் காட்டாதீர்கள். ஏசா யாக்கோபைப்போல அவர்கள் வாழ்நாளெல்லாம் பிரிவினை பாராட்ட நேரிடலாம். பிறர்முன் (குறிப்பாக நண்பர்கள் முன்) குற்றஞ்சாட்டி அவமானப்படுத்தாதீர்கள். பிள்ளைகள் அனிச்சமலர் போன்றவர்கள்.



மரியாதையோடு நடத்துங்கள்.

**பிள்ளையைக் கைவிடாதீர்கள்.** பிள்ளை பெரும் தவறிழைத்து ஒன்றும் செய்யமுடியாத நிலை வரலாம். அவளுக்குப் போக வேறு இடமில்லை என்பதற்காக சொற்களினாலும் செயல்களினாலும் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சி அவளை அவமதிக்காதீர்கள். எதிர்காலத்திற்கு அவளைக் கட்டி எழுப்புங்கள். கெட்ட குமாரனின் தகப்பன் அப்படித்தானே ?

**பிள்ளை கேட்பதையெல்லாம் கொடுக்காதீர்கள்.** "இல்லை" என்று தைரியமாய்ச் சொல்லுங்கள். அவனைப் புண்படுத்தி விடுவோமா என்று பயப்படவேண்டாம். பிள்ளை வளர்ப்பில் உடனடிச் சமாதானத்தை நாடிக் காரியங்களைச் செய்யாமல் அவர்களது எதிர்கால நன்மையையே நாடிச் செயல்படுங்கள். நீங்கள் வசதியுள்ளவர்களாயிருந்தாலும் பிள்ளையை எளிமையாகவே வளர்த்திடுங்கள். நாளைய உலகிற்கு அதுவே நல்லது. பணத்தின் மதிப்பைக் கற்பியுங்கள். உணவையோ பொருட்களையோ வீணாக்க விடாதீர்கள்.

**பிள்ளைக்காய் ஜெபியுங்கள்.** அவனோடுகூட ஒழுங்காய் ஜெபியுங்கள். தாய்மார் தங்கள் பிள்ளைகளை இயேசுவினிடத்தில் ஆசீர்வதிக்கும்படி கொண்டுவந்தார்கள். யோபு பிள்ளைகளை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து அவர்களுக்காக பலிசெலுத்தி வந்தான். தேவன் ஆசீர்வதிக்கும்படியாக நம் பிள்ளைகளை எப்பொழுதும் கிருபாசனத்திற்கு முன்பாக ஏந்தி நிற்போமாக.

**பிள்ளையைக் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில் வளர்த்திடுங்கள்.** எனக்காக ஜெபித்தபோது என் அப்பாவின் கண்கள் கலங்கியதை நினைவுகூருகிறேன். என் அம்மா என் படுக்கையில் அமர்ந்து, "மகளே, இன்று உன் இருதயத்தை ஆராய்ந்து பார்த்தாயா ?" என்று இனிமையாகக் கேட்ட காட்சி இன்னும் என் மனக் கண்களை விட்டகலவில்லை. அவர்கள் எனக்குச் செய்த பேருதவி என் மனச்சாட்சியைப் பழக்குவித்ததே. எனக்காய் அவர்களே யாவற்றையும் தெரிந்தெடுத்துக் கொடுக்கவில்லை. வாழ்க்கையில் நலமானவைகளைத் தெரிந்தெடுக்கப் பழக்குவித்து என் காலிலே நான் நிற்கும்படிச் செய்தார்கள். "குணசாலியான தாய் தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள்: தயையுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது. அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்காயிருக்கிறாள். அவள் பிள்ளைகள் எழும்பி, அவளை பாக்கியவதி என்கிறார்கள் !"

கர்த்தருடைய கற்பனைகளைப் பிள்ளைகளுக்குப் போதிக்கக் கட்டளை பெற்றிருக்கிறோம். "நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கும்போதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசு" (உபா 6:7). பிள்ளைகளுக்கு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய அடிப்படைப் பண்புகளைப் போதியுங்கள். முன்மாதிரியாயிருங்கள். நமது நற்குணங்களையும் துர்க்குணங்களையும் அப்படியே படித்துக்கொள்வார்கள். தாய்மார் தங்கள் பிள்ளைகளிடத்தில் அன்புகூரவும், தகப்பன்மார் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்க்கவும் கடமைப்பட்டிருக்கிறோம் (தீத்து 2:4; எபே 6:4). தினமும் காலையில் எழவும், ஜெபிக்கவும், வேதத்தை வாசிக்கவும் பழக்குவியுங்கள். வாசித்த பகுதியில் ஒரு சில கேள்விகளைக் கேட்டு அப்பகுதியை எளிமையாய் விளக்குங்கள். வசனங்களை மனனம் செய்ய உதவி செய்யுங்கள். அவர்கள் வளர வளர கூடுதலாய் ஜெபிக்க கற்பியுங்கள்.

**கடைசியாக, மிகப்பிரதானமாக, கர்த்தரை நம்புங்கள்.** அவரது வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொள்ளுங்கள். பிரம்பைக் கையாடுவதினால் எதையும் சாதித்துவிடலாம் என்ற எண்ணம் வேண்டாம். தேவன் தமது பங்கை நிறைவேற்றும்படிக் கோருங்கள். இல்லாவிடில் உங்கள் காரியம் என்று நீங்கள் நினைப்பதில் அவர் தலையிடமாட்டார். ஒருநாள் தேவனது சமூகத்தில் நெடுஞ்சாங்கிடையாய் விழுந்து என் தோல்வியை அறிக்கையிட்டேன். தமது கையில் பொறுப்பையெடுத்து ஏதாவது செய்யும்படியாய் மன்றாடினேன். அற்புதங்கள் நிகழ ஆரம்பித்தன. பிசாசிடம் இழக்கும்படியாக தேவன் நமக்குப் பிள்ளைகளைக் கொடுக்கவில்லையே. பிள்ளை சீரழிவது தேவனது சித்தமேயில்லை. "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி; அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" என்பதே அவருடைய பரிபூரண சித்தம் (அப் 16:31; ஆதி7:1). கண்ணீரைத் துடைத்துக்கொள்ளுங்கள். தேவனோடு ஒத்துழையுங்கள். பிள்ளைகளின் இரட்சிப்பைக் கண்டு களிகூருங்கள்.

"பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளை களுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்" (மல் 4:6).



# 7
# நேசிக்கப்படத்தக்கவராதல்

தேவனுடைய பிள்ளை ஒவ்வொருவரும் நேசிக்கப்படத்தக்கவராயிருத்தல் அவசியம். பயனுள்ள சாட்சிகளாக இருக்க வாஞ்சிப்போர் கிறிஸ்தவரையும் கிறிஸ்தவரல்லாதோரையும் கவரும் விதத்தில் நடந்து கொள்ளவேண்டும். ஆலோசனை ஊழியத்தைக் குறித்து ஆழ்கடல் அறிவுடையோராயிருக்கலாம். ஆனால் ஆலோசனைக்காக யாரும் உங்களை நாடாவிடில் பயனென்ன? ஆத்தும ஆதாய பாரம் உங்களை உந்தித் தள்ளலாம்; ஆனால் அண்டிவருவோரை உதைத்துத் தள்ளும் குணமுடையவராயிருப்பின் என்ன பயன்? மக்கள் நம்மிடம் ஓடி வரும்படி நடந்துகொள்ள வேண்டும். நேசிக்கப்படத்தக்கவராதல் எவ்விதம் என்று ஆராய்தல் நம் வாழ்க்கையின் பல பகுதிகளை மாற்றியமைத்துவிடும். சிலர் இயற்கையாகவே மற்றவரன்பைக் கவர்ந்து விடுகின்றனர்; வேறு சிலர் பாடுபட்டு அப்பாடத்தைக் கற்கவேண்டியிருக்கிறது. துரதிர்ஷ்டவசமாய் நீங்கள் ஒரு துரத்துபவராய் இருந்தால், இதோ கற்றுவரும் மற்றோர் துரதிர்ஷ்டசாலியினிடமிருந்து நேசிக்கப்படத்தக்கோராவதற்கு இங்கே சில ஆலோசனைகள். வாழ்நாளெல்லாம் கற்கவேண்டிய இப்பாடத்தை இன்றே துவங்கிவிடுங்கள்.

**1. நேசிக்கப் படியுங்கள்.**

நேசிக்கும் ஒருவரை உலகமே நேசிக்கும். அளவு கடந்த நேசராகுங்கள். முதலாம் கற்பனைக்கு இணையான இயேசுவின் இரண்டாம் கற்பனை இது. உலகம் நேசிக்காமல் துடைத்து எறிந்துவிட்ட மூன்று கூட்ட மக்களிடம் உங்கள் சிந்தனையைத் திருப்ப விரும்புகிறேன். தேவனின் அன்பை ருசித்த நாம் இவர்களை நோக்குவது நலம்.

**அ) அழகற்றோர்** :அழகான நபருக்கு உலகம் எதையும் அள்ளித்தரும். உலகம் கேட்பது அழகு. சிவந்த மேனியான சிங்காரக் குழந்தை உலகம் தன்னை நேசிக்கிறதென்பதை நன்றாய் அறிந்து கொள்ளுகிறது. கன்னத்தில் கிள்ளுகள், கட்டி முத்தங்கள்! இரு சிறுவர் ஒரே விடையைத் தந்தால் ஆசிரியர்

தன்னை அறியாமலேயே பார்வைக்கு அழகானவனுக்கு ஒரு மதிப்பெண் கூட்டிப் போடுகிறார். கிறிஸ்துமஸ் நாடகத்தில் தேவதூதர் இவர்கள்தான். மேடையில் ஒரு கருத்த தேவ தூதனைக் கண்டதில்லை யான்! "அம்மா, போன வருடமும் என்னைத் தூதனாய் வைக்கவில்லை. இந்த வருடமும் இல்லை" என்று சிறுமியொருத்தி தன் தாயினிடம் சொல்வதைக் கேட்டேன். ஆவி கலங்கியது. பாவம், இந்த உலகம் தன்னை ஏற்றுக்கொள்ளுமா என்று பார்க்க ஓராண்டாய் ஏங்கிக் காத்திருக்கிறாள். அழகிய பெண்களுக்கு அடிதடி போட்டி. அழகற்றோர் மணமகனுக்குக் காத்துக் காத்து அலுத்துப் போகின்றனர்! உலகம் அழகு அழகு என்று அலறுகிறது. அழகற்றோர் தெருவில் கவனிப்பாரற்று, பள்ளியில் கேட்பாரற்று, வாழ்க்கையில் உயர்த்துவாரற்று கடந்து செல்கின்றனர். அன்னாருக்குக் காட்டும் அன்பு அவரை உடனடியாய் மலரச்செய்கிறது; தன்னம்பிக்கையூட்டி, தலைநிமிர்ந்து நடக்கச் செய்கிறது. ஏன் அவர்கள் வெட்கத்தோடும் பயத்தோடும் இருக்க வேண்டும்? உங்கள் நேசத்தால் அவருக்கு நல்லுணர்வு அளியுங்கள். அன்பு ஒருவரது அடைபட்ட ஆவிக்கு விடுதலை அளிக்கிறது.

**ஆ) அறிவற்றோர்** :அடுத்தபடியாய் உலகம் கேட்பது அறிவு. முதல் மாணவன் யாவராலும் நேசிக்கப்படுகிறான். அவனது அற்ப தமாஷிற்கும் வகுப்பே குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கிறது. வகுப்பின் ராஜா அவன். ஆனால் அறிவில் குறைந்தவனோ தன் உரிமைகளைக்கூட இழந்துவிடுகிறான். ஆசிரியர் அவனைப் பார்த்தாலே முகத்தைச் சுளிக்கிறார். பெற்றோர் படிப்பை நிறுத்திவிடுவதாகப் பயமுறுத்துகின்றனர். பிறருக்கு நிகராய் தனக்கு ஏன் படிக்க முடியவில்லை என்று அவனுக்கே விளங்கவில்லை. முயற்சி செய்கிறான் — தோல்வியடைகிறான் — சோர்ந்து போகிறான். அறிவில் குறைந்தோரை உலகம் குப்பைத் தொட்டியில் போட்டு விடுகிறது. உலகம் தன்னை ஏற்றுக் கொள்ளாது என்பதை நாளடைவில் புரிந்து கொள்ளுகிறான். ஏதோ பெரிய பாவம் செய்துவிட்டதைப் போன்ற குற்றவுணர்வினால் வதைக்கப்படுகிறான். அவனது குற்றமோ ஒன்றுமில்லை, ஒன்றுமேயில்லை. முடங்கிக் கிடக்கும் இவர்களைப் புரிந்து கொண்டு, அன்பு காட்டி முன்னேறச் செய்வது நம் கடனாகும்.

**இ) ஆஸ்தியற்றோர்** : உலகம் தேடும் மூன்றாம் லட்சியம் பணம். பணம் பேசத்தான் செய்கிறது. படிக்காமல் சுற்றும் ஒருவன் டாக்டர் பட்டம் பெற்றுவிடுகிறான். அவனைக் காட்டிலும் நன்றாய்ப் படித்த அவனது நண்பன் வெறும் எழுத்தனாகவோ கடைநிலை ஊழியனாகவோ இருக்கிறான். பள்ளியைத் திணறித் திணறித் தாண்டிய இவள் பணமென்னும் மந்திர சக்தியிருந்தால் பாங்காய் வாழ்க்கைப்படுகிறாள். ஏழையை உலகம் எள்ளி நகையாடுகிறது. ஏன், உலகம் ஆலயத்துக்குள்ளேயே பணக்காரருக்குப்



பஞ்சுமெத்தை நாற்காலி போட்டுவிட்டு ஏழைக்குப் பண்போடு பாயைக் காட்டுகிறது.

உயர இருப்போரை இன்னும் உயரத்தள்ள உங்களைச் செலவிடாதீர்கள். தள்ளப்பட்டோருக்காய் உங்களை ஊற்றிவிடுங்கள். சரியாய் இயேசு சொன்னார்: "நீ விருந்து பண்ணும்போது ஏழைகளையும், ஊனரையும், சப்பாணிகளையும், குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்ய மாட்டார்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும்" (லூக் 14:13,14). இயேசு நடைமுறை மனிதர்!

ஆகவே நேசிக்கப்படாதோரை நேசித்தல் நம்மேல் விழுந்த கடமையாகும். 'அதிர்ஷ்டசாலியான' அவர்களது நண்பருக்கு இவ்வுலகில் இருக்கும் உரிமைகள் அவர்களுக்கும் உண்டு என்பதை நாம் அவர்களிடம் காட்டும் வழிந்தோடும் அன்பு தெரிவிக்கட்டும். அவர்களது மனக் குழப்பங்களிலிருந்து அன்பின் கரம் நீட்டி தூக்கி விடுவோம். ஆம், நேசிக்கக்கூடாதோரை நேசித்தலே அன்பெனும் பண்பாகும்.

**2. கேட்கப் படியுங்கள்.**

பிறர் நம்மிடம் வந்துபேச அழைக்க புன்னகை ஒரு சுலபமான வழி. எப்பொழுதும் அதைப் பயிற்சியுங்கள். இப்பரந்த உலகில் பிரச்சனைகளைப் பொறுமையாய்க் கேட்க அதிகம் பேர் இல்லை. பிரச்னைகளைப் பொழிவோரோடு பேசும்போது காதுகளுக்கு மூடும் சக்தி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணுகிறோம். ஆனால் பொறுமையாய்ச் செவிகொடாதோர் நேசிக்கப்படத்தக்கோராதல் சாத்தியமன்று. வழியோரப் பிச்சைக்காரனின் கூக்குரலுக்கு இயேசுவின் செவிகள் திறந்திருந்தன. "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்றார். யாக்போபும் "கேட்கிறதற்குத் தீவிரமாயும் பேசுகிறதற்குப் பொறுமையாயும்" இருக்கச் சொல்லுகிறார். "எப்படியிருக்கிறீர்கள்" என ஒருவர் உற்சாகமாய் விசாரித்தால், எப்பொழுது வியாதிப்பட்டீர்கள், எத்தனை நாட்கள், என்ன கஷ்டம், என்ன மருந்து, யார் பார்த்தது என்று வினவுகிறார்கள் என்று பூரித்துவிட வேண்டாம். ஊஹூம். உங்கள் பிரச்சனைகளை அடுக்க ஆரம்பித்தால் அடுத்த முறை உங்களை எட்டப் பார்த்தாலே விட்டால் போதுமென்று ஓடி விடுவார். ஆனால், "சுகம்தான், நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டு விட்டு **அவரது** பட்டியலைக் கேட்கப் பொறுமையாயிருந்தால் அவரை ஆதாயப்படுத்திக் கொண்டீர்கள். உங்கள் சாதனைகளையெல்லாம் சொல்லிவிட ஆத்திரப்படாதீர்கள். **அவரது** காரியங்களைக் குறித்து வினவுங்கள். அவர் பேசும்போது விருப்பத்தோடு கவனியுங்கள். அமைதியாய்க் கவனித்தல் ஆயிரம் வார்த்தைகளைப் பேசுவதற்கும் மேல். கரிசனை காட்டும் பாவனையோடிருங்கள். துன்பப்

படுவோருக்கு ஆறுதல் வார்த்தைகளைக் கூறுங்கள். மனதைப் புண்படுத்தும் வார்த்தைகளைச் சொல்லாமலிருத்தல் அவர்கள் தங்கள் இருதயத்தைத் திறந்து கொட்ட வழிதிறக்கும். அவர்களை வெட்கப்படுத்தும் கேலிகள் வேண்டாம்.

**3. ஏற்றுக்கொள்ளப் படியுங்கள்.**

மக்களது இயல்புகளுக்காய் அவர்களைக் குற்றப்படுத்தாமல், இருக்கும் வண்ணமாகவே அவர்களை ஏற்றுக்கொள்ளப் பாருங்கள். சிலர் வாயாடியாய், சிலர் அமைதலாய், சிலர் பெருமிதமாய், சிலர் கோபக்காரராய், சிலர் தொட்டால் சிணுங்கிகளாய், இப்படிப் பல்வேறாய் இருப்பர். ஒவ்வொருவரிடமும் குறைகளுண்டு. நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்ள கரம் விரித்தால் உங்கள் மடியிலேயே விழுந்து விடுவார்கள். அவர்களும் தேவனுடைய கரத்தில் வனையப் பட்டுவரும் பாத்திரங்களே. பூரணத்திற்கு அவர்களை வழி நடத்துவதே நமது குறிக்கோளாகும். அவர்கள் பாவமே செய்து விட்டாலும் முறைத்துப் பார்த்து அவர்களை ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுத்தாதீர்கள். ஏற்கனவே இவர்கள் தங்கள் மனச்சாட்சியினால் வாதிக்கப்பட்டு உளையான சேற்றிலிருந்து தங்களைத் தூக்கிவிடுவாருண்டோ என்று தவித்துக் கொண்டிருப்பவர்கள். பழிச்சொல் அவர்களைத் துரத்திவிடும். அவர்களைத் தயங்கச் செய்யும் சூழ் நிலைகளைத் தவிர்த்து அருகில் வர அன்பு காட்டுங்கள். குற்றவாளியைத் தண்டனை சிலவேளை கடினப்படுத்துகிறது; அன்போ உடைத்துவிடுகிறது. அதனால்தான் விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்டவளை இயேசு மன்னித்தார். அவரது பாசம்தான் யூதாசைத் துக்கப்படச் செய்தது. அந்தக் கனிந்த பார்வையே பேதுருவைக் கதறச் செய்தது. அவர்கள் உங்களை நேசிக்கவும் நம்பவும் துணிந்த பின்னரே உங்கள் ஆலோசனையோ நற்செய்தியோ அவர்களில் கிரியை செய்யும். இயேசு பிரசங்கிக்கு முன் ''மனதுருகினார்.'' பிறர் நிலையில் நம்மை வைத்துப் பார்த்து மனதுருக்கத்தைக் கற்றுக்கொள்வோம்.

**4. உதவிசெய்யப் படியுங்கள்.**

மனிதன் இயல்பாகவே சுயநலமுள்ளவன். ஆவிக்குரியவர்களாகிய நாமும்கூட சிலவேளை நமது கடன்களைச் செய்து முடிக்கும் சுயநல நோக்கில் பிறரை மறந்துவிடுகிறோம். ஆனால் நேசிக்கப்படத்தக்கவராவதற்கு இக்குணம் எதிரி. நம் திட்டங்களைக் குழப்ப தேவன் சிலவேளை தம் தூதரை அனுப்புவார். ஆசீர்வாதத்தைச் சுமந்துவரும் குழப்பங்களை இழந்துவிடா திருப்போமாக! தேவையிலிருப்போரின் நண்பராவோம். இப்பொழுது நாங்கள் அதிகமாய் நேசிக்கும் ஒருவரை நினைவுகூருகிறேன். மிகவும் அலுவல் நிறைந்தவர்; ஆனால் அளவுக்கு மீறி உதவி செய்வார். அவரது இரக்கத் தன்மையை உரிமை பாராட்டி நாங்கள் அளவுக்கு மீறினால் அதையும் வரவேற்கிறார். அவரைத் தொல்லை செய்யக்கூடாதே என முயற்சி செய்தால் ஏன் கூடாது என்கிறார்!



**5. பாராட்டப் படியுங்கள்.**

பிறரிடம் பாராட்டக்கூடியவற்றைப் பாருங்கள். முகத்துதியல்ல, பிறரிலுள்ள அருமையானவற்றிற்காய் இதயப்பூர்வமான ஓர் பாராட்டு வார்த்தை. அன்பு சத்தியத்தில் சந்தோஷப்படும். பாராட்டத்தக்கவரைப் பாராட்டத் தயங்கவேண்டாம். பெருமை வந்து விடாதபடிக்குப் பிறரைப் பாராட்டுதலைத் தவிர்க்கவேண்டுமென்று வேதம் போதிக்கவில்லை. அது மனிதனுடைய கற்பனை. இயேசு சிலரை வியந்து பாராட்டியுள்ளார். உண்மையான ஒரு பாராட்டுச் சொல் ஒருவரை ஊக்குவிக்கிறது. உங்களை நம்பி தங்கள் இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொள்ளத் துவங்குவார்கள்.

**6. தொட்டால் சிணுங்காமலிருக்கப் படியுங்கள்.**

பிறர் நம்மோடு விடுதலையோடு பழக வேண்டுமானால் அவர்கள் நம்மைப் புண்படுத்தினாலும் சட்டை செய்யக்கூடாது. ஒரு சிறு விளையாட்டிற்கும் கேலிக்கும் கோபித்துக் கொண்டால் நம்மிடம் பேசவே தயங்குவர். நம்மோடிருக்க விரும்பமாட்டார். உங்கள் நிறத்தையோ, உருவத்தையோ, பேச்சையோ, எதையோ கேலி செய்யலாம்; சிரித்துக் கொள்ளுங்கள். பிறர் வார்த்தைகளைக் கடுமையாய் எடுக்காதீர்கள். தொட்டால் சிணுங்கிகளுக்கு நண்பர் அதிகம் இருக்கமாட்டார்கள். அது விரும்பத்தகு குணமல்ல. குற்றஞ்சாட்டப்பட்டாலும், திருத்தப்பட்டாலும், திட்டுவாங்கினாலும் ஆவியின் எளிமையோடு அவற்றை ஏற்றுக்கொள்ளுங்கள்.

எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இனிமையான சுபாவத்தோடிருக்கப் பழகுங்கள். எப்பொழுதும் சிரித்து மகிழ்ந்து விளையாட ஆயத்தமாயிருங்கள். சோர்ந்து தொய்ந்திருப்பவரைத் தூக்கிவிடத் துரிதமாயிருங்கள். யாரையாவது அறியாமல் புண்படுத்திவிட்டால் உடனே மன்னிப்புக்கோரி விளக்கிவிடுங்கள்.

தேவனே எல்லோரைக்காட்டிலும் நேசிக்கப்படத்தக்கவராயிருக்கிறார்; ஏன் தெரியுமா? அவரே முதலாவது நம்மை நேசித்தார், நமக்குச் செவிகொடுக்கிறார். நாம் இருக்கும் வண்ணமாகவே நம்மை ஏற்றுக்கொண்டார். நம்மைக் குற்றஞ்சாட்டாமல் உதவியே செய்கிறார். நம்மையும் தேவன் அவ்விதமே தம் சாயலாய் மாற்றுவாராக!

# 8
# நான் ஆத்தும ஆதாயகியானது எப்படி

பதின்மூன்றாம் வயதில் நான் இரட்சிக்கப்பட்டபொழுதே ஆத்தும ஆதாயத்தின் முதல் விதைகள் என் இருதயத்தில் விதைக்கப்பட்டன. வல்லமையான பிரசங்கத்தினாலல்ல, சாம் அண்ணாச்சியின் (திரு. P. சாமுவேல், டேனிஷ்பேட்டை) எளிய முன்மாதிரியினால். மூளை ஜுரத்தினால், முந்தின நாள்தான் இறந்துவிட்ட தன் குழந்தையை அடக்கம் செய்துவிட்டு அவசரமாக விடுமுறை வேதாகமப் பள்ளி நடத்த தஞ்சை வந்து கண்ணீரோடு மோட்சத்தையும் நரகத்தையும் குறித்துப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். என் வாழ்க்கையை கிறிஸ்துவிற்கு ஒப்புக்கொடுத்ததோடல்லாமல் தேவனைச் சேவிக்கும் வாஞ்சையும் அன்றே என்னைக் கவ்விக்கொண்டது.

வளர்ந்தேன், விதையோ ஆழத்தில் அமைதியாய்ப் புதைந்திருந்தது. "**ஆத்தும பாரத்தைக்**" குறித்துப் பேசும் பிரசங்கிகளெல்லாம் என்னைக் குற்றவுணர்வினால் வாதித்தனர். என்னில் கடுகளவும் இல்லாத ஒன்று அது. நான் சரியாக இரட்சிக்கப்படவில்லையோ? ஆனால் விதை நனைந்து ஊறிக்கொண்டிருப்பதை நான் உணரவில்லை. ஆத்தும பாரத்திற்காய் ஜெபித்துப் பார்த்தேன்; எதுவும் கிடைத்ததாக உணரவில்லை!

ஆனால் தேவ வார்த்தையை வாசிக்க வாசிக்க ஆத்துமாதாயம் செய்வது தேவனுடைய "**கட்டளை**," எனவே "**பாரம்**" இருந்தாலும் இல்லாவிட்டாலும் அது என் "**கடமை**" என உணர்ந்தேன். மருத்துவருக்கு நோயாளியைக் குறித்துப் பாரமில்லாததினால் அவர் மருத்துவமனைக்குச் செல்லாமலிருக்கலாமா? அல்லது போலீசாருக்கு சட்டங்களைக் குறித்த பாரமில்லாததினால் தம் கடமையில் தவறலாமா? ஆம், நான் சாக்குப்போக்குச் சொல்ல இடமேயில்லை. கர்த்தருடைய சத்தம் தெளிவாய்ப் பேரிரைச்சலாய் ஒலித்தது. "மரணத்துக்கு ஒப்புவிக்கப்பட்டவர்களையும், கொலையுண்ணப்போகிறவர்களையும் விடுவிக்கக்கூடுமானால் விடுவி. அதை அறியோம் என்பாயாகில், இருதயங்களைச் சோதிக்கிறவர் அறியாரோ? உன் ஆத்துமாவைக் காக்கிறவர் கவனியாரோ? அவர் மனுஷருக்கு அவனவன் கிரியைக்குத் தக்கதாகப் பலனளியாரோ?" (நீதி 24: 11,12).



செய்யத் துணிந்துவிட்டேன். ஆனால் எப்படி? என்னைப் போன்று **வெட்கமுள்ளவர்களைக்** காண்பதரிது. இயேசுவைப்பற்றி, ஏன் எதைப்பற்றியுமே, எவரிடமும் பேசுவதற்கு வாயே வராது. இத்தடையினைத் தகர்த்தெறிவதில் முதற்படியாகச் சிநேகிதரைச் சம்பாதிக்கத் துவங்கினேன். வலிய நானே போய் மக்களிடம் பேச்சு கொடுத்துப் பழகப் படித்தேன். விதையின் உறை உடைய ஆரம்பித்தது.

விடுமுறை வேதாகமப் பள்ளியிலோ ஆலய ஞாயிறு பள்ளியிலோ போதிப்பது சுலபமாகத் தெரிந்தது. ஆனால் முன்பின் தெரியாதவர்களிடம் பேசுவதோ பெரும் சங்கடமாகத் தெரிந்தது. தொண்டைவரை நற்செய்தியிருக்கும். நாவிற்கோ அது நகராது. கடைசியில் அதையும் சாதித்துவிட்டேன். "இயேசுவை உங்களுக்குத் தெரியுமா?" என்ற கேள்வியைக் கேட்க என்னைப் பயிற்றுவித்தேன். விதையின் உயிர் முதல் முளையில் தெரியத் துவங்கியது.

மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தேன். **பயமே** என் முதல் சத்துரு. யாராவது என்னைக் கவனிக்கிறார்களா என்று சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுப் பிணியாளிகளிடம் துண்டுப் பிரதிகள் கொடுத்துப் பேசுவேன். கேலி, கிண்டல் எல்லாம் வந்தது. முளையானது ஒருநாள் நிலப்பரப்பை முட்டி மோதித்தானே வெளிவரவேண்டும். மத்தேயு 10ஆம் அத்தியாயம் வாசித்துப் புதுப் பெலனடைந்தேன்.

ஆத்துமாவைக்குறித்த கரிசனையின்றி கடமைக்காய் செய்ததினால் மிக**அசதியாகவே** சாட்சி பகருவேன். 'அவசரமாய்' சொல்லி விட்டுச் சென்றுவிடுவேன், அல்லது ஒத்திப்போடுவேன். ஒரு நாள் இரத்தம் உறையாத வியாதியினால் ஒரு பருத்த சிவத்த செட்டியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரிடம் பேசும்படி தேவன் என்னை நெருக்கி ஏவினாலும் என் சுயஞானத்தில் ஒருநாள் பழகியபின் பேசுவது நல்லதென தீர்மானித்தேன். அன்றிரவே அவர் மூளையில் இரத்தம் கசிந்து மரித்துவிட்ட செய்தி கிட்டியதும் எவ்வளவாய்த் தவித்திருப்பேனென்று சிந்தித்துப் பாருங்கள். நியாயத்தீர்ப்பு நாளிலே அவரைச் சந்திப்பேன். அவர் தேவனைக் குறித்துக் கேள்விப் படவேயில்லை என்பார். இயேசு ஆச்சரியத்தோடு, "அதற்காகத்தானே இவரை உன்னிடம் அனுப்பினேன்" என்பதுபோல என்னைத் திரும்பிப் பார்ப்பார். கர்த்தாவே! ஒத்திப்போடக்கூடாது என்பதற்கு இதைக்காட்டிலும் ஒரு சவுக்கடியை நான் பெற்றிருக்க முடியாது!

ஆத்துமாதாயப் பாதையில் ஆத்துமாக்களே ஆதாயம் செய்யாமல் (அது என் எண்ணம்) நொண்டி நொண்டி நடந்துகொண்டிருந்தேன். வருடங்கள் உருண்டோடின. கடைசி ஆண்டு பயின்றுகொண்டிருந்தேன். **கனிகளில்லை.** ஆத்துமாக்கள் கிட்டவில்லை. ஒருநாள் தேவனிடம் சண்டைபோட்டேன். யாக்கோபைப் போலல்ல; அவரது ஆத்துமாதாயத்தின் பாரமான கரத்தை என்மேலிருந்து அகற்றும்படியாகத்தான். ஒருவருமே மனமாறாதிருக்க ஒவ்வொருவரிடமும் பயித்தியக்காரிபோலக் கிறிஸ்துவைப்பற்றிப் பேசுவதில் புண்ணியமென்ன? இந்த வேலையில்லா வேலையை நிறுத்தப்போகிறேன். இது ஒருவேளை ஒரு சிலருக்குக் கொடுக்கப்பட்ட வரம் அல்லது தாலந்தாக இருக்கலாம். மறுநாளே மருத்துவமனைக்குச் சென்று கொண்டிருக்கும்போது ஒரு சிறு கரம் என்னைப் பற்றி இழுத்தது. "நீ யார் தம்பி? என்னவேண்டும்?" "அக்கா என்னைத் தெரியவில்லையா?" "இல்லையே." "நான் சிகிச்சைக்காக சேர்ந்திருந்தபொழுது நீங்கள்தான் இயேசுவைப்பற்றியும், மோட்சம் நரகம் பற்றியும் சொல்லிக்கொடுத்தீர்கள். அப்பொழுதே நான் இயேசு நாதர் பிள்ளையாகிவிட்டேன். என் பெற்றோரிடமும் சொன்னேன். அவர்கள் யாரோ உன்னை ஏமாற்றியிருக்கிறார்கள் என்றார்கள். ஆனால் நான் இயேசுவே உண்மையான தெய்வம். அவரை விடமாட்டேன் என்றேன். என் பெயர் மணி." அப்பப்பா! இன்றுவரை அது மணிதானா, தேவன் என்னைத் தட்டிக் கொடுக்கும்படி அனுப்பிய தேவ தூதனா என்ற ஐயம் எனக்குண்டு. அதற்குப்பின் ஆவியானவர் இருதயத்தில் நடப்பிக்கும் கிரியையை நான் சந்தேகித்ததில்லை. விதை கனி கொடுக்கத் துவங்கிற்று!

முட்டாள்தனமான **தவறுகளைச்** செய்தேன். தவறான நபரிடம் தவறான வேளையில் தவறான இடத்தில் தவறான கேள்வியைக் கேட்டு அவமானமடைந்தேன். வெட்கத்தினால் இரண்டு நாட்கள் தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு கிடப்பேன். ஆனால் என்னையே திடப்படுத்திக் கொண்டு எழுந்து விடுவேன். அவமானமும் வெட்கமும் என்னை அணைத்துவிடக் கூடுமானால் காலணா காசிற்கு நான் பயன்படமாட்டேன். பயிரைப் பலப்படுத்துவது காற்றும் மழையும் கடூர வெயிலுந்தானே.

**சோம்பலைக்** களைந்தெறியக் கற்றுக்கொண்டேன். வாரத்தில் சில நாள் சொந்த மருத்துவமனையை 11 மணிக்குப் பூட்டிவிட்டு மதிய உணவுண்டு மீன் பிடிக்கப் புறப்பட்டால் சாயங்காலம் 5 மணிக்கு மருத்துவப் பணியைத் துவங்கவும் கணவனை வரவேற்கவும் வீடுவந்து விடுவேன். மூன்று வயது மகள் வீட்டில் மாமியாருடன் இருக்க மறுத்து என் பின்னே அலறிக்கொண்டு தெருவழியே ஓடி வருவாள். ஆத்தும ஆதாயம் செய்யவா? வீட்டிலிருந்து பிள்ளையைப் பார்க்கவா? குழந்தை ஒரு கையிலும் குடை மறுகையிலுமாகச் செல்லத் துவங்கினேன். வீடு திரும்பி எரியும் பாதங்களில் குளிர்ந்த நீர்



வார்ப்பேன். வளர்த்த கோழிகளுக்கு முடிவுகட்டினேன். இஸ்திரிபோட வேண்டிய துணிகளை வண்ணாரிடம் கொடுக்கத் துவங்கினேன். ஆத்துமாக்கள் அழிந்து கொண்டிருக்கும்போது இப்படி இருபது ரூபாய் மிச்சம் பிடிப்பதில் அர்த்தமில்லை. தேவனுடைய இராஜ்யத்தில் வெற்றி வாழ்க்கை வேண்டுமென்றால் அழைப்பு 10% உழைப்பு 90% என்பதை மறந்து விடக்கூடாது.

வருடங்கள் நகர, நான் அறியுமுன்னே சுயநம்பிக்கை இராட்சதனாய் என் முன்னே தலைவிரித்தாடியது. மக்களிடம் நான் பேசும்போது இரட்சிப்பும் அபிஷேகமும் இயற்கையாகவே நிகழுவதுபோலிருந்தது. தேவன் என்னைவிட்டு தூரச்செல்வதை நானோ அறியாதவளாயிருந்தேன். ஆனால் தேவன் இடைபட்டு என்னை நிறுத்தினார். திடீரென்று யாவும் வனாந்தரமாயின. இரட்சிப்புகளில்லை. கண்ணீர்களில்லை. இதயங்கள் அசையவில்லை. அபிஷேகங்களில்லை. எப்பக்கம் திரும்பினாலும் வெறுமை. உடைந்தேன். நொறுங்கினேன். வெட்கமுற்றேன். பலிபீடத்தைச் செப்பனிடத் தீர்மானித்தேன். பின்மாற்றத்தைப் போல் திரும்ப எழுதல் அவ்வளவு சுலபமாகவோ சீக்கிரமாகவோ இல்லை. காலங்கள், கண்ணீர்கள், கலக்கங்கள் மற்றும் பலவும் செலவழித்து விழுந்த நிலையில் எழுந்து நின்றேன். அவர் நெரிந்த முளையை முறிக்காதவர்!

**ஜெபத்தைச்** சார்ந்துகொள்ளப் பழகினேன். பிசாசு நகைப்பான்.முழுங்காலில் நின்று தூங்குவதில் பயனென்ன? எழுந்திருந்து ஏதாவது காரியத்தைப் பார் என்பான். அநேகருக்குப் பிரசங்கித்துக் கொண்டும், தனிப்பட்ட கிறிஸ்தவருடன் ஆத்தும ஆதாயத்தை வலியுறுத்திக் கொண்டும், குழுக்களோடு சவால் செய்தி பகிர்ந்து கொண்டும் இருக்கும் நிலையில் என் ஜெபக்குறைவை யாரிடம் கூறமுடியும்? இதையும் மேற்கொள்ளத் தீர்மானித்தேன். மேல் மாடிக்கு ஏறிச் சென்று சத்தமாய் ஜெபிக்கப் பழகினேன். பிசாசை மேற்கொண்டேன். ஆனால் தேவனுடைய ஜெபப்பயிற்சி தொடர்கிறது. இப்பொழுது ஆத்துமாக்களுக்காய் அழவும் புலம்பவும் கற்றுக் கொண்டிருக்கிறேன். விதையானது கனிகொடுக்குமுன் மரித்தேயாக வேண்டும்.

**பகிர்ந்துகொள்ளுதலின்** பலனைப் பின்வரும் சம்பவத்திலிருந்து கற்றுக் கொண்டேன். ஒரு நாள் வீட்டு முற்றத்தில் நின்று ஒரு ஆட்டிடையச் சிறுவனைக் கண்டு அவனை அழைத்து படங்கள் காண்பித்துக் கதைகள் கூறினேன். மறு வாரம் நண்பரை அழைத்து வரச் சொன்னேன். அதுவே எங்கள் வீட்டு ஞாயிறு பள்ளியின் துவக்கம். சீக்கிரத்தில் பள்ளிகள் ஐந்தாக வளர்ந்துவிட்டன. இக்கருத்தை உடன் சகோதரிகளின் கூடுகையில் கலந்தாலோசித்ததினால் 50 அல்லது கூடுதல் ஞாயிறு பள்ளிகள் சேரிகளிலும், வீடுகளிலும், கடற் கரையிலும், மரத்தடிகளிலும், எழும்பி மாணவியராலும் மனைவியராலும் நடத்தப்படுகின்றன. தேவனுக்கே மகிமை. செடி வளர்ந்து மரமாகும்போது

கிளைகள் பல தோன்றுவது இயற்கையே. ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையும்.

நான் துவங்கிய வேலையை உடும்பாய்ப் **பிடித்துக்** கொள்ளும் பழக்கமுண்டு. ஆனால் இறுகப் பற்றப் பற்ற கரங்களைப் பயன்படுத்துவது கடினமென்பதை நாளடைவில் கற்றுக்கொண்டேன். கர்த்தர் உடும்புப் பிடியை விட்டுக்கொடுக்கக் கற்றுக் கொடுத்தார். நாங்கள் இரு பெண்களாக ஒரு பெண்கள் இல்லத்தில் ஊழியஞ்செய்து அநேகக் கனிகள் கண்டுகொண்டிருந்தோம். ஒரு நாள் ஒரு சகோதரியைச் சாட்சி பகர அழைத்துச்சென்றோம். மறுவாரம் அவர்கள் தங்கள் சபை சகோதரிகளுடன் முன்னமே வந்து பெண்களுக்கு ஜெபம் நடத்திக் கொண்டிருந்ததைக் கண்டு மனம் புழுங்கினேன். கர்த்தரோ "விட்டுவிடு" என்றார். இன்று 7 வருடங்களுக்குப் பின்னர், அவர்கள் உத்தமமாய் அவ்வூழியத்தைத் தொடர்வதைக் கண்டு உளம் பூரிக்கிறேன். தேவனுக்கே மகிமை! ஆம், புகழ் யாருக்குப் போகிறது என்று சட்டை செய்யாமல் உழைத்தால் கர்த்தருக்காய் கூடுதல் காரியங்களைச் சாதிக்கலாம். இப்பொழுது ஏதாவது ஊழியத்தை ஆரம்பித்து விட்டு, "ஆண்டவரே, இதை யாராவது அபகரித்துக்கொள்ள அனுப்பும்" என்று ஜெபிப்பதே பழக்கமாகிவிட்டது. அல்லது யாரையாவது வருந்தியழைத்து அப்பொறுப்பை ஒப்படைக்கிறேன். மரமானது தன் கனிகளை வேறொருவர் புசிப்பதைக் கண்டு மகிழத்தானே வேண்டும்!

பன்முறை ஜெபித்து ஜெபித்து என் முன்னிருக்கும் சாத்தின கதவைத் **தட்டத்** தவறியிருக்கிறேன். சாத்தின கதவுகளெல்லாம் பூட்டின கதவுகளல்ல! மூன்றாம் நாள் கல்லறைக்குச் செல்ல விரும்பினவர் அநேகர். "கல்லை நமக்காக எவன் புரட்டித்தள்ளுவான்?" என்று சொல்லித் தூங்கினவர் பலர். ஆனால் "கல்லை நமக்காக எவன் புரட்டித் தள்ளுவான்?" என்று சொல்லிப் புறப்பட்டவரோ திறந்த வாசலைக் கண்டனர். நமது பிரச்னை என்னவென்றால் நாம் தட்டுவதில்லை! பலமுறை கதவைத் தட்டுவதற்காகச் சென்று வாசல் திறந்திருப்பதைக் கண்டு பிரமித்திருக்கிறோம்! பன்முறை நாட்களை வீணடித்துவிட்டு கடைசியில் சென்றபோது வரவேற்கும் முகங்களைக் கண்டிருக்கிறேன். விசுவாசிகளான அதிகாரிகளையும் சந்தித்திருக்கிறேன்!

தேவனோடு மிகப்பெரிய போராட்டம் விசுவாசிகளோடிருக்கும்போது சாட்சி பகருதலில்தான் ஏற்பட்டது. "இதன் விளைவு என்னாகும் தெரியுமா, ஆண்டவரே? என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்? ஜம்பமடித்துக் கொள்ளுகிறேன் என்றுதானே எண்ணுவார்கள்?" "நல்லது மகளே, தாழ்மையான விசுவாசி என்ற பட்டம்பெற விரும்புகிறாயா? அல்லது ஆத்துமாதாயகியாக விரும்புகிறாயா?" என்னை மடக்கிவிட்டார் என்று அறிந்தேன். சிலநாட்களில்



ஊழியக்காரிகள் பலரோடு பிரயாணம் செய்ய நேர்ந்தது. அவர்கள் பேசிக்கொண்டும், விளையாடிக்கொண்டும், வேதத்தை வாசித்துக்கொண்டும் வந்தனர். ஆண்டவரது சத்தம் ஒலித்தது! "ஐயோ, ஆண்டவரே, இப்பவா? நானா? நான் எல்லாரிலும் சிறியவளாயிற்றே." "இருந்தாலென்ன?" "சரி, ஆண்டவரே, சரி, நீர் என்னை விடமாட்டீர்."

தொடர்ந்து நடந்தது ஒரு சொப்பனம் போலிருக்கிறது. ஒரு பிச்சைக்காரனிடம் தயக்கத்தோடு பேசத் துவங்கினேன். அவன் அப்படியே என் அருகில் உட்கார்ந்து கேட்கத் துவங்கினான். சிறிது நேரத்தில் தன் தாயத்துகளையும் முடிச்சுக் கயிறுகளையும் அறுத்தெறிந்தான். மகிமையான நற்செய்திக்குச் செவிமடுக்கத் தன் மகனைத் தேடி அழைத்து வந்தான். இருவருமாய் அந்த அழுக்குத்தரையில் மண்டியிட்டு பாவ அறிக்கை ஜெபத்தைச் செய்து இயேசுவை ஏற்றுக் கொண்டனர். சக விசுவாசிகள் என்னைச் சூழ்ந்து கொண்டனர். "அறிமுகமாகாதவரிடம் எப்படிப் பேசுகிறீர்கள்?" "இவ்வளவு எளிதாய் எப்படி நற்செய்தியைக் கூறுவது?" "உங்கள் முகவரியைத் தருகிறீர்களா?" கர்த்தாவே உம்மைக் கனம்பண்ணுகிறவர்களை நீர் கனம் பண்ணுகிறீர். இன்றுவரை ஒருவரிடம் இயேசுவைக் குறித்துப் பேசுமுன் தயக்கம் என்னும் தடை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் நான் பேசும்போது கண்ட விசுவாசிகளில் பலர் உணர்த்தப்பட்டு சவாலடைந்து ஆத்தும ஆதாய வாழ்க்கைக்கு ஒப்புக்கொடுக்கத் தீர்மானித்ததாக சாட்சி பகர்ந்துள்ளனர்.

25 வருடங்களுக்கு முன்னர் செவிட்டு செவிகளில் விழுந்த காணாமற்போனோரின் கதறல் வரவரப் பேரிரைச்சலாய் தொனிக்கிறது. அருமையானவர்களே, உங்கள் உள்ளத்தில் கடுகளவு விதை ஒன்று உண்டா? அதை அசட்டை செய்யாதீர். அதைப் போற்றிப் பேணி நீருற்றிக் கவனியுங்கள். ஏனெனில், "பரலோகராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனிதன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான்.அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும்."

# 9
# பாவிகளின் சிநேகிதன்!

யார்? நீங்கள்தான் இல்லையா? இயேசு ''பாவிகளுக்கு சிநேகிதன்'' என்று பட்டப்பெயர் பெற்றது உண்மைதான். ஆனால் உங்களைக் குறித்து என்ன? இந்தப் பட்டப்பெயரை பெற்ற ஒரு விசுவாசியை நான் இன்னும் கண்டதில்லை. இதைத்தவிர மற்றெல்லாவற்றிலும் இயேசுவைப் போலாக நாம் முயற்சிப்பதென்ன? விசுவாசிகளைக் காட்டிலும் அதிகம் பாவிகளையே சிநேகிதராகச் சம்பாதித்திருக்கிறோமா? ஆலயத்தையே சுற்றிச் சுற்றி வருவதற்கும், வியாதியுற்ற ஜெபக்குழு அங்கத்தினரையே சந்திப்பதற்கும், நள்ளிரவில் கிறிஸ்துமஸ் கானம் பாடி சோம்பேறிக் கிறிஸ்தவரை வாழ்த்துவதற்கும், விறுவிறுப்பான விசுவாசிகளின் இரவு தூக்கத்தைக் கெடுப்பதற்கும் இதுவா காலம்? ஒவ்வொரு வினாடியும் விரைவுகொண்டு நரகக்குழிக்குள் உருண்டு செல்லும் கிறிஸ்தற்றோரைக் குறித்து நமக்குக் கவலையில்லையா? விழித்தெழுந்து இயேசுவைப் போலாவோம் — பாவி களின் சிநேகிதராவதில்!

நல்லவரைக் காட்டிலும் தீயவரோடேயே இயேசு அதிகமாய்ப் பழக்கம் வைத்திருந்தார். இவ்விதம் பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்தெறிந்தார். ஆம், தீயோர்க்கும் நல்லோர்க்கும் நடுநின்ற தடுப்புச்சுவரைத்தான்.

யூதருக்கும் புறவினத்தாருக்கும் நடுவே நின்ற தடுப்புச் சுவரைக் குறித்துப் பவுல் பேசினார். புறவினத்தாரை யூதர் நேசிப்பதேயில்லை. அவர்களை வெறுத்ததினால் தங்களுக்கும் அவர்களுக்கும் நடுவே பிரிவினைச் சுவரைக் கட்டி எழுப்பியிருந்தனர். இதனால் நற்செய்தியை அக்கரை சேர்க்க இயலாத ஆண்டவரது உள்ளம் உடைந்தது. முடிவாய் என்ன செய்தார்? பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்தெறிந்தார். முதன் முதலாக மெள்ளமெள்ள சென்று புறவினத்தார் உலகிற்குள் எட்டிப்பார்த்தது பேதுருதான். என்னத்தைக் கண்டார்? ஒன்றுமில்லை! ஒரு வித்தியாசமுமில்லை! ''புறவினத்தார் மேலும்'', ''நம்மைப்போலவே'', ''நம் மேல் போல'' ''நமக்குத்



தேவன் அநுக்கிரகம் பண்ணினது போல'' (அப் 10:46,47;11:15,17). புறவினத்தாரும் தமக்கு அவர்களைப்போலவே அருமையானவர்களே எனத் தேவன் தலைதுலுக்கி நடந்த யூதருக்குக் காண்பித்தார்.

இதிலிருந்து நாமறிவது என்ன? பிரிவினையாகிய தடுப்புச்சுவரை எப்படி மறுபடியும் கட்டி எழுப்பியிருக்கிறோமென்று நோக்குவோம். வீடு வாடகைக்கு வேண்டுமென்றால் ''கிறிஸ்தவ இடமாக இருந்தால் தாவிலையே'' என்கிறோம். இந்துக் கலியாணங்களுக்குச் சென்றால் ''கறைப்பட்டு'' விடுவோமோ என அஞ்சுகிறோம். அவர்கள் பிள்ளைகளோடு நம் பிள்ளைகள் விளையாடினால் கெட்ட வார்த்தைகளைப் படித்துக் கொள்வார்களென விலக்குகிறோம். இந்து நண்பர் ஒருவர் சுண்டல் கொடுத்தால் ''வேண்டாம், வேண்டாம், விக்கிர கங்களுக்குப் படைத்தது'' எனக் கையை முடக்கிக் கொள்ளுகிறோம். நெருக்கும் ரயிலில் காலை நீட்டிப்படுத்து தூங்குவது போல் பாசாங்கு செய்கிறோம். சுவிசேஷத்தை அக்கரை சேர்ப்பது எப்படியென அறியாமல் திகைத்தவராய் ஆண்டவர் தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டதில் வியப்பில்லை.

பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். மறுபடியும் சொல்வோம்: பாவிகளை இரட்சிக்கவே கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்! அதற்காகவே வந்தார். அது அவரது தொழிற்பயணம். நல்லவர்களோடேயே தமது நேரத்தையெல்லாம் செலவிட்டுக் கொண்டிருந்தாரானால் என்ன வேடிக்கையாயிருந்திருக்கும். தமது நோக்கையே போக்கடித்திருப்பார். அதைத்தான் நாம் இப்போது செய்கிறோம். நமது நோக்கைப் போக்கடித்துக் கொண்டிருக்கிறோம்! வியாபாரிகள் யாவரும் கூடிக் கூடி வாடிக்கையை நாம் மறந்துவிட்டதால் நமது வியாபாரம் நொடித்துப் போயிருக்கிறது. நாம் பிரிந்து நமது ஜோலியைப் பார்க்கப் போவோம் — பாவிகளிடத்தில்.

மாணவரைக் குறித்த கணக்கீடு எடுக்கும்படி நியமிக்கப்பட்டால் அதிகப்படியான நேரத்தை எங்கு செலவிடுவோம்? பள்ளிகளிலும், கல்லூரிகளிலும்தானே? வைத்தியன் தன் வாழ்க்கையைக் கழிப்பது பிணியாளிகள் நடுவில்தானே. ''வேதபாரகரும் பரிசேயரும் அவருடைய சீடருக்கு விரோதமாக முறுமுறுத்து: நீங்கள் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிற தென்னவென்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்'' (லூக் 5:30–32). அப்படியானால் நாம் பாவிகளைவிட நல்லவரோடேயே காலம் கழிப்பதின் மடமையென்ன? பாவிகளே நமது குறிக்கோளாயிருப்பதினால் நாம்

அவர்களோடு கலந்து அவர்களோடு இருக்க வேண்டாமா ? பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தாரென்றால் நாமும் பாவிகளை இரட்சிக்க அல்லவோ உலகத்தில் உதித்துள்ளோம். பின்னை ஏன் அவர்களை விட்டு அப்பாலே நிற்கிறோம் ? ஏதோ வாரமொருமுறை சந்திப்பு ஊழியத்தினால் நாம் சாதித்து விடுவது என்னவோ ?

நற்செய்தியைப் பிரசங்கித்தலைக் குறித்து நான் சொல்லவில்லை. 'சிநேகிதராவதைக்' குறித்தே பேசுகிறேன். பஸ்ஸில் சிகரெட் குடித்து முகத்தில் புகை ஊதும் மனிதனைப் பார்த்து உங்களால் புன்முறுவல் பூக்க முடியுமா, அல்லது முகத்தைச் சுளித்துத் திருப்பிக் கொள்கிறீர்களா ? வாய் நிறைய வெற்றிலையைக் குதப்பி மேலே தெறிக்கும்படி துப்புபவரது தோளில் கைபோட இயலுமா ? அடுத்த வீட்டுக் குடிகாரனான விபசாரக்காரனோடு சிரித்து சிறிது நேரம் பேச முடியுமா ? அவர்களது முட்டாள்தனத்தைச் சுட்டிக்காட்டி மூடப்பழக்க வழக்கங்களைக் குறை கூறி நியாயந்தீர்த்து எட்டி நின்று கொள்கிறோம். ''சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்ட வேண்டும்.''

''சிநேகம் பாராட்டும்'' உபாயங்களை தேவன்தாமே நமக்குக் கற்றுத் தருவாராக. பாவிகளின் சிநேகிதராவதற்கு நாம் வெகுதூரம் செல்ல வேண்டியிருக்கிறது. இப்பாடத்தை நான் கற்றுக் கொண்டபோது என் பத்தாம்பசலிக் கொள்கைகளை உடைத்தெறிய வேண்டியதாயிருந்தது. என் மகளின் பள்ளி ஆயாவின் தோளில் கை போட்ட மாத்திரத்தில் அவள் நிமிர்ந்து பார்த்து மலர்ந்து சிரித்தாள். போகும் வழியில் சாணம் தெளித்த முற்றத்தில் கோலத்தின் அழகை மெச்சிக்கொண்டதால் முன்பின் அறியாத குடும்பங்களுடன் சிநேகமானேன். இப்பொழுது தொழுநோயினராடு உட்காரவும் இரப்பவரோடு இரைந்து சிரிக்கவும், வேசிகளோடு கைகோர்த்து நிற்கவும், குற்றவாளிகள் இல்லங்களில் அவர்களோடு சில விளையாட்டுகள் ஆடவும் கற்றுக் கொண்டேன். இவர்களில் சிலருக்கு இன்னும் நற்செய்தி சொல்லவில்லை. ஆனால் பாதிதூரம் வந்து விட்டேன் என்று நிச்சயமாய் அறிவேன்.

பெரிய பூசணிக்காய் ஒன்றை வெட்டினபோது பக்கத்துவீட்டு கிறிஸ்தவரல்லாதவருக்கெல்லாம் ஒவ்வொரு துண்டு கொடுத்துவிட்டேன். அண்மையில் விளையாடும் பிள்ளைகளுக்கு பழைய கிறிஸ்மஸ் வாழ்த்துப் படங்களைக் கொடுத்தேன். அண்டைவீட்டில் கொஞ்சம் முருங்கைக்கீரை கேட்டு வாங்கினேன். விளைவு என்னை வியப்பில் ஆழ்த்தியது. இந்து வீடுகளுக்காகவே கிறிஸ்மஸ் பாடல் குழு உருவாக்கி வீடு வீடாக வாழ்த்திச் சென்றோம். இப்பொழுது வீட்டை விட்டு வெளியே தலை காட்டினாலேயே பல இன் முகங்களையும் வாழ்த்தும் குரல்களையும் காண முடிகிறது. வேசிகளின்



சேரிக்குச் சென்று உட்கார்ந்தவுடன் சோடா உடைத்துக் கொடுத்து சுற்றி உட்கார்ந்து கொள்வர். ''வருமானம் எப்படி இருக்கிறது?'' என்பேன். ''அம்மா, ஞாயிற்றுக்கிழமை வராதீர்கள். எங்களுக்கு நிறைய வாடிக்கை வரும். வேறெந்த மதியமும் வாருங்கள். உங்கள் கதைகளையெல்லாம் கேட்கிறோம். ஏன் படப்புத்தகம் கொண்டுவரவில்லை ?'' என்பார்கள். இதுவே என் நற்செய்தியின் ஆரம்பம். எங்கள் வீட்டிற்குப் பலர் உணவிற்காக, உடைக்காக, பென்சில், ரப்பர், படம், விளையாட்டுச் சாமான், தோட்டத்து நெல்லிக்காய்க்காக வருகிறார்கள். என்ன செய்வேன் ? சிநேகம் பாராட்டுவேன். ''நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வாருண்டாகும்படி, அநீதியான உலகப் பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள் (லூக் 16:9). ஒரு புன்முறுவல், சிறு தொடுதல், முதுகில் ஒரு தட்டு, தோளில் கை, அன்பு வார்த்தை, சிறு உதவி ! கிறிஸ்துவின் அன்பை அவர்கள் இதயம் கேட்கும் தூரத்திற்கு நான் அவர்களை நெருங்கி வந்துவிட்டதை இப்போது உணருகிறேன்.

பாவிகளின் சிநேகிதராவதில் நம் பெரும்பயம் அவர்கள் நம்மிடம் சகாயம் தேடுவார்களே என்பதுதான். 50 பைசா கொடுத்தால் உணவு கேட்பான், அதையும் கொடுத்தால் துணி கேட்பான். அவர்கள் சகாயம் தேடுவது உண்மைதான். ஆனால் அது நமக்கு ஆதாயமல்லவோ ? எங்கோ ஓரிடத்தில் நிறுத்த வேண்டும்தான். ஆனால் அவன் நமது இயேசு குடும்பத்தில் சேரவேண்டுமென்று மெய்யாய் வாஞ்சிப்போமானால் அவனை சகோதரனிலும் அதிக சொந்தமாய் (விடாப்பிடியாய்) சிநேகிக்கவேண்டுமே ! பேராயரின் சிநேகத்தை ஜீன் வால்ஜின் ஆதாயத்திற்காய்ப் பயன்படுத்தினான். ஆனால் பேராயர் அவன் ஆதாயப்படுத்தினதை ஆதாயப்படுத்திக் கொண்டாரே ! ஞானி யார் ? புழுவைத் தின்னத்தான் மீன் வருகிறது என்று மீனவன் மீன் பிடிப்பதை நிறுத்துவானோ ? இயேசு நண்பனானதால் நாம் எவ்வளவு ஆதாயத்தைத் தேடுகிறோம் ! சுகம், பணம், வேலை. வேலை கொடுத்தால் ஊதிய உயர்வு; அதுவும் கொடுத்தால் வேலையுயர்வு. இன்னும் என்னென்னவெல்லாமோ கேட்டு அவரைப் பிய்க்கிறோமே ! அப்பப்பா, நாம் இன்று பாவிகளை நடத்துவதுபோல் இயேசு நம்மை நடத்தியிருப்பாரேயானால் நிச்சயமாய் இரட்சிக்கப்பட்டிருக்கவே மாட்டோம் !

பாவிகளின் சிநேகிதராவது ஞானமற்ற வம்பு என்கிறீர்களா ? இயேசுவின் கொள்கை மாறானது. பாவிகளின் சிநேகிதனாவதையே ஞானம் என்கிறார். ''மனுக்குமாரன் போஜனபானம் பண்ணுகிறவராய் வந்தார்; அதற்கு அவர்கள் இதோ, போஜனப் பிரியனும், மதுபானப் பிரியனுமான மனிதன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்கிறார்கள்; ஆனாலும், ஞானமானது அதன் பிள்ளைகளால் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும் என்றார்'' (மத் 11:19). நாம் நீதியை விட்டுவிட்டோம் ! இயேசு விருந்தின்

ஒவ்வொரு வகையையும் ரசித்து, அதின் ருசியைப் பாராட்டி, வீட்டு எஜமாட்டியைப் புகழ்ந்து, இன்னும் கொஞ்சம் வையுங்கள் என்று கேட்டு சுற்றியிருந்த பாவிகள் கூட்டத்தோடு சிரித்துக் குலாவி விருந்துண்டிருப்பாரென்று எண்ணுகிறேன். ''போஜனப்பிரியன்'' என்று அவரைக் குற்றஞ்சாட்ட வேறென்னத்தை கண்டார்கள் ? தன் உணவை அளந்து வார்த்தைகளை அளவோடு பேசும் சாமியாராக அவரை எதிர்பார்த்திருப்பர். ஆகவேதான் அவரது இயற்கை நடத்தை அவர்களை இடறப்பண்ணியது. அவரோ ஞானவானாயிருந்தபடியால் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த அப்படியிருப்பதையே தெரிந்துகொண்டு தன் பாவமில்லாமையோடுங்கூட பாவிகளுக்குக் கவர்ச்சிகரமாயிருந்தார்.

கிறிஸ்துவின் எதிரிகளாயிருந்த நமக்கு இயேசு எப்படிச் சிநேகிதரானார் ? துரோகிகளான நமக்காகப் பரிசுகளைக் கொண்டு வந்தார் ! (சங் 68:18). யூதாசை ''சிநேகிதனே'' என்று அழைத்தபொழுது இயேசு, ''உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிற வர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்து கிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்'' என்ற தமது போதனையைச் செயல்படுத்தினார்.

சிநேகம் பண்ணும் உபாயங்களை அறிய நீதிமொழிகளின் புத்தகத்தைக் கற்க வேண்டும்:

''சிநேகிதன் **எல்லாக் காலத்திலும்** சிநேகிப்பான்'' (17:17).

''சிநேகிதருள்ளவன் **சிநேகம்** பாராட்ட வேண்டும்'' (18:24).

''சகோதரனிலும் **சொந்தமாய்** சிநேகிப்பவனுமுண்டு'' (18:24).

''**கொடை**(பரிசு) கொடுக்கிறவனுக்கு எவனும் சிநேகிதன்'' (19:6).

''சுத்த இருதயத்தை விரும்புகிறவனுடைய உதடுகள் இனிமையானவை; ராஜா அவனுக்குச் சிநேகிதனாவான்'' (22:11).

''சிநேகிதன் உட்கருத்தான ஆலோசனையினால் பாராட்டும் இன்பமானது களிப்பாக்கும்'' (27:9).

சிநேகம் பண்ண நேரம் செலவிட வேண்டும். ஒருவர் தன் கதையை ஆரம்பித்துவிட்டால் என் மனம் பத்திரிகை, புரூப், சுற்றறிக்கை, பைல், கடிதங்கள் என 101 உயிரற்ற காரியங்கள் மேல் அலையும். ஆனால் இப்பொழுது ஓர் ஆத்துமாவின் விலையைக் கற்றுக்கொண்டு வருகிறேன். அது இவ்



வுலகத்தைக் காட்டிலும் அதிகமானது. ஆகவே அதையும் செய்ய வேண்டும்; இதையும் விட்டுவிடாதிருக்க வேண்டுமென முயற்சிக்கிறேன். ஆத்தும ஆதாயத்தையே தொழிலாய்க் கொண்டுள்ள நாம் கூட சில வேளைகளில் நேரத்தைப்பிடிக்க ஓடி பாவத்தால் அரிப்புண்டு போன ஆத்துமாக்களைப் பின்னே விட்டுவிடுகிறோம். நேரத்திற்கு உயிரில்லை. ஆத்துமாவோ உயிர். நேரத்தைவிட ஆத்துமா விலையேறப்பெற்றதல்லவோ ?

வேறுபிரிதல் என்ற பெயரில் நாம் ஒதுங்கியிருத்தல் தவறு. இயேசுவைப் 'பாவிகளின் சிநேகிதர்' என்று பட்டப்பெயரிட்ட பரிசேயரின் பாணி அவர்களது மாறான மனநிலையை வெளிப்படுத்துகிறது. பாவிகளோடு விருந்துண்ணும் ஒரு போதனையை அவர்களால் ஒத்துக்கொள்ளவே முடியவில்லை. சமாரியப் பெண்ணோடு அவர் பாராட்டின சிநேகம் அவரது சீடரை இருப்புக்கொள்ளாமல் விழிக்கச் செய்தது. நமது மார்க்கக் கொள்கைகள் எவ்வளவு திரிக்கப்பட்டுள்ளன ! நீங்கள் கடைசியாய்ப் பாவிகளோடு விருந்துண்டு களிகூர்ந்த நாளெதுவும் நினைவிலிருக்கிறதா ? நவீன பரிசேயராகிய நம்மை தேவன் மன்னிப்பாராக. ''பாவிகளின் சிநேகிதர்'' என்ற பட்டப் பெயரைக் கிறிஸ்தவர் பெறும் நன்னாள் எந்நாளோ ?

சாணம் மெழுகிய தரையில் உட்கார்ந்து அரைமனதான 5 பெண்களிடம் இயேசுவே கடவுள் என நிரூபிக்க முயன்றுவிட்டு பஸ்ஸிற்காகக் காத்து நிற்கிறேன். சினிமா கொட்டகையின் கதவு திறந்து திரளாய் வெள்ளமாய் சிரித்த முகங்கள் நாளை நரகாக்கினைக்குள், சூளைப் புகைக்குள், சரிந்து விழும் பயங்கரத்தை அறியாமல் வளமாய்ச் செல்கின்றன. ''ஐயோ கர்த்தாவே'' என்று என் இருதயம் அலறுகிறது. ''இந்தத் திரள்கூட்டத்தைக் குறித்தென்ன — இந்தக் திரள்கூட்டம் ?''

தேவன் நமது பாபேல்களை உடைத்தெறிந்து உலகிற்குள், மக்களுக்குள், பாவிகளுக்குள் நம்மைச் சிதறடிப்பாராக !

# 10

# வளர்ந்து குழந்தையாக வாஞ்சிக்கிறேன்!

கிறிஸ்துவிற்குள் குழந்தையாய் இறையரசிற்குள் பிறந்த அந்த நாளை நினைக்கும்போது மெய்சிலிர்க்கிறது. உள்ளம் துள்ளும் களிப்பான அந்நாட்கள், என் வாழ்வின் பொன்னான நாட்கள். உலகமே வண்ண வண்ணமாய்த் தோன்றியது. பிறப்பு மகிமையானால் வளர்ச்சி மாட்சிமையாயிருக்குமென்று எண்ணினேன். உண்மை; ஆனால் ஏதோ ஒன்று அக்குழந்தைப் பருவத்தைப் பின்னிட்டு நோக்கி பெருமூச்சு விடச்செய்கிறது. இனம்புரியா இன்பமான அந்நாட்களை நோக்கி நடைபோட எவ்வளவாய் ஏங்குகிறேன். மெய்யாகவே, குழந்தையாய் வளர வாஞ்சிக்கிறேன்.

ஆவிக்குரிய உலகம் இவ்வளவு சிக்கலானது என்று நான் கனவிலும் எண்ணியதில்லை. தவழும் குழந்தையைப்போல நாலாபக்கங்களிலும் கண்மூடித்தனமாய்ச் சென்று என்னையே காயப்படுத்திக் கொண்டதால் அதின் சிக்கல்களை அறிந்து கொண்டேன்.

பள்ளியிலிருந்து திரும்பியதும் மேல்மாடிக்கு ஏறிச்சென்று என் தேவனுக்குப் பாடல்கள் பாடிய அந்நாட்களை நினைவுகூருகிறேன். வேதத்தை வாசித்தபின் நாட்குறிப்பேட்டை எடுத்து அன்றைய என் பாவங்களை ஒன்றன்பின் ஒன்றாய் எழுதுவேன். எவ்வளவாய்த் துக்கப்படுகிறேன், வெட்கப்படுகிறேனென்று ஆண்டவரிடம் சொல்லுவேன். மன்னிப்புக்கோரி மறுபடியும் செய்யாமலிருப்பேன், அவரைப் பிரியப்படுத்த முழுமுயற்சி எடுப்பேன் என்று உறுதி கூறுவேன். ஒவ்வொன்றாக அறிக்கையிட்டு அடித்துவிடுவேன். இன்றோ இருதய ஆராய்ச்சி கருத்தாழமான கட்டாயமாய்த் தோன்றவில்லை. என் பாவங்களை எழுதுவது சிறுபிள்ளைத்தனமாய்த் தோன்றுகிறது.' இயேசு கிறிஸ்துவின் இரத்தம் உடனுக்குடன் உன்னைச் சுத்தம் செய்துவிடுகிறது. கவலைப்படாதே' என்று ஏதோவொன்று சொல்லிக்கொண்டே இருக்கிறது. எங்கேதான் கற்றேனோ அதை ? நாளின் இறுதியில் ஆண்டவர் பாதம் அமரும்போது பாவங்களுக்காய் அனலான கண்ணீர் சிந்தி ஆண்டுகள்



ஆகின்றன. சிறு வியாதியும் என்னையே ஆராயும் விளக்காய்ப் பயன்பட்டது. இன்றோ என்ன சோதனை வந்தாலும் யோபுவைப்போல சோதிக்கப்படுகிறேன் என்னும் போர்வையைப் போர்த்திக்கொண்டு நீதிமானாய் நடமாடுகிறேன்.

ஆண்டவருக்காய் அதிகமாய் உழைப்பதால் அவரோடு இதய உறவாடலுக்கு நேரமில்லாற் போனாலும் அவர் நிச்சயமாய்ப் புரிந்து கொள்வார் என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆண்டவரை ஒரு நிமிடமும் காத்திருக்க வைக்கக் கூடாதென்று மணியைப் பார்த்து ஜெப வேளைக்காய் மேல்மாடிக்குச் சிட்டாய்ப் பறந்த நாட்கள் விட்டே போய்விட்டன. வருவோர், போவோர், தொலைபேசி, கடிதங்கள், காரியங்கள், கடமைகள் யாவும் ''ஆண்டவருக்குத் தெரியாதா என்ன ? ஒருவேளை ஜெபிக்காவிட்டால் ஏன் குற்றவுணர்வு அடைகிறாய் ?'' என்று என்னைக் குற்றம் கண்டு பிடிக்கின்றன.

சிறு குற்றச்சாட்டோ, புறங்கூறுதலோ செவிக்கெட்டினவுடன் கதவை மூடி, அழுது புரண்டு, ''எங்கு தவறினேன், என்ன தவறினேன் ? சொல்லும்'' என்று ஆண்டவரை அலட்டிய நாட்களை மறுபடியும் காண்பேனா ? இன்றோ என்னைக் குற்றஞ்சாட்டுகிறவர்களைக் குற்றஞ்சாட்டவும், புறங்கூறுகிறவர்களைப் புறங்கூறவும் பழகிக் கொண்டேன். குற்றச்சாட்டுகளும் புறங்கூறல்களும் தங்கள் சுத்திகரிக்கும் பணியை என்னில் இழந்துவிட்டன.

குழந்தையாய் இருந்தபோது ஜீவவார்த்தை என்று வேதத்தைப் பொக்கிஷமாய்க் கையாண்டேன். எள்ளளவும் சலிக்காமல் ஏடுகளைப் புரட்டிப் புரட்டி உள்ள சத்தியங்களை மெள்ளக் கற்றுக் கொண்டேன். பட்டுப்பூச்சிப் புழுப்போல அகோரப் பசியோடும் தாகத்தோடும் அவசரமாய் வசனங்களை உட்கொண்ட அழகிய நாட்கள் எங்கே ? பரிசுத்தவான்களின் வரலாறுகளும் வசன விளக்கப் புத்தகங்களும் என்னை மயக்கினவே! தின்னத் தின்ன தெவிட்டவில்லையே. இன்றோ சுயதிருப்தியாய் சாவதானமாய் இருப்பதேனோ ? போதும் என்ற மனம் ஒழிவதாக. **“எனக்கு ஒரு குறைவுமில்லை”** என்கிற வேகத்தை விட்டு **“எனக்குஒன்றுமில்லையே”** என்கிற வேதனைக்கு மனந்திரும்புவேனோ ?

வேதம் பழகின பக்கங்களாகி புதுமையை இழந்துவிட்டது (அல்லது நான் இழந்துவிட்டேனோ ?). பிரசங்கக் குறிப்புகள் சேர்ப்பதிலேயே பித்தாகிவிட்டேன். மனச்சாட்சி படமெடுத்து ஆடும்பொழுது ஓர் மகுடி மயக்கிவிடுகிறது: “தியானிப்பதற்கென்று தனி நேரம் வேண்டுமா? செய்திக்கோ கட்டுரைக்கோ ஆயத்தம் செய்யும்போது வேதத்தை வாசிக்கவில்லையா ? அது வேறு தியானம் வேறா ?''

இறையரசிற்காய் எத்தனை ஆத்துமாக்கள் ஒவ்வொன்றாய் ஒன்வொன்றாய் ஆதாயப்படுத்தினேன்! இன்று எதிர்பார்த்த கூட்டம் வராவிட்டால் ஏமாற்றமடைகிறேன். ஓர் ஆத்துமாவோடு பேசுவது நேரத்தை வீணாக்குவதாய்த் தெரிகிறது. ஓர் ஆத்துமா மனந்திரும்பும் போது பரலோகம் மகிழும் தரிசனத்தை இழந்துவிட்டேனா? இந்த உலகத்தின் விலையைக் காட்டிலும் ஓர் ஆத்துமாவின் விலை அதிகம் என்பதை மறந்துவிட்டேனா? மாளும் ஆத்துமாக்களின் செய்திகள் என்னைக் கலங்கடித்தனவே. இன்று அவை யெல்லாம் உயிரற்ற புள்ளிகளும், வரைபடங்களும், வெறும் கணக்கீடு களுமாகிவிட்டனவே. ஆயிரம் ஜெபங்கள் ஏறெடுத்தாலும் அழிந்த ஆத்தும உணர்வுகளை அடைய முடியுமா?

தொலைந்த ஓர் ஆத்துமா கண்ணில் பட்டவுடனே துடுதுடுப்போடு நம்பிக்கையின் செய்தியைப் படபடத்து ஆசீர்வாதங்களின் ஆசீர்வாதமாகிய மனந்திரும்புதலின் கண்ணீரைக் கண்ட நாட்கள் மறந்துவிட்டனவே. இப்பொழுதோ கண்ணியமாய் நடக்கக் கற்றுக்கொண்டேன். நண்பர் முன்னிலையில் என் முகத்தில் கரி பூசிக்கொள்ளப் பயப்படுகிறேன். என் மேலேயே கவனமாயிருக்கிறேன். தத்துவப் பிழையின்றி கேட்போர் விரும்பும்படி சுவிசேஷத்தைப் பகிரப் பயின்றுவிட்டேன். யாரையும் புண்படுத்தாமல் கவனமாய்ப் பிரசங்கிப்பதினால் பாடுகள் பழைய அனுபவமாகிவிட்டன. அவருக்காய் சந்தோஷமாய்ப் பாடனுபவித்த நாட்களை எங்கே தேடுவேன்? இப்பொழுது துன்பம் வரின் என் முறைகளை ஆராய்ந்து என் செய்தியைச் சரிசெய்து கொள்கிறேன். ஐயா, ஆண்டவனே, பழைய எளிய சுவிசேஷம் கிறிஸ்தவருக்கும் அந்நியருக்கும், ஞானிகளுக்கும் மூடருக்கும், வாலிப ருக்கும் வயோதிபருக்கும், பட்டணத்தாருக்கும் பாட்டாளிகளுக்கும், பணக்காரருக்கும் பஞ்சப்பட்டவருக்கும் ஒன்றேதான் என்பதை மறுபடியும் ஒருவிசை விசுவாசிக்கக் கிருபையளித்துவிடும். எனது மூட ஞானம் உமது மாட்சிமையான செய்தியை மாற்றிவிட வேண்டாமையா!

என் தேவனைவிட என் தத்துவத்தை எவ்வளவு நேசிக்கிறேன்! மனந்திரும்பினோரை மனந்திருப்ப எவ்வளவு முயலுகிறேன். தேவனே, என் பழைய நிலைக்கு நான் மனந்திரும்ப வேண்டுமே. என் தத்துவத்தைத் தவிடுபொடியாக்கி நான் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவளாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ளச் செய்வீராக.

ஆலோசனைகளையும் பிரசங்கங்களையும் செய்திகளையும் கட்டுரை களையும் ஆவலாய் நான் உட்கொண்ட என் அழகிய குழந்தைப் பருவமே!



உதவிக்காகவும் ஊக்கத்திற்காகவும் எவரையும் நான் பற்றிக்கொண்ட காலம் காற்றோடு போய்விட்டது. இன்று ஆலோசனைகளை அற்பமாய் எண்ணவும், செய்திகளைச் சந்தேகிக்கவும், பிரசங்கங்களைப் பிய்த்துப் பார்க்கவும் ஒரு துர்க்குணம் எனக்குள் திருட்டளவாய் நுழைந்துவிட்டது. அபிஷேகிக்கப்பட்ட கட்டுரைகள் ஒப்பிட்டு எடைபோடும் காரியங்களாகிவிட்டன. பிறரைக் குறைவாய் எண்ணும் குணம் சுயத்தின் ஓர் இருண்ட மூலையில் ஒளித்துக் கொண்டிருக்கிறது. தேவமனிதரை காப்பியடித்தக் காலம் மாறி இன்று காப்பியடிப்பதைக் கீழ்த்தரமாய் எண்ணியதால் வளர்ச்சியிலும் குன்றிவிட்டேன். பிரதான அப்போஸ்தலன் பவுலே "என்னைப் பின்பற்றுங்கள்" என்று சொன்னதை மறந்து போனேனா? தோல்விகள் ஆவிக்குரிய தசைகளுக்கு சத்தூட்டின சவால்களாயிருந்தன. இன்றோ தோல்விகளை ஒத்துக்கொள்ள சத்தின்றி அவை வெற்றியாய் வெளியே தோன்ற சாயமடித்து விடுகிறேன். எவ்வளவு சுலபமாய் என் தவறான கருத்துக்களை மாற்றிக்கொண்டேன். இப்பொழுதோ இதுவரை தவறாயிருந்தேன் என்று தலைகுனிய என் அந்தஸ்து தடை செய்கிறது. என்னை ஒரு பொருட்டாய் எண்ணாத நாட்கள் மெள்ள நழுவிப்போய், "நானும் ஒருத்தி" என்கிற அலங்கார மேடையில் என்னைப் பிச்சைக்காரியாய் நிறுத்திவிட்டனவே!

ஓய்வுநாள் பள்ளி எடுக்கவோ சாட்சியைப் பகிர்ந்துகொள்ளவோ முதன் முறையாய் அழைக்கப் பட்டபோது இருதயங்களோடு இடைபட ஆண்டவரையே முற்றிலும் சார்ந்தவளாய் எவ்வளவு பயத்தோடும் நடுக்கத்தோடும் சென்றேன். இப்பொழுதோ என்னையே அறியாமல் எனக்குள் முளைத்தெழும்பி நிற்கும் சுயநம்பிக்கையை வெட்டியெறிய வழியறியாமல் திகைக்கிறேன். இதயங்களை அசைக்க மனோதத்துவத்தையும், பிரசங்கிக்கும் திறமைகளையும் ஏன்தான் கற்றுக் கொண்டேனோ? சத்தத்தை உயர்த்திப் பேசிவிட்டால் ஆவியானவர் அசைவாடி விடுவாரென எதிர்பார்ப்பதேனோ? தேவன் என்னை என்னச் சொல்ல எதிர்பார்க்கிறாரோ அதைச் சொல்வதை விட்டு மக்கள் எதிர்பார்ப்பதையே பேசுகிறேன். கற்றவைகளைக் கழுவிவிடும் வழியிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

தேவனின் கிரியைகள் தவறாமல் நடக்கும் என்று நினைத்து விடுகிறேன். குழந்தையாய் ஜெபத்தில் எவ்வளவு போராடினேன். இப்பொழுதோ பேசும் பேச்சிலேயே மக்கள் குற்றவுணர்வடைந்து இரட்சிக்கப்பட எதிர்பார்க்கிறேன். மனந்திரும்பாத பட்சத்தில் அவர்கள் கடின இதயமுள்ளவரென்று சுலபமாய்க் கைகழுவி விடுகிறேன். என்னுடைய பெருமையையும், சுயநம்பிக்கையையும் உடைத்து அவராலேயன்றி என்னால் எதுவும், எங்கும், எப்பொழுதும் ஒன்றுமே செய்துவிடமுடியாது என்று போதிக்க தேவன் அனுமதித்த அவமானங் களுக்காக அவரைத் துதிக்கிறேன்.

புகழ்மாலையினால் பூரிப்படைந்து தடுமாறிச்செய்த தவறுகளுக்காக நன்றி தேவா. இப்பொழுது பாராட்டுகள் பெரும் எச்சரிப்பாகிவிட்டன. என் விழத்தகு மனிதத் தன்மையை விளக்கிக் கொண்டேயிருக்கும் என் தோல்விகளுக்காக நன்றி. உமது ஞானத்திற்காய் விண்ணப்பிக்க என் முழங்காலை முடக்கிய என் மூடச் செயல்களுக்காக நன்றி. ஆம், ஆண்டவரே, நான் என் கீழ்த்தரமான உள்ளான மனிதனின் கரங்களில் விழுவதைக் காட்டிலும் உமது கரங்களில் விழுவது எனக்கு நலமாயிருக்குமே. உமது வல்லமை வெளிப்பட பயத்தோடும் நடுக்கத்தோடும் உம்முன் என்னைத் தாழ்த்தும்படி நான் ஒரு குழந்தையாய் வளர்ந்துவிட எனக்குக் கிருபையருளும்.

என்றோ ஒருநாள், தேவப்பிள்ளைகள் யாரைப் பார்த்தாலும் புன்னகை பூத்து உள்ளம் திறந்து பேசினேன். இன்றோ விசுவாசிகளை என்னால் நம்ப முடியவில்லையே. ஓரிருமுறை சூடு வாங்கினதாலேயோ? விசுவாசிகளை ஏன் சந்தேகக் கண்ணோடு நோக்குகிறேன்? பிறரை வெளிப்படையாய்ப் பாராட்டுவதை நிறுத்திவிட்டேன். பாராட்டிவிட்டால் எங்கே அவர்கள் பெருமைப்பட்டுவிடுவார்களோ என்று எண்ணுகிறேன். வேதத்திற்கு இது எத்தனைப் புறம்பானது. தங்கள் ஆதாயத்திற்காய் என்னைப் பயன்படுத்திக் கொள்வார்களே என்று அஞ்சி எனக்கு ஆவிக்குரிய உதவிசெய்தவர் களைக்கூட வெளிப்படையாய் கனம் பண்ணத் தயங்குகிறேன். ஆனால் குழந்தை தன்னை விட்டுக் கொடுப்பதுபோல விட்டுக் கொடுக்க விரும்புகிறேன். கொரிந்தியரின் அன்பு அத்தியாயத்தைப் புதிய வெளிச்சத்தில் பரந்த மனதுடன் புரிந்துகொள்ள எத்தனையாய் வாஞ்சிக்கிறேன்! ஆண்டவரே, எல்லா விசுவாசிகளையும் என்னைப் போல குறைவுள்ளவர் களாகவே ஏற்றுக்கொள்ளக் கிருபை தாரும்.

புதிதாய்ப் பிறந்த குழந்தையின் இயற்கை சுபாவம் எங்கே? என் நிலையும் வேலையும் எனக்கு ஒரு சாயலை அணிவித்ததால் அதற்கேற்றவாறு நடந்துகொள்ள வற்புறுத்தப்படுகிறேன். அந்தஸ்தென்னும் முகமூடியைக் கிழித்தெறிந்துவிட்டு, பதிமூன்று வயதின் இயற்கையோடு துள்ளிக் குதிக்கவும், பாடவும், சிரிக்கவும், சாட்சி பகரவும் ஆசைப்படுகிறேன். என் பதவிக்கேற்றவாறு நான் ஏன் நடந்து கொள்ள வேண்டும்? இப்போது நான் முன்னிருந்த எளிமையான நபரல்ல. வார்த்தைகளைக் ''கவனமாய்'' பேசக் கற்றுக் கொண்டிருக்கிறேன். எவ்வளவு தந்திரமாய் மாறிவிட்டேன். 'உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்.' என்னும் வாக்கியம் என் வேதத்தில் மலைப்பிரசங்கத்திலிருந்து அடிக்கப்பட்டு விட்டது. என் மனது கிறிஸ்துவைப் பற்றிய எளிமையிலிருந்து கெடுக்கப் பட்டுவிட்டதோ?



''நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகவேண்டும்'' என்ற இயேசுவின் வார்த்தைகளை இப்போது நன்றாய்ப் புரிந்து கொள்ளுகிறேன் (மத் 18:3). ஆம், சீடர்கள் குழந்தைகளாய் மனந்திரும்ப ஓர் அழைப்பு அது!

கர்த்தாவே, இந்தத் தோல்விகண்ட வெற்றியிலிருந்து, உயரத்தள்ளும் சரிவிலிருந்து, பிஞ்சிலே பழுக்கும் பழமாவதிலிருந்து தேறாத முதிர்ச்சி யிலிருந்து, மேன்மைக்கு இறங்கும் படிகளிலிருந்து, அறிவு பெருத்த பின்மாற்றத்திலிருந்து என்னைத் தூக்கி எடுப்பீராக!

கண்ணீரே, ஏன் எனக்கு ஒளித்துக் கொள்ளுகிறாய்? கன்னங்களில் வழிந்து என்னை உடைத்து, நொறுக்கி, உருவாக்கி என் குழந்தைப் பருவத்திற்குக் கரைத்துவிடத் ததும்பிவா, கனிவான கண்ணீரே!

## ஆசிரியரது பிற நூல்கள்—

- ❒ அவள் தீர்மானங்கள்
- ❒ இயேசுவின் பின்னே...
- ❒ கண்ணீர் துடைப்போர் யார் ?
- ❒ உலகில் உத்தமி
- ❒ குடும்பமே குடும்பம்
- ❒ குதூகலக் கிறிஸ்தவம்
- ❒ சாத்தானுக்கு டாடா
- ❒ தெபொராளே, விழித்தெழு!
- ❒ தேவனே, நான் உமதண்டையில் ...
- ❒ பசங்க ... பொண்ணுங்க ...
- ❒ பறக்கும் பாவையர்
- ❒ 12 பொன் மாதங்கள்
- ❒ மண்ணிலே வெண்ணிலா
- ❒ முன்னேறும் கிறிஸ்தவன்
- ❒ வயது பதினாறிருக்கும்
- ❒ வாலிப உலகம்

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.

இப்புத்தகங்கள் ஆங்கிலத்திலும் பல இந்திய மொழிகளிலும் உண்டு.

**Blessing Literature Centre**
**21/11 West Coovam Road**
**Chintadripet, Chennai 600 002, India**
*Tel: 91 044 28450411*
*<blc@bym-india.org>*



*கிறிஸ்தவ வாழ்வில் மறுமலர்ச்சி பெற*
*இன்றே வாசியுங்கள்...*

ஆசீர்வாதம்

எழுப்புதலுக்கும் நற்செய்திப் பணிக்கும்
அர்ப்பணிக்கப்பட்ட பத்திரிகை!

உங்களை ஆசீர்வதித்து,
உங்களை உங்கள் குடும்பத்திற்கும், சபைக்கும்,
நண்பருக்கும் ஆசீர்வாதமாக்கும் பத்திரிகை!

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம் ஆகிய மொழிகளில் வெளிவருகிறது.

கீழ்க்கண்ட முகவரிக்கு ரூ. 1000/– செலுத்தி *ஆசீர்வாதம்* பத்திரிகைக்கு ஆயுள் சந்தாதாரரானால், பணம் பெற்றுக் கொண்ட நாள் முதல் நாங்கள் வெளியிடும் பத்திரிகையையும், புத்தகங்கள் யாவற்றையும் பதினைந்து ஆண்டுகட்கு இலவசமாக அனுப்பிவைப்போம்.

ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–

சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

Blessing Youth Mission
8 Church Colony
Vellore 632 006
*<blc@bym-india.org>*

# ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

***எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு***
***1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத,***
***ஒரு திருப்பணி***

❒

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்;

❒

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்;

❒

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

❒

300க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒரிசா, கர்நாடகம்,
குஜராத், கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம்,
மேற்கு வங்கம், தமிழகம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களிலுள்ள
கவனிப்பாரற்ற கிராமங்களிலும் ஆதிவாசிப் பகுதிகளிலும்
சபைகள் நிறுவுதல்.

❒

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் *“ஆசீர்வாதம்”* எனும் பத்திரிகை, புத்தகங்கள்
மற்றும் ஒலி-ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

❒

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு கற்பித்தல்
மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!*

**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
**சர்ச் காலனி, வேலூர் 632 006**
**தொலைபேசி: 0416-2242943, 2248943**
<hq@bym-india.org>
www.bym-india.org